Annual Subscription Rs. 6 | 21st February 1937. | Price 2 As.

சுதேசமித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No. 3

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

திருக்கடையூர் கோவில்.

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சிவி.

பாடால் பாம்

ஏஜெண்டுகள். தஞ்சை திருச்சி மதுரை சேலம் ஈரோடு





அடைவதற்கு இயற்கையான

விருப்பம்

வுட்வர்ட்ஸ்

கிரைப்வாடர்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

ஸ்பெயின், தால்தியோவிலுள்ள ஸெயின்ட் ஜான் மாதாகோவிலின் உட்புறத் தோற்றம். இது ஸ்பானியக் கலகத்தில் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது. ஸ்பெயினிலுள்ள புராதன மாதாகோவில்களில் இது ஒன்ருகும். இது மிகுந்த சித்திர வேலைப்பாடமைந்தது.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

டாக்டர்

எஸ். சத்தியநாதன்

(1861—1906)

(கே. எஸ். ஆர்.)

"சுதேச கிறிஸ்துவர்கள் பூஷணம்"

இந்தியக் கிறிஸ்துவர் தொகுதியில் காலஞ்சென்ற டாக்டர் எஸ். சத்தியநாதன் பிரதான ஸ்தானம் வஹித்து வந்தவர். இவர் கல்வியுலகிலும் மிகப் பிரசித்தமாக விளங்கினவர். மாணவர்களின் உபயோகத்திற்காகப் பலபுத்தகங்களையும் இவர் எழுதி வைத்தார். சிறு பிராயத்திலேயே மேனாடுகளுக்குச் சென்று அதனால் தமது அறிவையும் அனுபவ ஞானத்தையும் இவர் வெகு சீக்கிரத்திலேயே விஸ்தரித்துக்கொண்டு, அவற்றைப் பிறருக்கும் பயன்படுமாறு உபயோகித்து வந்தார். "டாக்டர் சத்தியநாதன் இந்துகிறிஸ்தவர் கோஷ்டியில் சிறந்த அங்கத்தினராக வீற்றிருந்தவர். நமது சுதேசக் கிறிஸ்துவ ஸஹாக்களுள் பூஷணமாகப் பிரகாசித்தவர். இவருடைய நெருங்கிய சம்பந்தம் இராமல் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்குரிய மார்க்கங்கள் எப்போதும் பின்பற்றப்பட்டது கிடையாது. தமீது இளம் பிராயம் முதற்கொண்டே இவர் தமது வாழ்க்கையை ஒரு சிறந்த கடமையெனக் கருதி, ஒவ்வொரு நிமிஷத்தையும் நமது நன்மைக்காகவே உயர்வழியில் பயன்படுத்திக்கொண்டு வந்தவர். தாம் செய்தவற்றிலும் சொன்னவற்றிலும் இவர் காட்டி வந்த அதி ஆச்சரியமான சிரத்தா பக்தியானது இவரது வாழ்க்கையின் முக்கியாம்சமாகும். போதகாசிரியராகவிருக்கையில் மந்த புத்தியையுடைய மாணவனதுஉள்ளத்திலும் இவர் ஒரு புத்துணர்ச்சியை உயிர்ப்பித்து வந்தார்; உத்ஸாஹமளிக்க வல்ல தமது ஊக்கத்தின் மஹிமையால்,தமது வகுப்பை அவர் வசியப்படுத்தி வந்தார். உண்மையிலேயே இவர் தமது சிஷ்யர்களிடம் விசுவாசம் கொண்டு வந்தார்: சிஷ்யர்களும் உண்மையாகவே இவரை நேசித்து வந்தனர். அந்திய கால பரியந்தம் இவர் வித்தையை மேன்மேலும் ஸ்வீகரிப்பதிலேயே பூரண பிரியமும் த்ருப்தியும் கொண்டு வாழ்ந்து வந்தார். இவரது இனிய போக்கும் அதன் அதிசாதாரண பாவமும் வித்யா ப்ராவீண்யம் அடைவதில் இவருக்கு மிக்கவும் உதவின. எப்போதும் இவர் எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் அவசியம் எனப் போதித்து வந்ததுடன் தாமும் அதற்கு த்ருஷ்டாந்தமாக ஜீவித்து வந்தார்." இத்தகைய விதமாக இவரைப்பற்றி இத்தென்னிந்தியாவின் சிறந்த பத்திரிகையானது ஒரு சமயம் இவரைப் பற்றித் தலையங்கத்தில் எழுதியது. இவ்வார்த்தைகள் இப்பெரியாரது குணதிசயங்களைச் சுருக்கி வர்ணிக்கின்றன என்று நாம் கொள்ள வேண்டும். இவ்வார்த்தைகள் மூலம் இப்பெரியாருடைய மாசிலா மதிப்பை நாம் சுலபமாக அறியலாம்.

டாக்டர் ஸாமுவேல் சத்தியநாதன் 1861-ம் வருஷம் நவம்பர்மீ 27-ம் தேதியன்று பிறந்தார். இவரது பிதா ரெவரெண்டு டபிள்யூ. டி. சத்தியநாதன் என்பவர். அவர் பிஷப் ஜெல் என்பாருக்குக் கௌரவ சுதேசி "சாப்ளின்" ஆகவிருந்தவர். தவிரவும்

அவர் இத்தென்னிந்தியாவில் கிறிஸ்துவப் பிரசாரத்திற்கு முக்கியஸ்தராக விளங்கியவர். இவரது தாயாரான மிஸஸ் அன்னு சத்தியநாதன் என்பார் 'சர்ச் ஆப் இங்கிலாந்து' பிரிவைச் சேர்ந்த முதலாவது இந்தியப் பாதிரியான ரெவரெண்டு ஜான் தேவஸஹாயம் என்பவருடைய புத்திரியாவார். ஆகையினால் பிறவியிலிருந்தே இவர் மதப்பற்று மிகுந்த கிறிஸ்துவர்களால் வளர்க்கப்பட்டு வந்தார்.

வித்தியாப்பியாஸம்

இவருடைய வித்தியாப்யாஸத்தில் இவரது தகப்பனார் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார். ஆகையினால் இவரது ஆரம்ப வித்யாப்யாஸம் வெப்பேரியிலுள்ள எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் என்ற கிறிஸ்துவப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. இப்பள்ளிக்கூடத்திலிருந்துஇவர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முதலாவது வகுப்பில் சிறப்புடன் தேறினார். 1878-ல் இவரது தகப்பனார் "சர்ச் மிஷனரி சொஸைடி" யாரால் இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்டார். அச்சமயம் இவர் தமது தகப்பனாருடனும் தாயாருடனும் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார். (அப்போது இவருக்கு வயது பதினேழு). இங்கிலாந்தில் இவர் நான்கு வருஷ காலம் தங்கிப்படித்தார். அப்போது இவர் மிகப் பிரசித்தி வாய்ந்த கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் ஒரு மாணாக்கராக விளங்கினார். அச்சர்வகலாசாலை சம்பந்தமான கார்ப்பஸ் கிரிஸ்டி காலேஜின் "ஸ்தாபக ஸ்காலர்ஷிப்" இவருக்குக் கொடுக்கப்பட்டது. கணிதசாஸ்திர "ட்ரைபாஸ்" என்ற பரீக்ஷையில் இவர் சிறப்புடன் தேறினார். உடனே பின்பு "தத்துவ சாஸ்திர ட்ரைபாஸ்" பரீக்ஷைக்காகவும் இவர் படித்தார். இப்பரீக்ஷையில் தேறிய இவர் தம்மைப் பின்பு, "எல். எல். பி." பட்டத்திற்கும் அருகராக்கிக்கொண்டார். இவை தவிர இவர் சர்வகலாசாலை சம்பந்தமான அநேகம் விஷயங்களிலும் சிரத்தையுடன் ஈடுபட்டார். மேநாட்டில் இவ்வாறு வாழ்ந்து வந்த விதத்தைப் பற்றி இவர் பின்பு ஒரு புத்தகம் எழுதினார். இங்கிலாந்தில் மாணவராகவிருக்கும்போதே இவர் "நேஷனல் இந்தியன் அஸோஸியேஷன்" பத்திரிகையில் அச்சங்கத்தைச் சார்ந்த ஐரோப்பிய நண்பர்களை உத்தேசித்து, இந்திய தத்துவ சாஸ்திரம், நாகரீகம் முதலிய அரிய விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் எழுதிவந்தார். இதன் காரணமாக இவரது பெயர் பிரசித்தமாகப் பரவலாயிற்று.

உத்தியோகம்

இந்தியா திரும்பியவுடன் உதகமண்டலத்திலிருக்கும் "ப்ரிக்ஸ் ஞாபகார்த்த பள்ளிக்கூட"த்தின் தலைமை உபாத்தியாயராக இவர் நியமிக்கப்பட்டார். 1884-ம் வருஷம் ஜூலை மாதம் இவர் ராஜமஹேந்திரபுரம் கலாசாலையின் இரண்டாவது உதவி ஆசிரியராகச் சென்னை அரசாங்கக் கல்வி இலாகாவில் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டார். டிசம்பர் மாதம் கடலூர் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயராக இவர் நியமிக்கப்பட்டு, கும்பகோணம் காலேஜ் போதகாசிரியராக 1888-ம் வருஷாரம்பம்வரையில் இருந்தார். பின்பு கல்வி இலாகா அதிபராகவிருந்த மிஸ்டர் எச். பி. கிரிக் என்பாருக்கு உதவியாளராக இவர் நியமிக்கப்பட்டார். 1890-ம் வருஷம் ஜனவரி மாதம் இவர் சென்னை பிரஸிடென்சி காலேஜ் தத்துவ சாஸ்திரப் பிரதான ஆசிரியராக எடுத்துக்கொள்ளப்பட்டார். டாக்டர் டங்கன் கல்வி இலாகா டைரக்டராக வந்தவுடன் இவருக்கு இப்பதவி காயமாக்கப்பட்டது. 1891-ம் வருஷாரம்பம் முதல் மேமாதம் வரையில், இவர் வித்யா ஸ்தாபனங்களுக்கு ஸஹாயம் செய்வதைப்பற்றித் திட்டம், அவைகளின் பரிசோதக திட்டம் முதலியவற்றை நிர்ணயித்து வைப்பதற்காக அரசாங்கத்தாரால் உத்திரவிடப்பட்டார்.

1897-ல் இவர் மாகாண கல்வி சர்விஸ் அங்கத்தினர்களுள் ஒருவராகக் கவர்ன்மெண்டாரால் பொறுக்கியெடுத்துக்கொள்ளப்பட்டார். தமது மரண காலத்தில் இவர் இந்த சர்விஸில் முதலாவது வகுப்பில் இரண்டாவது ஸ்தானத்தை வஹித்து வந்தார். நடுவே, 1904-ல் இவர் கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலாகவும் வேலை பார்த்தார்; பின்பு வித்யா இலாகா டிபுடி டைரக்டராகவும் இவர் சிறிது காலம் பதவி வஹித்தார்.

1897-ல் இவர் மீண்டும் ஒரு முறை இங்கிலாந்து சென்று "எல். எல். எம்."என்ற அரிய பட்டத்தையும் ஸ்வீகரித்துக்கொண்டார். "இந்தியாவின் நிலவரித்திட்டங்கள்" எனும் விஷயத்தைப்பற்றி இவர் எழுதிய சிறந்த வியாசத்தின் காரணமாக, 1902-ல் இவருக்குக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை அதிகாரிகள், அரிதில் கிடைக்கக்கூடாத "டாக்டர் அப் லாஸ்" என்ற உயர்ந்த பிருதுவினால் இவரை மிகவும் கௌரவித்தனர்.

எழுதிய நூல்கள்

டாக்டர் சத்தியநாதனின் வாழ்க்கையில், வித்தியாதிகாரியாகவிருந்ததுடன் உயர்ந்த நூல்களை எழுதிய பெருமையும் காணப்படும். இவர் ஆரம்ப காலத்திலிருந்தே தமது காலத்தை வீணாகக் கழிப்பதில்லை. 1882-ம் வருஷத்தில் "சிக்கனம்" "பணம் என்றால் என்ன?" "கூலியும் முதலும்," "வரி விகிதம்" "ஜனத்தொகை யபிவிருத்தி" "ஊதியம்," "நாணயச் செலாவணிப் பிரச்னை" "வர்த்தகம்," "இந்தியாவின் பொருளாதார அவசியங்கள்" என்பதுபோன்ற முக்கிய விஷயங்களைப்பற்றிப் பலருக்கும் எளிதில் புலப்படுமான ரீதியல் சிறந்த வியாஸங்களை இவர் உலகிற்கு உதவிவந்தார். இவைமூலம் இத்தேச ஜனங்கள் இத்தகைய முக்கிய பிரச்னைகளைப்பற்றிச் சிந்திக்குமாறு வற்புறுத்தவேண்டும் என்பதே இவரது நோக்கமாக அமைந்திருந்தது. "மதராஸ் டைம்ஸ்" என்ற பத்திரிகை அச்சமயம் இவருடைய இம்முயற்சிகளை மிகப் பாராட்டி எழுதியது. இவ்விதமாகத் தமது திறமையை முதன் முதல் உபயோகித்த பெருமை இவரைச் சார்ந்ததாகும்!

"ஆங்கில சர்வகலாசாலையில் நான்கு வருஷ காலம்" என்ற மகுடத்துடன் இவர் எழுதிய புத்தகமானது என்

[redacted]

கும் குதூஹலத்துடன் வரவேற்கப்பட்டது. "ஆங்கில சர்வகலாசாலைகளைப்பற்றித் தமது தேசத்தினர்களுக்கு விஷயங்களைத் தெரிவிப்பதும், அவர்களுக்கு இங்கிலாந்தில் கிட்டும் போதனையின் மேன்மையைப்பற்றிக் கோஷிக்க வேண்டும் என்பதும்தான் இப்புத்தகத்தின் பிரதான நோக்கங்களாகும். பதின்மூன்று அத்தியாயங்களில் நான்கு வருஷ சம்பவங்களையும் குறிப்பிட்டு, சர்வகலாசாலை வாழ்க்கையின் நுட்பங்களைத் திறமையுடன் விஸ்தரித்துள்ளார். ஆங்கிலேயர்களிடமும் அவர்களைப்பற்றின வஸ்துக்களிடமும் பரிவு மிகக் காட்டப்பட்டுள்ளது. ஸ்ரீமான் சத்தியநாதன் ஆங்கில சர்வகலாசாலையில் நான்கு வருஷங்களைக் கழிப்பதால் ஏற்படும் நன்மைகளுக்கு நிதர்சனமாக விளங்குகிறார் என்பதை இப்புத்தகத்தின் மூலம் ஸ்பஷ்டமாக அறியலாம்" என்று 'மதராஸ் மெயில்' பத்திரிகை எழுதியது தவிர, "இந்தியன் மிர்ரர்" "ஹிந்து" "ஜர்னல் அப் எஜுகேஷன்" போன்ற பத்திரிகைகளும் இவரது புத்தகத்தைப் பஹுமானித்தன.

"இங்கிலாந்தும் இந்தியாவும்" என்ற புத்தகமும் இவரால் எழுதப்பட்டது. இப்புத்தகத்திலும் இவர் தமது மேனாட்டு அனுபவங்களைத் தெளிவாக விவரித்திருக்கிறார். இப்புத்தகத்தைப் படிப்பவர்கள் தாங்களும் மேனாடு செல்ல மிகவும் விரும்புவார்கள் என்று "பம்பாய் கார்டியன்" பத்திரிகை அபிப்பிராயத்தைத் தெரிவித்தது. தவிரவும் மேனாடு செல்ல இயலாதவர்களுக்கும் இப்புத்தகம் மிக உபயோகமாகவிருக்க வல்லது. தாம் கண்ட விஷயங்களைப் பிரயோஜனகரமான விதத்தில் இவர் விவரித்திருப்பது போற்றத்தக்கதாகும். "கிறிஸ்துவர் கலாசாலைப்பத்திரிகை" இப்புத்தகத்தை விமரிசனம் செய்கையில், இப்புத்தகத்தில் காணப்படும் பல விஷயங்கள் ஐரோப்பியர்களாலும் ஆழ்ந்து சிந்தனை புரியத்தக்கவை எனக் குறிப்பிட்டது.

சென்னைராஜதானியில் வித்தியாபிவிருத்தி

இவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானது "சென்னை ராஜதானியில் வித்யாபிவிருத்தியின் சரித்திரம்" என்பதாகும். இப்புத்தகம் 1894-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் நான்கு பாகங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகத்தில் 1822 முதல் 1854 வரையிலும், 2-வது பாகத்தில் 1854 முதல் 1871 வரையிலும், 3-வது பாகத்தில் 1871 முதல் 1882 வரையிலும் 4-வது பாகத்தில் 1882 முதல் 1893 வரையிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இப்புத்தகத்தில் இத்தேசத்தில் வித்தியாபிவிருத்திக்காகத் தொடரப்பட்ட முறைகள் யாவும் இனிது விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. புத்தகத்திற்குப் பல அனுபந்தங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கல்வி விஷயமாக கிறிஸ்துவப் பாதிரிமார்கள் பின்பற்றிய வழிகளும் தனியாகக் குறிப்பிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு வித்யா இலாகா அதிகாரிகள் பின்பற்றியவழிகளைத் தமது அபிப்பிராயங்கள் இல்லாமல் குறிப்பிட்டுள்ள போதிலும், இப்புத்தகம் எழுதுவதற்கு டாக்டர் சத்தியநாதன் மேற்கொண்ட சிரமம் மிக்கவும் அதிகம் என்பதை நாம் கருதவேண்டும். இப்புத்தகம் வெளி வந்தவுடனேயே இவரது புகழ் இன்னும் அதிகமாகப் பரவிவிட்டது. இம்மாகாணத்திற்கு இப்புத்தகத்தின் மூலம் இவர் அரிய சேவை செய்தார் என்று கூறுதல்தான் தகும். இன்றும் வித்யா விஷயமாகச் சிரத்தையுள்ளவர்களுக்கு இப்புத்தகமானது அதி அவசியமானதோர் கருவியாகும். ஆகையினால் இவரது உண்மைப்பெருமைக்கு இந்நூல் ஒன்றே போதுமான அத்தாக்ஷியாகும்.

டாக்டர் சத்தியநாதன் 1894-ல் தமது முதல் மனைவியான ஸ்ரீமதி கிருபாபாய் என்பவரின் மரணத்தினால் மிகவும் வாட்டப்பட்டார். இவ்விருவர்களும் விவாக காலம் முதற்கொண்டு ஒருவரோடொருவர் மிக்க அந்நியோந்நியமாக இணை பிரியாமல் சந்தோஷமாக வாழ்ந்து வந்தவர்கள். ஸ்ரீமதி கிருபாபாய் ஆங்கிலத்திலேயே "சகுண" "கமலா" என்ற நவீனங்களை எழுதிக் கீர்த்தி வாய்ந்தவர்; இவைகள் மூலம் அவர் வாழ்க்கையின் போக்கை வெகு அழகாகச் சித்தரித்துக் காட்டியுள்ளார். இவரது மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்க, கவர்னர் மாளிகையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது; அச்சமயம் ஸர் அருண்டேல், திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார், ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலியோர் காலமானவரின் சிறப்புகளை எடுத்துச் சொன்னார்கள். பின்பு அவர்கள் மூலம் இவருக்கு ஞாபகார்த்தங்களும் நிறுவப்பட்டன.

இல்லறவாழ்க்கை

டாக்டர் சத்தியநாதன் மீண்டும் 1898-ல் மிஸ் கமலா ரத்னம் கிருஷ்ணம்மா என்பவரை மணந்துகொண்டார். இவர்தான் இந்தியன் லேடீஸ் மாகஸின்" (இந்திய மாதர் பத்திரிகை) நடத்தியவர். சென்னை சர்வகலாசாலையில் "எம். ஏ" பட்டம் பெற்றுக்கொண்ட முதலாவது இந்திய மாதும் இவரே. இவரும் தமது கணவருடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார். டாக்டர் சத்தியநாதனும் மிஸஸ் கமலா சத்தியநாதனும் வாழ்ந்து வந்த விதமானது மிக்க சிறப்புப் பொருந்தியது; இவர்களுடைய பழக்கமானது உதாரணம் என விளங்குவதாகும்.

ஜெனித் திராக்ஷாஸவா

ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி "ஜெனித் திராக்ஷாஸவா" தயாரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகத்தின் ஆரம்ப நிலையையும், காசம், இருமல் முதலிய சுவாச நோய்களையும், ஜல தோஷம், சளி, அஜீர்ணம், மலச் சிக்கல், வாந்தி யெடுத்தல் முதலான நோய்களையும், தொண்டையைப்பற்றின சகல ரோகங்களையும் முழுவதும் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் க்குவான் இருமலுக்குக் கைகண்ட மருந்து. இது வெகு ருசியுள்ள பானம். தினசரி உபயோகித்தால் குடலைச் சுத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்கிறது. படுப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜெனித் திராக்ஷாஸவாவைச் சிறிது பருகினால், காலையில் எழுந்து வேலை செய்வதற்கு வெகு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும்கூட, இப்பொழுது ஜெனித் திராக்ஷாஸவா கிடைக்கும். தபால் மூலமாக இம்மருந்தை அனுப்புவதென்றால் அதிகச் செலவு ஆகும். நீங்கள் இருக்கும் இடத்திலேயே ஜெனித் திராக்ஷாஸவாவை வாங்கினால் உங்களுக்கு லாபமும் சௌகரியம் உண்டு.

ஜெனித் கெமிகல் ஒர்க்ஸ்,

தேவகரன் கட்டடங்கள், பிரின்ஸஸ் தெரு பம்பாய்.

Th Zenith Chemic l Works,

Deokaran Mansions Princes Street, Bombay, No. 2

சென்னை ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்.—

ஜே. பலாபாய் & கம்பெனி,

260, சைனாபஜார் — மதராஸ்.

1905-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் டாக்டர் சத்தியநாதன் அமெரிக்காவிற்கு அக்கண்டத்திலிருக்கும் சர்வகலாசாலைகள், மதப்பிரசாரச் சங்கங்கள் இவைகளின் அழைப்பிற்கிணங்கி,ரஜா எடுத்துக்கொண்டு இங்கிருந்துபுறப்பட்டுச் சென்றார். அமெரிக்காவில் இந்திய தத்துவ சாஸ்திரத்தைப்பற்றி உபந்நியஸிக்க வேண்டுமென்று இவர் வற்புறுத்தி அழைக்கப்பட்டார். 1906-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் திரும்புகையில் இவர் ஜப்பான் தேசத்திற்கும் சென்றார். பின்பு சீன தேசத்தையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற அபிலாஷையை இவர் மேற்கொண்டிருந்தார். ஆனால் ஜப்பான் தேசத்தில் யோக ஹாமா நகரில், பிரயாணத்தால் விளைந்த களைப்பின் காரணமாக இவர் நோய்வாய்ப்பட்டார். விஷஜுரத்தால் பீடிக்கப்பட்ட இவர், ஜப்பான் தேசத்தில் மூன்று மாதகாலம் மிகவும் அவஸ்தைப்பட்டார். நடுவே, இவர் பூரண சௌஸ்தமடைந்து விடுவார் எனவும் நம்பப்பட்டது. இறுதியில் 1906-ம் வருஷம் ஏப்ரலமாதம் 4-ம் தேதியன்று ஜப்பான் தேசத்தில் யோகஹாமா நகரில் டாக்டர் சத்தியநாதன் தமது 45-வது பிராயத்திலேயே காலமானார். இவரது அல்பாயுசு மரணத்தினால் இம்மாகாணமும், சர்வகலாசாலையும் வித்யா இலாகாவும் ஒரு சிரேஷ்டரை இழந்தன. இவர் பலவருஷங்களாகவே சென்னை சர்வகலாசாலையைப்பற்றி வ சபைகளுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தவர். தவிரவும் அமெரிக்கா பிரதேசத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்புதான் இம்மாகாணத்தின் கலாசாலைகளை மேற்பார்வையிட்டு ஒரு யாதாஸ்தைத் தயார் செய்வதற்காகச் சென்னை சர்வகலாசாலையாரால் நியமிக்கப்பட்ட ஒரு சிறிய கமிட்டியில் ஒருவராகவிருந்து முழுதும் சுற்றிவிட்டுத் திரும்பினார். இவரது ஆயுட்காலம் சிறிது நீடிக்கப்பட்டிருந்திருப்பின், இம்மாகாணத்திற்கு முக்கியமாக இவர் இன்னும் அதிக உயர் சேவை இயற்றியிருந்திருப்பார் என்பது நிச்சயம்!

தேவை

எமது ஸிகரெட்டுகளை விற்பனை செய்ய எல்லா நகரங்களிலும், ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. தாராள நிபந்தனைகள். கீழ்க்கண்டவர்களுக்கு எழுதுக:-K. John & Co., Mirchi St. Mandvi Bombay No3,

மானேஜர்:—இதற்கு முன் இருந்தவிடத்தை ஏன் விட்டு விட்டாய்?

குமாஸ்தா:—எனக்குப் பிடிக்காததைச் செய்யச் சொன்னுர்கள்.

மானேஜர்:—என்ன வேலே?

குமாஸ்தா:—வேறு வேலே பார்த்துக்கொள்ளும்படிச் சொன்னுர்கள்.

* * * *

தகப்பனுர்:—-ஏண்டா பிச்சு. இம்மாதிரி வம்புச் சண்டையை இழுத்துக்கொண்டு வருகிருய்? பேசாமலிருக்கக் கூடாதா?

மகன்:—நான் என்னப்பா செய்கிறது? யார் கண்ணில் குச்சி எடுத்துக் குத்தினுலும் என்னேப் பொல்லாதவன் என்று சொல்லுகிருர்கள்.

* * * *

சர்க்கார் சிப்பந்திகள் சங்கத்தார் ஒரு நாடகமாடினுர்கள். அதில் அரசவேடம் தரித்தவர், "மந்திரீ! ராஜகாரியங்கள் சரியாக நடைபெறுகின்றனவா?" என்று கேட்டார்.

பபூன் (தனியாக):—எப்படி நடக்கும்? சர்க்கார் சிப்பந்திகளெல்லாம் நாடகமாடினுல் ராஜ்ய காரியம் சீராக நடக்க முடியுமா?

* * * *

ஒருவர் சொல்ப விலேயுள்ள ஒரு கெடியாரத்தை ரிபேர் செய்பவரிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னுர். கெடியாரத்தின் உள்ளே இருந்த சாமான்கள் உடைந்திருந்தன. ரிப்பேர் செய்பவர் பார்த்துக்கொண்டேயிருக்கையில் "கெடியாரம் கீழே விழுந்து விட்டது. அதனுல் தான் கெடியாரம் ஓடவில்லே" என்றுர். வந்தவர்.

ரிப்பேர் செய்பவர்:—கீழே விழுந்ததை எடுக்காமல் இருந்திருந்தால் நலமாகவிருந்திருக்கும்.

* * * *

"என் பையனேக் காலேஜில் படிக்க வைப்பதற்கு எவ்வளவோ செலவழிக்கிறேன். அவனுக்கு நன்றியில்லே. கடிதமே போடுவதில்லே."

"என் பையனும் காலேஜில் தான் படிக்கிருன். ஆனுல் நான் 'இத்துடன் பணம் அனுப்பியிருக்கிறேன்' என்று கடிதம் எழுதிப் பணத்தை வைக்காமல் கடிதத்தை மாத்திரம் இன்ஷ்யூரில் அனுப்பி விடுவேன். உடனே அவன் கடிதம் எழுதிவிடுவான்"

* * * *

டாக்டர்:—இந்த மருந்தைச் சாப்பிடு. வெளியில் போகாதே. அப்படிப்போனுலும் கூட்டத்தில் போகாதே.

மறதியான திருடுகிறவன்:—இது என் வேலேக்குக் குந்தகமாகவிருக்கும். நான் கூட்டத்தில் சட்டைப் பையிலிருந்து திருடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறேனே.

* * * *

கிழவி:—அவன் உன் சிறிய தம்பியல்லவா, அவனுக்கு என்ன வயசு?

நவ நாகரீகச் சிறுமி:— அவன் 1936-ம் வருஷ மாடல்.

* * * *

கணவன் மலேப்பிரதேசங்களிலிருந்து சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு திரும்பி வந்தான்.

"நான் உனக்குச் செல்லமாக வளர்ப்பதற்கு ஒரு குரங்கு வாங்கி வரவேண்டுமென்று நினேத்தேன். ஆனுல் மறந்துவிட்டேன்."

மனேவி:—நீங்கள் இருக்கும் போது குரங்கு வேறு வேண்டுமா!

* * * *

பையன்:—அம்மா! நான் எவ்வளவு மதிப்பிருப்பேன்.

தாய்:—கண்ணே! நீ எனக்கு, யார் எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும் அதற்கு சமானமாகமாட்டாய்.

பையன்:— அப்படியானுல் எனக்காக ஒரு அணுக் கொடு.

* * * *

தாய்:— சமையலறையில் என்ன செய்துகொண்டிருக்கிருய்.

பையன்:—ஆசையை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறேன்.

* * * *

கத்தி இரண்டாவது தடவையாகக் கழுத்தில் காயத்தை உண்டாக்கிவிட்டது.

"ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டுவா."

நாவிதன்:—எதற்காக?

"கழுத்து ஒழுகுகிறதா என்று பார்க்க வேண்டும்."

* * * *

ஆரோக்யமும் திடமும் பெறுவது வெகு சுலபம்

உங்கள் பலவீனத்தை நினேத்து வருந்தவேண்டியதில்லே.

மிக்க ஆரோக்யவந்தனுகவும் திடகாத்திரனுகவும் ஆவது மிக சுலபம். பலவீனத்தை, வெகு விரைவில் போக்கி, கோடானுகோடி பலவீனர்களே திடகாத்திரர்களாக்கிய "ஜீவாம்ருதம்" உங்களுக்கும்பலவீனத்தை நீக்கி, ஆரோக்யத்தைப் பெருகச் செய்யும். பலவீனமேயன்றி அதன் காரணமாக ஏற்படும் எத்தகைய நோயையும் களேயறுத்து சரீரத்திற்கு புத்துயிரை யளிக்கும்.

ஜீவாம்ருதம்

தேகாரோக்யத்திற்கும், பலவிருத்திக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, மதராஸ்.

ஏஜண்டு:—மேஸர்ஸ் அமர்சந்த் சோபாசந்த், கெமிஸ்ட், மதராஸ்

காலபோர்னியாவில் மாக் குதிரை விளேயாட்டுப் பந்தயம்.

மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

ஸஹவாஸ ஸ்நேகம்

ச்யவனர் கதை

"பார்ப்பதனாலும் கூட வஸிப்பதனாலும் உண்டாகும் ஸ்நேகம் எவ்வகை என்பதையும் கோக்களின் மகிமையையும் எனக்குச் சொல்லவேண்டும்" என்று யுதிஷ்டிரர் கேட்க பீஷ்மர் பின்வருமாறு ஒரு கதையைச் சொன்னார்:—

முற்காலத்தில் பிருகு வம்சத்தவரான ச்யவன மஹரிஷி கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் நீருக்குள் வெகு காலம் வசித்துவந்தார். ஜலத்திலேயே அவர் வெகு காலம் தவம் செய்து கொண்டிருந்தார் பிறகு ஒரு சமயம் மீன் பிடிப்பவர்கள் அங்கு வந்து வலையைவீசி மீன் பிடித்தார்கள். மீன்களுடன் ச்யவன மஹரிஷியும் வலையிலிருந்தார். மீன்கள் கரைக்குக் கொண்டுவரப்படவும் இறந்து போயின. ச்யவனர் இதைப் பார்த்து மிகவும் துக்கித்தார். செம்படவர்கள் அவருக்குத் தாங்கள் யாதொரு தீங்கும் செய்ய நினைக்கவில்லையென்றும், தாங்கள் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அதைத் தெரிவிக்கும்படியும் வேண்டிக்கொண்டனர். அதற்கு ச்யவனர், "இப்போது என்னுடைய முக்கியமான விருப்பத்தை நீங்கள் கேளுங்கள். உயிர்விடுவதையோ வலையிலிருந்து விடுபடுவதையோ இம்மச்சங்களோடு கூடத்தான் நான் அனுபவிப்பேன். கூட இருந்த சினேகத்தினால் ஜலத்தில் வசித்த மச்சங்களைவிட்டுவிட நான் துணியவில்லை" என்று சொன்னார்.

திருப்போரூர் ஸ்ரீ ஷண்முகப் பெருமானுக்கு பஞ்சாக்ஷரக் காவடி திருமலர்க் காவடி அர்ப்பண வைபவம் சமீபத்தில் நடைபெற்றது.

இதைக்கேட்ட செம்படவர்கள் அப்போது நாட்டை ஆண்டுவந்த நகுஷனிடம் இதைத் தெரிவித்தனர். நகுஷன் தனது மந்திரிகளுடன் ச்யவனரிடம் வந்து தான் செய்யவேண்டியதென்னவென்று கேட்டார். ச்யவனர் செம்படவர்களுக்கு மச்சங்கள் விற்கும் விலையுடன் தனக்கும் விலை கொடுக்கும்படிச் சொன்னார். பிறகு நகுஷன் ஆயிரம் பவுன், லக்ஷம் பவுன், கோடி பவுன் என்று ச்யவனருக்கு விலை கொடுப்பதாகச் சொன்னான். ஆனால் ச்யவனர் அவ்விலைகளுக்குத் தாம் தகுந்தவரில்லை என்றார். இதைக் கேட்ட அரசன் பாதி ராஜ்யத்தைக் கொடுப்பதாகச் சொன்னான். இதற்கும் மஹரிஷி சம்மதிக்கவில்லையாகையால், நகுஷன் மிகுந்த துக்கமடைந்தான்.

அப்போது பசுவின் வயிற்றிற் பிறந்த மற்றொரு மஹரிஷி அங்கு வந்து அரசனைப் பார்த்துத் தாம் ச்யவனர் திருப்திப்படும்படிச் செய்வதாயும், தாம் சொல்வதை அரசன் ஆக்ஷேபமின்றிச் செய்யவேண்டுமென்றும் சொன்னார். நகுஷன் சம்மதிக்கவே அந்த மஹரிஷியும், "பிராம்மணர் குலமும் கோக்களின் குலமும் ஒன்றே இரண்டாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குலத்தில் மந்திரங்களும் மற்றொரு குலத்தில் நெய் முதலிய ஹோமத்திரவ்யங்களுமிருக்கின்றன. வர்ணங்களில் சிறந்தவரான பிராம்மணர்களுக்கும் கோக்களுக்கும் விலையில்லை. ஆதலால், கோவை விலையாக ஏற்படுத்தலாம்" என்றார்.

நகுஷனும் அதேமாதிரி சொல்லவே அதை ச்யவனர் ஒப்புக்கொண்டு பின்வருமாறு சொன்னார்:—இவ்வுலகில் கோக்களுக்கு ஒப்பான தனம் ஒன்றுமில்லை. கோக்களை வாயினாற் சொல்வதும், காதினால் கேட்பதும், கண்ணால் பார்ப்பதும், தானம் செய்வதும் எல்லாப் பாவங்களையும் போக்கி க்ஷேமங்களைத் தருவதாகச் சொல்லப்படுகின்றன. கோக்கள் தாம் எப்போதும் லக்ஷ்மிக்கு ஆதாரமானவை. கோக்களிடம் பாவமில்லை. ஹோமமும் யாகமும் எப்போதும் கோக்களைப் பொறுத்திருக்கின்றன. யாகத்தை நடத்துகின்றவைகளும் கோக்களே; யாகத்தின் பயனும் கோக்களே. இவை அமிருதத்திற்கு ஆதாரமாயிருப்பதனால், எல்லா லோகங்களாலும் நமஸ்கரிக்கப்படுகின்றன. கோக்கள் ஒளியிலும் உருவத்திலும் பாவத்தை எரிக்கின்ற அக்னியைப் போன்றவை. மனிதர்களுக்குக் கோக்களே மிகப் பெரிய மஹிமை. ஸுகத்தைக் கொடுப்பதும் அவையே. பசுக்கள் எந்த இடத்தில் அச்சமின்றி ஜீவிக்கின்றனவோ அந்தத் தேசமே நன்கு விளங்குகின்றது. அந்தத் தேசத்தின் பாவமும் போகின்றது. பசுக்கள் ஸ்வர்க்கத்திற்குப் படிகள். கோக்கள் நினைத்தவற்றையெல்லாம் கறக்கும் தேவதைகள்

செம்படவர்கள் இதைக் கேட்டுவிட்டு, "முனிவரே, எங்களைப் பார்த்தும் எங்களுடன் பேசியுமிருக்கிறீர். ஸாதுக்களுக்கு ஏழு சொற்களில் ஸ்நேகம் உண்டாகிறது. ஆகையால் எங்களுக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும். எங்களை அனுக்ரஹிப்பதற்காக இந்தப் பசுவை நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினர்.

ச்யவனரும், "செம்படவர்களே! உங்களிடத்தில் பசுவைப்பெற்றுக் கொள்ளுகிறேன். உடனே நீங்கள் பாவத்தை விட்டு வலையினால் எடுக்கப்பட்ட மீன்களுடன் ஸ்வர்க்கத்திற்குச் செல்லுங்கள்" என்று சொன்னார். மஹரிஷியின் மஹிமையால் அவ்வாறே நடந்தது.

இதைக் கண்ட நகுஷராஜன் வியந்து நிற்க, இரண்டு முனிவர்களும் அவனுக்கு இரண்டு வரங்கள் அளிப்பதாகச் சொன்னார்கள். நகுஷன் அனுக்ரகமே பெரிதென்றுசொல்லி, தர்மத்தில் நிலைகுலையாமலிருப்பதையே வரமாகப் பெற்றுக் கொண்டான். பிறகு அவரவர்கள் தங்களிடம் சென்றனர்.

(தொடரும்.)

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா

இந்தியா கவர்ன்மெண்டு வைத்திய பட்டதாரியும், கவர்ன்மெண்ட் இந்தியன் மெடிகல் ஸ்கூல் ஹாஸ்பிடல் இவைகளின் நிர்வாஹ கவர்னிங்பாடி, மெடிகல் அட்வைஸரி கமிட்டி, & ஸெண்ட்ரல் போர்டு இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை மெடிகல் டிப்ளோமா பட்ட பரீக்ஷைகளுக்குப் பரீக்ஷாதிகாரியுமான,

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா பில்வாதி லேகியம்
பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி
குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான்; மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை
ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1-க்கு 0-8-0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

மஹா பில்வாதி தைலம்:—நேத்திர ஸம்பந்தமான எல்லா ரோகங்களையும் கண்டித்து, கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய அப்பியங்கன தைலம். 6 அவு. கொண்ட சீசா 1-க்கு ரூ. 2. வி.பி.வேறு.

ஆனந்த படை நிவாரணி:—இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணா 12. வி. பி. வேறு.

பிரமநாரோக பஞ்ஜனி:—மூத்திர நாளத்தின் எரிச்சல், வெள்ளை முதலிய வெட்டை ஸம்பந்தமான துஷ்டரோகங்களைக்கட்டாயம் தீர்க்கும். சீசா 1-க்கு ரூ. 3. வி. பி. வேறு.

ஆனந்தாஞ்சனம்:—ஸகலவிதமான வலிகளுக்கும், கீல்பிடிப்புகளுக்கும், தேவாமிருதம் போன்றது. சீசா 1-க்கு அணா 8. வி. பி. வேறு.

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,
வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

நமது தொடர் கதை.

ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை)

மூன் : : கதைச் : : சுருக்கம்

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த **நந்தகோபமுதலியாரின்** குமாரி **ராதாவிற்கு அமரேசன்** செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார். நந்தகோபரும் அவரது மனைவி **அநந்தகல்யாணி** அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்தி வருகின்றனர்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் **நச்சுமுதலியார்** தமது அந்தரங்க நண்பன் **பிச்சு அய்யர்** இருவரும் ஏக போகமாகவிருந்து வந்தனர். **தண்டபாணி** தன் சிற்றப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக்கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

மகேந்திரம் இளவாசனுக்கும் அமரேசனுக்கும் பகை ஏற்பட்டதன் காரணமாகவும் நச்சு முதலியின் துர்ப்போதனையால் நந்தகோபர் அமரேசனை நிறுத்திவிட்டபடியாலும் அமரேசன் மகேந்திரத்திலிருந்து வெளியேறினன்.

ராதாவுக்கும் தண்டபாணிக்கும் மணமகளின் சம்மதமின்றி விவாகம் நடைபெறுகிறது. பூரண கர்ப்பிணியாயிருந்த அநந்தகல்யாணி ஒரு ஆண் மகவைப் பெற்று உயிர்துறந்தாள். ஆராத்துயரத்திலாழ்ந்த நந்தகோபரை நச்சுமுதலியார் தேற்றித் தன் குமாரி **காளத்தியை** விவாகம் செய்து வைக்கிறார். பாற்கடல் தாசி **பஞ்சாமிர்தம்** நச்சுமுதலிக்கும் தண்டபாணிக்கும் வேண்டியவள். ஈரோடு கருணாநிதி சாஸ்திரிகளுக்குத் திருட்டுப் போன சில சொத்துக்கள் சம்பந்தமாக நச்சுமுதலி கைது செய்யப்பட்டு அவருக்கு மூன்று வருஷ சிறைவாஸ தண்டனை விதிக்கப்படுகிறது.

தண்டனை காலம் முடிந்து வெளிவந்த நச்சு முதலியைத் தண்டபாணி சிறிதும் மதிக்கவில்லையாகையால் அவனைத் தொலைத்துவிட பிச்சு அய்யருடனும் எமகாலன் என்ற பறையனுடனும் சதி செய்து தண்டபாணியைக் கொலை செய்துவிடுகிறார். நந்தகோபர் தம் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டுக் குடும்பத்துடன் கொத்துவால் தோப்பில் வசித்து வந்தார். காளத்தி நந்தகோபருடன் சண்டையிட்டுக்கொண்டு பிறந்த வீட்டுக்குச் சென்றுவிட்டாள்.

டாக்டர் நாயனர் சென்னைப் பத்திரிகையொன்றின் ஆசிரியர். நல்ல வைத்தியரும் கூட. அவரது புகழ் எங்கும் விஸ்தரித்திருந்தது. அவர் தமது சுற்றுப் பிரயாணத்தில் கொத்துவால் தோப்பிற்கு வந்திருந்தார். அங்கு நந்தகோபர் வீட்டிலில்லாத சமயம் அவரது மகன் மாதவனுக்கு நோய் உண்டாகியிருந்தது.. டாக்டர் நாயனர் இதைக் குணப்படுத்தினர். பின்னிட்டு அவர் நந்தகோபரின் வீட்டு சமாச்சாரங்களனைத்தையும் அவரது தாய் பூசையாச்சி மூலம் அறிகிறார்.

இரண்டு மணிக்குமுன் போன மாதவனும், அவனைத் தேடிச் சென்ற பூசையாச்சியும், நான்கு மணிவரை வாராதபடியால் அவர்கள் வரவை எதிர்பார்த்து, மாதவனுக்குப் பத்தியம் வைத்துக் காத்துக் கொண்டிருந்த,

ராதா:— (பூசையாச்சியைக் கண்டு) பாட்டி, இந்நேரவரை அங்கே என்ன செய்தாய்? மாதவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா? அடே தம்பீ, மாதவா, உனக்குப் பசிக்கவில்லையா?

பூசை:—போனேன்; நேரமாய்விட்டது.டாக்கிட்டர் மிகவும் நல்ல குணக்காரர்; ஆளைப் பார்த்தவுடன் பெருமைக்காரராயிருப்பாரென்று நினைத்தேன். எவ்வளவு அன்பாய் ஆதரவாய்ப் பேசுகிறார்!

ராதா:—இவ்வளவு நேரமாய் அவரிடம் என்ன பேச்சுப் பேசினாய்?

பூசை:—என்ன பேச்சு? ஊர்ப்பேச்சா பேசினேன்? நமது குடும்பப் பேச்சுத்தான் பேசினேன். அவரும் அன்பாய்க் கேட்டார்; நானும் சொன்னேன்.

ராதா:—நமது குடும்பக் கதையெல்லாம் சொல்லிவிட்டாயா? அவர் கேட்டாரா? அல்லது, நீயாகவே நமது குடும்பப் பெருமைகளையும் சிறப்புகளையும் டம்பமாய் எடுத்துப் பிரஸ்தாபித்துவிட்டாயோ? அப்படியென்னபேசினாய்?

பூசை:—என் கதை, உன் கதை, உன் தாய் கதை, முடிவில்—உன் அத்தை கதையையும் விரும்பிக்கேட்டார்—அதையும் சொல்லித்தீர்த்தேன்.

ராதா:—சொல்லித் தீர்த்தா விட்டாய், பாக்கியில்லையா? உனக்கு வேறே வேலையில்லை; நமது குடும்பப் பெருமைகளைச் சென்னப்பட்டணத்துக்காரரெல்லாம் அறியவேண்டுமா? இருக்குமிடம் தெரியாமல் ஒதுங்கிப்பிழைக்க வேண்டுமென்று நான் இருக்கிறேன். நீயும் உன் சம்பந்தியும் வந்தவர்கள், போனவர்கள், கண்டார், கேட்டாரிடமெல்லாம் இன்னது சொல்லலாம் இன்னது சொல்லப்படாதென்ற பேதமில்லாமல், புலம்பிக்கொண்டிருப்பதே வழக்கமாய் விட்டது.

பூசை:—அவர் கேட்டாரேயென்று நான் ஏதோ சொன்னேன். என்ன ரகஸ்யத்தைச் சொல்லிவிட்டேனென்று நீ சடைக்கிறாய்? அப்படி ஒன்றும் சொல்லவில்லை. மாதவனுக்கு ஏதாவது கொடு.

ராதா:—பேரன் பசித்திருக்கிறானென்றுதானே நீ இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கிறாய்! (என்று பாட்டியைக் கோபித்துவிட்டு, மாதவனுக்கு ஆகாரம் கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுதே, வெளியிலிருந்து வந்த தபாற் சேவகனைக் கண்டு) அப்பா, ஏதாவது காயிதமுண்டா?

சேவகன்:—அம்மா, இருக்கிறது (என்று ஒரு கடிதத்தை நீட்டினன்.)

ராதா:—நான் பற்றுக்கையோடிருக்கிறேன்; அதோ அந்த ஜன்னலில் வை.

சேவ:—அம்மா, தெற்குப் பங்களாவில் யாரோ ஒரு சாமியார் வந்திருக்கிறாரே அவருக்குத்தான் இந்தத் தபால்; அவர் பங்களாவில் இல்லை; பூந்துறைக்குப் போயிருக்கிறாராம்; தோட்டக்காரன் சந்தனத்தையும் காணவில்லை. ஆகையால், இவைகளையெல்லாம், சந்தனம் வந்தாற் கொடுத்தனுப்பிவிடுங்கள். இந்த ஜன்னலில் வைத்துவிட்டுப் போகட்டுமா?

ராதா:—இத்தனையும் அவருக்குத்தானா? ரொம்ப ஜாஸ்தியாய் இருக்கிறதே?

சேவ:—இத்தனையும் பேப்பர்கள்தான். அவர் இங்கே வந்து இரண்டு மூன்று நாளாய் தினசரி இப்படியே ஒரு ஆள் சுமை பேப்பர்களும் கடிதங்களும் வந்துகொண்டேயிருக்கிறது. இத்தனை குப்பைகளையும் அந்தப் பாவி மகன் எப்படித்தான் வாசித்துத் தொலைப்பாரோ தெரியவில்லை! அம்மா, ஞாபகமாய் அனுப்பிவிடுங்கள்.

ராதா:—நல்லது; நீ போ; சந்தனம் பால் வாங்க வருவான்; அனுப்பிவிடுகிறேன். (என்று சொல்லிக்கொண்டே, அவசரமாய்க் கையை அலம்பிவிட்டுக் கடிதத்தையெடுத்துத் தனக்குள்,)

சௌபாக்யவதி

ந. ராதாம்பாள்,

மாதவ விலாஸ்,

17, வள்ளுவர் வீதி, மைலாப்பூர்

கொத்துவால் தோப்பு
சாலிவாடி,
தெ. இ. ரெ.

(என்று வாசித்துக்கொண்டு) பாட்டீ, கடிதம் சென்னப்பட்டணத்திலிருந்து வந்திருக்கிறதே? அப்பா ஒரு வேளை மைலாப்பூருக்குப் போயிருக்கிறார்களா? (என்று கடிதத்தை உடைக்கும்போது)

பூசை:—வாசித்தால் தெரியுமே? வாசி; வாசி.

ராதா:—(கடிதத்தை விரித்து, பாட்டி கேட்கும்படி)

"மைலாப்பூர்

எனது செல்வப் புதல்வி

ராதாம்பாளுக்கு.

ஈசன் அருள் செய்க. நீயும் மாதவனும், பாட்டிமாரும் க்ஷேமமாயிருக்கிற விவரத்திற்கு உடனே பதிலனுப்பு. நான் ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டு ரெயிலேறி வரும் பொழுது, ஆலவாயில் கொஞ்சம் தாமஸமாய்விட்டபடியால் செவ்வாய்க்கிழமை காலையில் தான் மகேந்திரம் போய்ச் சேர முடிந்தது. அங்கே நண்பர் ராமாநுஜ பந்துலுவைக் கண்டதில், அவர் நாமனை வரும் ஆச்சரியப்படத் தக்க

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

கடிதமுழுவதையும் விழித்த கண்ணிமையாமல் நின்ற நிலையிலேயே ஆனந்தமும் ஆச்சரியமும் கலந்த ஓயாத பெருமூச்சுடன் வாசித்து முடித்தாள்.

ஒரு சந்தோஷமான விசேஷ சமாசாரத்தைத் தெரிவித்தார்.

அதாவது, உன் அத்தை—என் தமக்கை—காணமற்போன கற்பகத்தைப் பற்றியும் என் அத்தான் கார்த்திகேய பிள்ளையைப்பற்றியும் நீ அடிக்கடிக் கேள்விப்பட்டிருக்கிறுயல்லவா? அவர்கள் இருவரும் இதுவரை ஜீவித்து க்ஷேமமாயிருக்கிறுர்கள். அண்டமான் தீவிலிருந்து திரும்பிய அத்தான் கார்த்திகேயப்பிள்ளையும், அண்ணுமலையில் பரதேசியாயிருந்த உன் அத்தை கற்பகமும், இருபத்தைந்து வருஷ காலம் பிரிந்திருந்து, ஒரு வாரத்திற்குமுன் தெய்வச் செயலாய்ச் சென்னைத் துறைமுகத்தில் ஒருவரையொருவர் கண்டுகொண்டார்கள்.

நமது குடும்பத்துக்கெல்லாம் கேடுவிளைத்த சண்டாளன் நச்சுமுதலிக்குப் பயந்து, தென் தேசத்திற்கே வராமல், சென்னையில் மறைவாய்க் குடியிருந்துகொள்வதென்று அத்தானும் அக்காளும் தீர்மானித்துக்கொண்டிருக்கும் பொழுது, நான் மகேந்திரத்திலிருக்கிறேனென்று கேள்விப்பட்டு இருவரும் என்னைத் தேடி மகேந்திரத்திற்கு வந்தார்கள். என்னை அங்கே காணமல், யாரோ ஒருவன் சொன்ன தப்பின் பேரில், இருவரும் ஒற்றைப் புளியூர் சித்தாந்தம் செட்டியாரிடம்போய் என்னைப்பற்றி விசாரித்தார்களாம். அவர் உள்ளபடியே, தனக்கொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டபடியால், இருவரும் மறுபடி மைலாப்பூருக்குப் புறப்பட்டுப் போகிறவழியில், எனது நண்பர் ராமானுஜ பந்துலு தற்செயலாய் அவர்களைச் சந்திக்கும்படி நேர்ந்தது. இருவரிடமும் பந்துலு ஏதோ பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் இன்னுரென்று தெரிந்துகொண்டபடியால், அவர் அத்தானையும் அக்காளையும் அன்பாய் வீட்டிற்கழைத்துக்கொண்டு போய், உபசரித்து, உடனே எனக்குக் கடிதமெழுதி, நான் வரும் வரை தன் வீட்டில் செளக்கியமாய் இருக்கும்படி வேண்டிக்கொண்டார். இருவரும் சம்மதித்து இரண்டு நாள்வரையிருந்தார்கள்.

கடிதமும் தந்தியும் கிடைத்து நான் வந்து சேரக்கூடிய நாளைக் கணக்கிட்டுக்கொண்டு காத்திருந்த அக்காளும் அத்தானும், நான் நச்சுமுதலி கக்ஷியைச் சேர்ந்துகொண்டபடியால், வரவில்லையென்று சந்தேகித்துக்கொண்டு, திங்கட்கிழமை மாலை மைலாப்பூருக்குப் புறப்பட்டுவிட்டார்கள். நான் செவ்வாய்க்கிழமை காலை மகேந்திரம் போனவுடன், இந்த சமாசாரங்களையெல்லாம் பந்துலு என்னிடம் விவரமாய்ச் சொன்னதுமன்றி மைலாப்பூரில் அத்தானுடைய மேல்விலாசத்தையும் ஒரு சீட்டில் குறித்துக் கொடுத்தார்.

ராதா, நான் இத்தனை சமாசாரங்களையும் கேள்விப்பட்டவுடன், எவ்வளவு ஆனந்தமடைந்திருப்பேனென்பதை நீயே நினைத்துப்பார். உடனே, நான் பந்துலுவிடமே ஐம்பது ரூபாய் கைமாற்று வாங்கிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டு நேற்று புதன்கிழமை ஒரு மணிக்கெல்லாம் மைலாப்பூருக்கு வந்து—நான் பதினைந்து வயதுச் சிறுவனுயிருக்கும்பொழுது கண்ட என் அருமை அக்காளையும் அத்தானையும் கண்டுகொண்டேன்! நான் போன சமயம், இருவரும் ஏதோ ஒரு விடுதியிலிருந்து வாங்கிவந்த சாதத்தைச் சாப்பிட்டுவிட்டு, ஒரு பிரபுவின் வீட்டுத் தோட்டத்தில், ஒரு வண்டிப் பிறையில் உட்கார்ந்து, என்னைப்பற்றியும் உன்னைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைக் காணவும், அவர்களுக்கு என்னை இனம் தெரியாவிட்டாலும், நான் அவர்களை இனங்கண்டு நிச்சயித்து, "அக்கா, அத்தான்" என்று கூவிக்கொண்டு மேலே விழுந்து அழுதேன். அவர்களும் "நந்தகோபனு! நந்தகோபா! வ நந்தகோபா!" என்று என்னைக்

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப்சந்த்
175 சைனு பஜார். மதராஸ்.

உயர்ந்த ரோமசங்காரி

வேண்டா ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.
பெரியடியூப் அணு 12 சிறிய டியூப் அணு 6
பெரிய பாட்டில் அணு 14
சிறிய பாட்டில் அணு 10
வி. பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது
Agents: Shivlal & Co., Bombay, 2



ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6000.ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன பீரட்சீ, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1 க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

டாக்டர் ஜம்மி வெங்கடாரமணய்யாவின்
லிவர்க்யூர்
குழந்தைகள் ஈரல், குலேகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.
அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

கட்டிக்கொண்டு அழுது முடித்தார்கள்.

என் ராதா, உன் அத்தை ஆதியில் பதினேழு வயதுப் பெண்ணாயிருக்கும்பொழுது, என் கண்ணுக்கு எப்படித் தோன்றினளோ, அப்படியே தான் இருக்கின்றாள் இப்பொழுதும்; என்ன ஆச்சரியம்! அத்தானும் முன்னிருந்தபடியேதான் இருக்கின்றார்கள்! தலையில் கொஞ்சம் நரைத்திருப்பதையன்றி வேறே ஒரு பேதத்தையும் காணவில்லை. ஆனால், இருவரும் சற்றே மெலிந்து வாடியிருக்கிறார்கள். இருவரும் உடுத்திருந்த உடையையும் அந்தக் கோலத்தையும் என் கண்ணாற் கண்ட பொழுது, எனக்குண்டான வயிற்றெரிச்சலையும் கொதிப்பையும் இந்தக் கடிதத்தில் எழுத முடியாது. மஞ்சட் காவியும் செம்மண்ணும் கலந்தாற்போன்ற ஒரு பழங் கந்தற் சேலையை உடுத்திருந்தாள் உன் அத்தை. கழுத்திலோ காதிலோ யாதொரு நகையுமில்லை; ஒரு வெள்ளைப் பாசியும் கிடையாது. என் அத்தானுடைய உடையும் அதற்கிசைந்தேயிருந்தது. நான் போனபின், புது வேஷ்டியும் சேலையும் வாங்கிக் கொடுத்து இருவரையும் கட்டிக்கொள்ளச் சொன்னேன். மகேந்திரம் போய் வந்த வழிச்செலவிற்காக, உன் அத்தை மைலாப்பூரில் அடைவுபோட்டிருந்த சுமார் பத்து ரூபாய் பெறுமான சமயற்பாத்திரங்களையும் திருப்பிக் கொடுத்தேன். காதிலும், கழுத்திலுமாவது ஏதேனும் நகை வேண்டுமேயென்று நினைத்து தெற்குத் தோப்பு உன் பெரியப்பா செயர்மென் நாயுடுவுக்குத் தந்தி கொடுத்து இருநூறு ரூபாய் வருத்தி, ஒரு தோடும் அட்டியலும் வாங்கியிருக்கிறேன். இன்றிரவு, நல்ல நேரத்தில், ஆலயத்துக்குப் போய் அத்தான் கையினால் அந்த நகைகளை அக்காளுக்குப் பூட்ட வேணுமென்று நினைத்திருக்கிறேன்.

இனி, அவர்கள் இருவரையும் ஊருக்கு வரும்படி அழைத்ததில், முதலில் அநேக ஆக்ஷேபணை சொன்னார்கள். நச்சு முதலி ஆயுள்வரை சென்னைக்குத் தெற்கே கால் வைப்பதில்லையென்று சொன்னார்கள். ஆனால், பாற்கடலுக்கு இரண்டு மூன்று ஜில்லாவுக்குத் தெற்கேயிருக்கிற கொத்துவால் தோப்பில் அவன் பூச்சுப் பலியாதென்றும், சும்மா பயமின்றி வரலாமென்றும் சொன்னேன். அதன்பின், இருவரும் என் பேரில் அநேக குற்றம் சாட்டி மிகவும் கண்டித்தார்கள். அவர்களிருவர்க்கும் ஜென்ம விரோதியாகிய நச்சுமுதலியிடம், நான் வெட்கமானமின்றி உறவாடியதுங் காணாமல், அவன் குடும்பத்தில் இரண்டு சம்பந்தமும் செய்துவிட்டேனென்று இருவரும் என்னை ஓயாமல் சண்டைபிடிக்கிறார்கள். அத்தோடு, என் ராதா, உன் கதியைக்கேட்டு, உனக்காக இருவரும் அளவற்ற வருத்தமடைவதோடு, உன்னை நான்தான் கெடுத்துவிட்டேனென்று உன் அத்தை என்னை வைது திட்டுகின்றாள். உன் தாய் அநந்தகல்யாணியின் கதியை நினைந்தும் வருந்துகின்றார்கள். உன்னைப்பற்றிய கவலையினால்தான் அவளும் மனம் நொந்து உடல்வாடியிறந்திருப்பாளோவென்றும் சந்தேகிக்கிறார்கள்.

இதையெல்லாம் கேட்டவுடன், என் அருமைக்கண்மணியாகிய ராதா, எனக்கும் உன்னைப்பற்றிய வருத்தம் அதிகப்படுகிறது. உனக்கும், உன் அம்மைக்கும்; உன் அத்தைக்கும், உன் அம்மானுக்கும், உன் பாட்டிக்கும் பிரியமில்லாத விரோதி வீட்டில் உன்னைக்கொடுத்து வீணாய்க் கெடுத்து விட்டேனேயென்ற கவலை என் மனத்தையறுத்துக்கொண்டிருக்கிறது. மற்ற எல்லார்க்கும் க்ஷேமகாலம் பிறந்தும், நீயொருத்தி மட்டும் இப்படியிருப்பதை நினைக்க, என் ராதா, என்னால் பொறுக்கமுடியவில்லை.

இன்று, வியாழக்கிழமை தெற்கே சூலமென்று, நாளையதினம் புறப்படுவதற்கு இருவரும் சம்மதித்திருக்கின்றார்கள். அநேகமாய் சனிக்கிழமை காலையில் நாங்கள் மூன்று பேரும் வந்து சேர்வோம். இதைப் பாட்டிமார்க்கும் சொல்லு.

உனது அன்புள்ள
பி. ஆர். நந்தகோபன்.''

என்றிவ்வாறு கடித முழுவதையும் விழித்த கண்ணிமையாமல், நின்ற நிலையிலேயே, ஆனந்தமும் ஆச்சரியமும் கலந்த ஓயாத பெருமூச்சுடன் மடமடவென்று வாசித்து முடித்துவிட்டு, 'பாட்டி கேட்டாயா? என்ன ஆச்சரியம்! இன்றைக்கு என்ன கிழமை என்றாள்.

பூசை:—(அடங்காத பெருமகிழ்ச்சியால் பிரமித்து) தாயே, இன்று வெள்ளிக்கிழமை; இன்னொருதரம் வாசி. தெய்வமே, உன்னை நம்பினதற்கு, இந்தச் சொல்லாவது கேட்டேனே! அம்மா, வாசி.

ராதா:—(மலர்ந்த நகைப்புடன்) வெள்ளிக்கிழமையா பாட்டி, அம்மானும் அத்தையும் நாளை வந்துவிடுவார்களா? (என்று கடிதத்தை மறுபடியும் விரித்து, மெல்ல நிறுத்தி நிறுத்தி, இடையில் வியாக்யானம் செய்துகொண்டே வாசித்தாள்.)

அனைத்தையும் கேட்ட பூசையாச்சி அடைந்த ஆச்சரியத்தையும், அதினுமதிகமான ஆநந்தத்தையும் யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும்! இருபத்தைந்து வருஷகாலமாய்ப் பிரிந்திருந்த தன் அருமை மகளும் மருமகனும்—மணக்கோலத்துடன் மாயமாய் மறைந்து சென்ற மக்கள் இருவரும்—செத்தவர் திரும்பி வந்தாற்போல்—திடீரென்று வந்துவிட்டால், பெற்று வளர்த்த அன்னையடையும் மகிழ்ச்சிக்களவுண்டா? "மறுநாள் சனிக்கிழமை காலைப்பொழுதும் வருமா! அவர்களையும் கண்ணாற் காண்போமா!" என்ற அடங்காத ஆவலுடன் பூசையாச்சி தனக்குள் "என் செல்வமே, என் கற்பகக் கண்மணியே, நீ இதுவரையிருந்தாயா! உன் அத்தான்—உன் கணவன்—கார்த்திகேயனுமிருந்தானா! இருவரும் முடிவில் சேர்ந்துவிட்டீர்களா! வந்துவிட்டீர்களா! நாளைக்காண்பேனா! கண்டு களிப்பேனா! எத்தனை நாளாயிற்று! எத்தனை வருஷமாயிற்று! சற்று நேரத்திற்கு முன்தானே உங்களிருவர் பேச்சையும் அந்த டாக்கிட்டரிடம் பேசிக்கொண்டிருந்தேன்! உன் பேச்சைத் தொடங்கும் பொழுதே கடியாரத்தில் மணியடித்ததே! "மணி யடிக்கிறதே!" என்று நினைத்தேனே! அந்தப்படியே வந்துவிட்டீர்களே!" என்று பலவாறாய் நினைந்து, "எப்போது பொழுதடையும்! எப்போது விடியும்!" என்று, மணியையும் நிமிஷத்தையும் எண்ணிக்கொண்டே, தன் வேலைகளைப் பார்த்து முடித்து, மறுநாள் வரப்போகும் தன் மகளுக்கும் மருமகனுக்கும் சமையல் செய்வதற்கு வேண்டிய சாமான்களையும் இரவே தயார் செய்துவைத்துவிட்டுப் படுத்துக்கொண்டாள். படுத்தாலும், பூசையாச்சிக்கு நித்திரை "வரேன்" என்கின்றது; இரவு 'கழியேன்' என்கின்றது! வெள்ளிக்கிழமை ஒருநாள் இரவையும் பூசையாச்சி ஒரு யுகமாய்க் கழித்தாள். இனி இந்த சுவிசேஷத்தைக் கேட்ட அன்னபூரணியும் தன் பங்குக்குள்ள சந்தோஷத்தையடைந்தாளாயினும், தனக்குள் "ஐயோ! உலகத்தில் காணமற்போன மக்களையாவது மறுபடியும் காணலாம்! ஆனால், கண்காணமாண்டுமடிந்த என் மகளை இனிக் காணப்போகிறேனா?" என்று தன் மகள் அநந்தகல்யாணியை நினைத்து, உள்ளில் வருந்திக்கொண்டும், வெளிக்கு மகிழ்ந்துகொண்டும் நெடுநேரம் வரை சம்பந்தியுடன் பேசிக்கொண்டிருந்து விட்டுத் தூங்கினாள். இத்தனை விந்தையிலும் பாதி தெரிந்தும் பாதி தெரியாமலும் விழித்த மாதவனும் அவளோடு தூங்கினான்.

(தொடரும்)

நரைமயிரை
அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் **விவலன்** ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே **விவலன்** எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு 15)
பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி,
260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

நமது சிறுகதை

சோதனை

——: :——

(அப்பா)

"நீ சொல்வதெல்லாம் உனக்கென்னமோ விளையாட்டாயிருக்கிறது. நிஜமாக, அப்படி விளையாடத் துணியாதே; ஒருகால் அது வினையாக முடியலாம்——...ஏன் பதில் சொல்லவில்லை ராஜு!"

"என்னமோ, இதில் எனக்கும் ஓர் ஆசை ஏற்பட்டு விட்டது. அது எதுவரைபோய் நிற்குமோ தெரியவில்லை. என்னவானலும், நீ என்னைக் கைவிடாதே மணி."

* * * *

ஜயா, ஒரு ஜில்லா முன்ஸீபின் புதல்வி. ரூபகுண தன ஸம்பத்துக்கள் நிறைந்தவள்; அனுகூலனை பர்த்தாவையும் அடைந்துள்ள அவள் வாழ்க்கை மிக இனிதாகவே நடைபெறலாயிற்று. அவள் கணவனுகிய நடராஜன், ரெவினியூ போர்டாபீஸில் 250 ரூபா சம்பளம் வாங்கிவந்தான். அதிக தடபுடல்களில் ஈடுபடாமல் ஒதுக்கமாகவும் கண்ணியமாகவும் வாழ்ந்துவந்தான். அவனுக்குப் பெற்ரேர் இல்லை. ஸஹோதரி ஒருத்தி, நெல்லூரில் ஹெட்மாஸ்டராயிருந்த கணவனுடன் வசித்தாள். ஆகவே, குடும்பத்தொல்லைகள் அதிகமில்லாமல், ஸந்தோஷமாகவும் ஸௌக்யமாகவும் காலக்ஷேபம் செய்து வந்தான்.

ஆனந்தகரமான அவர்களின் இல்வாழ்க்கையில் சில நாட்களாக ஏதோ மாறுதல் ஏற்பட்டிருப்பதாக ஜயாவுக்குத்தோன்றியது. எப்படி என் என்பவையொன்றும் அவளுக்குப் புலனுகவில்லை. சரியாக ஐந்தரை மணிக்குள் வீடுவந்து சில நிமிஷங்களில் ஜயாவுடன் கடற்கரை செல்லத் தயாராகும் நடராஜன், சில தினங்களாக எட்டுமணிக்குமேல் வரவும், அதன் பிறகும் சுமுகமாகப்பேசாமல், கட்டிலில் சோர்ந்து படுத்துக்கொள்ளவுமானன். ஜயா இதைப்பற்றி நடராஜனிடம் கேட்டதும், அவன், சள்ளென்று எரிந்து விழுந்தான். "சட், இதென்ன விசாரம் உனக்கு. உன் வேலையைப்பார்த்துக்கொண்டு போ" என்றுன். அதுவரை ஒரு சுடுசொல்லும் கேட்டறியாத ஜயா, சிறிது திகைத்து நின்றுவிட்டுப் பிறகு அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாள்.

பின்னும் சில நாட்கள் கழிந்தன. நடராஜன் இரவு பத்து மணிக்குக் குறைந்து வருவதில்லை. மிகவும் தளர்ச்சியடைந்து, மயங்கிய கண்களுடன் வரும் கணவனைப் பார்த்த ஜயாவுக்கு உள்ளூர ஏதோ பயம் தோன்றியது. கெட்ட வழக்கங்கள் ஏதாவது அவனை ஆட்கொண்டு விட்டதோ! அவனது நண்பர்களில் எவரும் அப்படிப் பட்டவரல்லவே, டாக்டர் மணியன், நடராஜனின் பிராண சிநேகிதன்; அவன் மகா உத்தமனுயிற்றே. பின் யார்தான் நடராஜனின் இம்மாறுதலுக்குக் காரணமாயிருக்கக்கூடும்?

இவ்விதச் சிந்தனைகளுடன் நடராஜன் படுத்திருந்த கட்டிலருகே நின்றுள் ஜயா. அவன் மேலிருந்து ஏதோ ஓர்வித வாசனை—சாராய நாற்றம்—வீசியதாக அவளுக்குத் தோன்றவும் : தூக்கி வாரிப் போட்டது. சமாளித்துக் கொண்டு அவன் சட்டைப் பையில் வெளியே நீட்டிக் கொண்டிருந்த ஓர் கடிதத்தை எடுத்தாள். பிரித்துப் படித்தாள். ஒரு கம்பெனியில், வாங்கிய சீமைச் சாராய வகைகளின் விலைகளைக் குறிக்கும் பில் என அறிந்தாள். அவள் விரல்கள் நடுங்கின. கடிதம் கீழே விழுந்தது. "ஐயோ, எந்தப் பாவி இவரைக் கெடுத்துவிட்டான்" என்று முணுமுணுத்தாள்.

நடராஜன் மெதுவாக மறுபுறம் திரும்பினன். கண்கள் பாதி திறந்திருந்தன. ஜயா அவனை எழுப்ப முயன்றுள். அவனே, ஆங்கிலத்திலும்; தமிழிலும் சரமாரியாக வைதுவிட்டு முன்போல் படுத்துக் கொண்டான். அன்றிரவு முழுவதும் ஜயா தூங்கவேயில்லை.

மறுநாள் அவன் எழுந்திருந்து பல் துலக்கிய பிறகு, பரிசாரகனுக்குப் பதில், கையில் காப்பியுடன் நின்ற ஜயாவைப் பார்த்தான். முகத்தைச் சுளித்து மறுபுறம் திரும்பிக் கொண்டான். ஜயா காப்பியை மேஜைமேல் வைத்துவிட்டு, "என்னைப் பார்த்தால் முகத்தைத் திருப்பிக்கொள்ளும்படி இப்போ என்ன வந்துவிட்டது" என்று கேட்டாள்.

நடராஜன், "இந்தா, அதிகப்பிரசங்கித்தனமாய் ஏதாவது சொன்னுயோ, பல்லைத் தட்டி விடுவேன். பத்திரம்."

ஜயா, "ரொம்ப நல்லது. ஒவ்வொரு நாளும், என் வீட்டுக்கு வரப் பத்து மணிக்கு மேலாகிறது. இப்போ சில நாளாக ஏன் புதுமாதிரியாயிருக்கிறீர்கள்? எந்த விதமான கெட்ட வழக்கங்களும், பிடிபடாதென்று பெருமையடித்துக்கொண்டீர்களே, இப்பொழுதேன், இந்தக் கொடிய குடிப்பழக்கத்திற்கு......?"

நாற்காலியைப் பின்னல் தள்ளிவிட்டு, கையை ஓங்கிக் கொண்டு சென்றுன் நடராஜன். ஜயா, பாதிப் பேச்சில் நிறுத்தி, பயத்துடன் இரண்டடி பின்சென்றுள்.

"அதிகப்பிரசங்கிக் கழுதை, உபதேசமா பண்ணுகிருய் எனக்கு?"

"கோபித்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் நடத்தை பிசகினல், அதனல் ஏற்படும் பலாபலன் என்னையும் பாதிக்காதா—நீங்களே கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உங்கள் சுபாவம் இப்படியாகுமென்று நான் கொஞ்சங்கூட நினைக்கவில்லையே!". அவள் கண்களில் நீர் நிரம்பியது.

"அழுவதைப்பார், இப்போ எனக்கென்ன வந்துவிட்டது."

"வந்தது போதும். இந்தக் கெட்ட வழக்கத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும்."

"ஓஹோ, எஜமானி உத்தரவோ, சரி சரி. போதும். உன் அதிகாரத்தையெல்லாம் ரொம்பக் காட்டாதே. ராத்ரி பத்து மணியானல்—என்னகுடி முழுகிப் போச்சு?" என்று சொல்லிக்கொண்டே, சட்டைகளை மாட்டிக்கொள்ளலானுன்.

புண்பட்ட நெஞ்சுடன், "இப்போ புறப்படுகிறீர்களே, சாப்பாட்டுக்கு—" என்று ஜயா சொல்லி முடிக்குமுன், நடராஜன் படியருகில் போய் நின்று திரும்பி, "நோட்டீஸ் கொடுக்கணுமோ. சாப்பாட்டுக்கு வரமாட்டேன். கிண்டிக்குப் போறேன்" என்று சொல்லிவிட்டுத் தடதடவென்று படிகளில் இறங்கிச் சென்றுன்.

கிண்டி என்றதும் ஜயாவுக்கு இடி விழுந்ததுபோலிருந்தது. அப்படியே ஸ்தம்பித்துக் கீழே உட்கார்ந்துவிட்டாள்.

சில தினங்கள் சென்றன. ஜயா மனக்கவலையினல் உடல் மெலியலானுள். நடராஜன் இல்லாத சமயத்தில் பெட்டியைத் திறந்து பாங்கிக் கணக்கைப் பார்த்ததில், 5000 ரூபா வரை குறைவதாக அறிந்தாள். மேஜையறைகளிலிருந்து அகப்பட்ட சில கடிதத் துண்டுகளிலிருந்து, அத்தனை ரூபாயையும், கிண்டி ரேஸ், குடி, ரங்காட்டம் இவற்றில் தொலைத்துவிட்டதாகத் தெரிந்துகொண்டாள். அப்பெண்மணியின் மனக்கிலேசத்தையும், நன்மொழிகளையும் நடராஜன் சிறிதும் பொருட்படுத்தவேயில்லை. ஏதாவது கேட்டால், எரிந்து விழுவதும் அடிக்க வருவதும் வழக்கமாகிவிட்டது. வரவர ஜயாவுக்கு வெறுப்பு ஏற்பட்டது. எப்படி

(31-ம் பக்கம் பார்க்க.)



கூனூர் கெரோலினு தேயிலை தோட்டத் தொழிற்சாலையில் சமீபத்தில் தீவிபத்து ஏற்பட்டபிறகு எடுத்த படம்.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

வாஸுதேவ வரகுண மாமவ (வாஸு)

அநுபல்லவி

வாஸவ ஹ்ருதய நிவாஸ சித்விலாஸ (வாஸு)

சரணம்

1. நீரஜநயனகன நீலஸுஜனபரி—வாரயதுவீர ஜலதிகம்பீர (வாஸு)
2. ஸாகரசயன பவஸாகரதாரக—பாகவதப்ரிய த்யாகராஜநுத (வாஸு)

II

வாஸுதேவ	—வஸுதேவருடைய புத்திரரே!
வரகுண	—சிறந்த கல்யாண குணங்களையுடையவரே!
வாஸவ ஹ்ருதய நிவாஸ	—இந்திரனுடைய மனத்தைக் கோயிலாகக் கொண்டவரே!
சித்விலாஸ	—சித்விலாஸரே!
நீரஜநயன	—தாமரை யிதழையொத்த கண்களையுடையவரே!
கனநீல	—மேகத்தைப் போன்ற நீல நிறத்தையுடையவரே!
ஸுஜன பரிவார	—ஸாதுஜனங்களாற் புடை சூழப்பட்டிருப்பவரே!
யதுவீர	—யதுகுல வீரரே!
ஜலதிகம்பீர	—ஸமுத்திரத்தைப் போன்ற கம்பீரத்தையுடையவரே!
ஸாகரசயன	—க்ஷீராப்தியில் பள்ளிகொண்டவரே!
பவஸாகரதாரக	—பிறவிக்கடலைத் தாண்டச் செய்பவரே!
பாகவத ப்ரிய	—பாகவதர்களுக்குப் பிரியமானவரே!
த்யாகராஜநுத	—தியாகராஜனால் கொண்டாடப்பட்டவரே!
மாம் அவ	—என்னைக் காப்பாற்றும்

III

இது முற்றிலும் ஸம்ஸ்க்ருதக் கீர்த்தனையாகும்.

[இந்தக் கீர்த்தனத்தின் பாடம் மெஸர்ஸ் ஆதி அண்டு கம்பெனியாரின் அச்சிட்ட பிரதிகளில் வேறாகக் காண்கிறது. பிரம்ஹஸ்ரீ நரஸிம்ஹ பாகவதரவர்களுடைய பதிப்பில் இது காணப்படவில்லை; அதற்கு இரண்டாவது பாகமாக வெளியிட அவர் உத்தேசித்திருந்த கீர்த்தனைகளில் இது ஒன்றென்றும், இதன் சரியான பாடாந்தரம் இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளதேயாகு மென்றும் கீர்த்தனாசாரிய-அபிநவ த்யாக ப்ரம்ஹம் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் கூறி எனக்குக் கற்பித்தார். அதன்படியே இங்கு பிரசுரித்திருக்கிறேன்.

ஆதி அண்ட் கம்பெனியாரின் பதிப்பில் சரணங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:—

“1. ஸாகர சயன பவஸாகர தாரக (வா)
2. நீரஜ நயன கனநீல ஸுஜனபால (வா)
3. பாகவதப்ரிய த்யாகராஜார்ச்சித (வா)”

வரகுண:—ஸ்வாமிகள் பல விடங்களில் பகவானை ஸகுணனாகவே பாவித்திருக்கிறார். ‘அநுராகமுலேனி’ என்ற கீர்த்தனத்தில் தமக்கு ஸகுணோபாஸனையே பரம த்ருப்தியைக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார். இது கவனிக்கத் தக்கது.

வாஸவ ஹ்ருதய நிவாஸ:—கோபர்கள்மீது கோபங்கொண்டு அதிக மழை பொழிவித்த இந்திரன், அதை அநாயாஸமாகக் கோவர்த்தன கிரியைத் தாங்கித் தடுத்த ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிடம் சரண்புகுந்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றானென்ற வரலாறு இங்கு கவனிக்கத் தக்கது.

ஸுஜன பரிவார, ஜலதி கம்பீர:—இதே ப்ரயோகங்கள் ‘எல நீ தயராது’ என்ற அடாணா கீர்த்தனையில் வந்திருப்பதைக் கவனிக்கவும்.

ஸாகரசயன, பவஸாகரதாரக:—ஒரு கடலிற் படுத்திருப்பவருக்கு ஒரு கடலைத் தாண்டச் செய்வதென்ன, ச்ரமமான காரியமா?

கீர்த்தனை சிறியதாயினும் அழகான யதிப்ராஸங்களையும் ரம்யமான வர்ண மெட்டையும் உடையதாயிருக்கின்றது.

(12-ம்பக்கம் பார்க்க.)

வந்துவிட்டது! வந்துவிட்டது!

பிராட்காஸ்ட்

Broadcast

ரிகார்டு நேயர்களுக்கும், சங்கீத அபிமானிகளுக்கும்

ஓர் நற்செய்தி!

சென்ற கொஞ்ச நாட்களாக எங்கள் இருப்பில் இல்லாத கீழ்க்கண்ட ரிகார்டுகள் இப்பொழுது வந்திருக்கின்றன. வாங்க முந்துங்கள்!

கும்பகோணம்-ராஜமாணிக்கம் பிள்ளை

G. R. 2408
பிடில் — தன்யாசி

எம். எஸ். விஜயாள்

B. 2027
பாரத நாடு—ஹி. தோடி
சென்ற காரியம்—பூ. கல்யாணி

ஸ்வாமி பாகவதர்

B. T. 2067
பால கோபால
பாகம் 1 & 2 —பைரவி

சித்தூர்-சுப்ரமணியபிள்ளை

R. 4059
மதுரா நகரிலோ—ஆ-பைரவி
ராமா நீபை தனக்கு—கேதாரம்

R 4060
எமி நேரமு—சங்கராபரணம்
பாகம் 1 & 2

R. 4006
மரியாத காதய்யா—பைரவி
நீ வண்டி தெய்வமு—தோடி

R. 4004
மாமயிலே—ஹம்ஸநந்தி
வள்ளிமணவாளா—ஹி.காபி

சுப்புலக்ஷ்மி

B. G. 2068
ஸ்ரீ ரகுகுல—உசேனி
பாகம் 1 & 2

B. G. 2352
ஒரு தரம் சரவணபவா ராகமாலிகை
பாகம் 1 & 2

G. R. 2383
சந்திரனே—வி. பைரவி
தாயே எழைபால்—பைரவி

B. T. 2047
நகுமோமு—ஆபேரி
பாகம் 1 & 2

செம்பை-வைத்தியநாத பாகவதர்

R. T. 4002
அம்பா நாத—தோடி
பாகம் 1 & 2

R. T. 4003
சரவிருஹ—நாட்டை
ச்யாம சுந்தர—தன்யாசி

G. T. 4057
கனகசபை—சுருட்டி
இதுதானோ தில்லை—பியாக்

G. T. 4058
பராசக்தி—சாவேரி
ஹரசிவ சம்போ—காபி

நூதன டிராமா செட்

ராதா கிருஷ்ண
நான்கு ரிகார்டில்

"மனோரஞ்சனி"
ஐந்து ரிகார்டில்

கேளுங்கள்!
கேட்டால் வாங்குவது நிச்சயம்

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்

313, எஸ்பிளனேட் - மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொழும்பு. | 12, வாடர்லு தெரு, கல்கத்தா. | 16, ராமபார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S. & S. S.க்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—

தி இண்டியன் பிலிம் ஏஜென்ஸி, பினங்-சிங்கப்பூர்.

IV

பிலஹரி

ஆதிதாளம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 29-வது கர்த்தா ராகமான (தீர) சங்கராபரணத்தில் ஜன்யம். ஔடுவ ஸம்பூர்ண ராகம். ஸரிகபதஸ்-ஸ்நிதபமகரிஸ என்று நடை. சதுச்ருதி ரிஷப, அந்தரகாந்தார, சதுச்ருதி தைவதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். 'பதநிப'-'பதநிதப'-'பதநி பதப' என்று திரும்பும் இடங்களிலெல்லாம் கைசிகி நிஷாதமே பேசும். 'ஸ்நிதப' என்பதுபோல் அவரோஹணத்திலும் 'ஸநிஸ்' என்றது நிஷாதத்தோடு திரும்பும் இடங்களிலும் காகலி நிஷாதமும் பேசுகின்றது. ஆகையால் இது பாஷாங்க ராகமாகும். இதைக் குறிப்பதற்காகவே ஸங்கீத வித்வான்கள் வேடிக்கையாக (தனி) தநியாக வந்தால் சிறியதும், சனி (ஸ்நி)யாக வந்தால் பெரிதுமாக நிஷாதம் பேசும் என்று கூறுகிறார்கள். இந்த ராகத்தில் சில பிரஸித்த வித்வான்களின் ஸாஹித்யங்களில் 'ரிகமா' என்றும் 'பதநிஸ்' என்றும் பிரயோகங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை சாஸ்திர ஸம்மதமல்ல என்று பெரியோர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பலவிதமான தாடு ஸ்வரப் பிரயோகங்கள் இந்த ராகத்திற்கு ரஞ்சகத்தை யளிக்கின்றன. 'ரிகப மகா—பாதநிபா-மகபதஸா-ஸ்நிநிதஸ்ா-தரிஸ்நிதப-தக்ரிஸ்நிதப-ஸ்ரிக் ம்க்க்ரிஸ் நிதா-ரிகதபா-ஸ்தநிபா-முதலிய பிரயோகங்கள் மிகவும் ரஞ்சகமாக விளங்குகின்றன. ஆதியில் இது மாலையில் பாடப்படும் ராகமாயிருந்து இப்போது காலையில் பாடப்படுவதாக மாறியுள்ளது.

பல்லவி

பா ; பா	தாபாமா	காரீ	ஸா ஸா ;	ஸா	நீ நீதா	ஸா
வா ; ஸுா	தே...வ	வர	கு ண ;	மா	• ம	வ
பா ; பா	பதநிதபம	காரீ	ஸா ஸா ;	ஸா	நீ நீதா	ஸா
வா ; ஸுா	தே...வ	வர	கு ண ;	மா	• ;ம	வ
பா ; பா	ஸ்நிதாபா	மகரீ	ஸா ஸா ;	ஸா	நீ;நீதா	ஸா
வா ; ஸுா	தே...வ	வர	கு ண ;	மா	ம	வ
ஸ்ா ; ஸ்ா	ஸ்நிதாபா	மகரீ	ஸா ஸ்ா ;	ஸா	நீ;நீதா	ஸா
வா ; ஸுா	தே...வ	வர	கு ண ;	மா	நீம	வ
பதஸ்ா ஸ்ா	ஸ்நிதாபா	மகரீ	ஸா ஸா ;	ஸா	நீ;நீ தா	ஸா
வா...ஸுா	தே...வ	வர	கு ண ;	மா	ம	வ
பதஸ்ரிக்ரி	ஸ்நிதாபா	மகரீ	ஸா ஸா ;	ஸா	நீநீ தா	ஸா
வா...ஸுா ••	தே...வ	வர	கு ண ;	மா	ம	வ
(வாஸுா தேவ)						

அனுபல்லவி

மாகா பாதா	ஸாஸ்ா	ஸாஸ்ா	ஸ்ா ; ஸ்ா	ஸ்ா	நீ தா	பாதா
வா...ஸ வ	ஹ்ருத	யுநி	வா ; ஸ	சித்	விலா	ஸ
பாகா பபதா	ஸ்ாரிக்	ரீஸ்ா	ஸ்ா ; ஸ்ா	ஸ்ா	நீ தா	பாதா
வா...ஸ வ	ஹ்ரு த	யநி	வா ; ஸ	சித்	விலா	ஸ
மாகா பாதா	ஸாரிக்	ரீஸ்ா	க்ாரீ ஸ்ா	நீ	நீ தா	ஸ்ா ஸ்ா
வா...ஸ வ	ஹ்ரு த	யநி	வா ஸ	சித்	விலா	ஸ
ஸ்ா ஸ்ா	ஸ்நிதாபா	மகரீ	கா பா ; ;		; ;	; ;
வா ஸுா	தே...வ	வர	கு ண ; ;		; ;	; ;

சரணம்

பா பா பா	பா மா கா	ரீஸா	ஸநி தாதா	ஸா	ரீ கா	பா பா
நீ ர ஜ	ந ய ன	கன	நீ......ல	ஸுா	ஜன	பரி
மாகா பாதா	ஸ்ாரிக்	ரீஸ்ா	க்ா ரீ ஸ்ா	நீ	நீ தா	ஸ்ா ஸ்ா
வா ரய	து வீ	ர	ஜ ல தி	கம்	பீ	ர
ஸ்ா ஸ்ா	ஸ்நிதாபா	மகரீ	கா பா ; ;		; ;	; ;
வா ஸுா	தே...வ	வர	கு ண ; ;		; ;	; ;

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ். B. 6

MUCH PLEASED

சென்னை (சாம்பியன் ரீப்ஸ்)யிலிருந்து மிஸ்டர்......24—9—36உ யிட்டு எழுதுவதாவது:—"வசீகரன் மூலிகை" ரொம்ப திருப்தியளித்தது; விசேஷ பலன் கிடைத்தது. இரண்டாவது நல்ல........ "திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. **2. வியாபாரமும், தொழிலும்:**—நிச்சயமான தொழில்அபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 **3. வியாஜ்யங்கள்:**—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 **4. வியாதிகள் :**— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 **5. உத்தியோகம்:**—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. **6. பரீக்ஷைகள்:**-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 **7. சத்ருக்களை ஜெயித்தல்:**—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 **8. கிரஹ தோஷம்:**-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. **9. ஆரோக்யமும், செல்வமும்:**—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P O SALKIA   HOWRAH

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்; 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

அதிசய உண்மைக் கதைகள்

தந்தையின் தியாகம்

(ஸ்ரீமான் எஸ். ரங்கராஜ ஐயங்கார், எம். ஏ. பி. எல்)

ஆயிரம் வருடங்களுக்கு முன் ஸ்பெயின் தேசம் முகம்மதியர்களின் வசம் இருந்தது. நபிநாயகத்தின் மதத்தை உலகமெங்கும் ஸ்தாபிக்க வேண்டுமென்ற லக்ஷியமே அராபியர்களையும் துருக்கியர்களையும் அக்காலத்து நாகரீக உலகத்தில் பல உன்னத ராஜ்ஜியங்களை ஸ்தாபிக்கும்படிச் செய்தது. மேற்கு ஐரோப்பாவில் ஸ்பெயின் நாட்டில் ஸ்தாபனமான மூர் சாம்பிராஜ்யம் நாகரீகத்திலும் செல்வத்திலும் பிரஸித்தி பெற்றது. எனினும் அது நீடித்து விளங்கவில்லை. அதற்குக் காரணம் அந்நாட்டில் தேசீய உணர்ச்சி ஜனித்தது என்பதே. அராகன், காஸ்ட்டைல் என்னும் இரண்டு கிறிஸ்தவ ராஜ்யங்களும் அத்தேசத்தில் பிரபலமடைந்து வந்தன. முடிவில் அவை இரண்டும் ஒரு முடிக்கீழ் ஐக்கியமாகின. அதுதான் ஸ்பெயின் சாம்பிராஜ்யம்.

கி. பி. 1291ம் வருடம் காஸ்டைல் மன்னனான ஐந்தாவது சாங்கோ மத்தியதரைக் கடலோரமுள்ள மூர்களது துறைமுகப்பட்டணமான டாரிபா என்பதை முற்றுகையிட்டு தன் வசப்படுத்தினான். எனினும் அதை ஸ்திரமாய் தனது ராஜ்யத்துடன் சேர்க்கும்படியான அவ்வளவு ஆள்பலம் அவனிடம் இல்லை. அவன் அவ்வூரைவிட்டுத் தனது ராஜதானிக்குத் திரும்பிவிட்டபின், பகைவர்கள் அதை மீட்டுவிடுவார்கள் என்று அஞ்சினான். தனக்கு நம்பிக்கையான ஒருவன்வசம் அந்நகரத்தை விட்டுவிட்டுச் செல்வது என்று அவன் முடிவில் தீர்மானித்தான்.

அப்பொழுது அவனிடம் மிகுந்த பக்திகொண்ட அலொன்ஸோ டிகாஸ்மன் என்ற பிரபு, "அரசே, தங்களுக்கு ஆக்ஷேபணையில்லாவிடில் நானே இந்த ஊரைத் தங்களுக்காகப் பாதுகாத்து வருகிறேன். கவலைப்படவேண்டாம்" என்றான். மன்னனும் மகிழ்ச்சியுடன், "அங்ஙனமே செய்வாய்!" என்று ஆசிகூறி, நகரை அவன் வசம்விட்டுவிட்டுத் தன் படைகளுடன் ஏகினான்.

அரசனின் சகோதரன் பெயர் டான்ஜான். அவ்விருவருக்கும் ஜன்மவிரோதம். ஸாங்கோ முடி சூடியபின் அவன் சகோதரன் நாட்டைவிட்டு ஓடிவிட்டான். தானே பட் [illegible] யத்தை ஆளவேண்டுமென்பது அவனதுஎண்ணம். அதற்காக அவன் அந்நியநாடுகளில் சென்று சதியாலோசனைகள் செய்து வந்தான்.

பின் அலொன்ஸோ காஸ்டைல் ராஜ்ய குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகியுள்ளான். அவனது குடும்பத்தாரும் ராஜ குடும்பத்தினர் மாளிகையில் வாசம் செய்தும் பழகியும், வந்தனர். அரசனுக்கும் அவன் சகோதரனுக்கும் மனஸ்தாபம் ஏற்படுமுன், அலொன்ஸோ அவ்விருவருடனும் சகஜமாய் நெருங்கி உறவாடினதுண்டு. அதனால் அலொன்ஸோவின் மூத்த குமாரனை டான்ஜான் தன் குடும்பத்துடன் வைத்துக்கொண்டிருந்தான். தனது சகோதரனுடன் சச்சரவு ஏற்பட்டபின் அவன் தன் பரிவாரங்களுடன் அந்தப் பையனை அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

டாரிபா நகரை ஸாங்கோ பிடித்த செய்தியைக் கேட்ட மொராக்கோ சுல்தானுக்கு மிகுந்த ஆத்திரம் உண்டாயிற்று. அதை எப்படியாவது மீட்டுவிட வேண்டுமென்று அவன் பரபரப்புக் கொண்டான். அந்த சமயத்தில் அவனது சபைக்கு வந்த டான்ஜான், தனக்கு சுல்தான் 5000 பேர்கள் அடங்கிய குதிரைப் படையை அளித்தால்தான் அந்த நகரைப் பிடித்துக் கொடுப்பதாக உறுதிகூறினான். சுல்தானும் அதற்கு இணங்கினான். டான்ஜான் விரும்பிய சேனையும் இதர உதவிகளும் அவனுக்குச் சுல்தானால் உதவப்பட்டன. மூர் ஸைன்னியத்துடன் டான்ஜான் டாரிபா நகரத்தின்முன் நின்றான். அதைத் தன் எஜமானனுக்காகப் பாதுகாத்த அலொன்ஸோவை அழைத்தான். தன்னுடனிருந்த அவன் மகனைக் காட்டினான். "நகரத்துக் கதவுகளை உடனே திறந்துவிடு. இல்லாவிடில் உன் மகனைச் சித்திரவதை செய்துவிடுவேன்" என்று மிரட்டினான்.

அலொன்ஸோ சற்றும் தயங்கவில்லை. கூற்றிலும் கொடிய எண்ணத்தினனான தனது எதிரியைக்கம்பீரமாக நோக்கி "எனது நாட்டிற்கு விரோதமாக உபயோகப்பட வேண்டுமென்று எனக்கு மகன் பிறக்கவில்லை. அதற்கு மாறாக என் நாட்டின் சத்துருக்களை எதிர்க்கவே அவனைப் பெற்றேன். என் மகனை நீர் கொல் [illegible] அதனல்

கேஸரியின்
மூன்று இரத்தினங்கள்

லோத்ரா

கர்ப்பாசய டானிக்

சூதகவலி, சூதகக் கிரமத்தில் தோஷம், அதிக அல்லது குறைந்த இரத்தப் போக்கு, வெள்ளை, வெட்டை, வலி, இழுப்பு, கீல் பிடிப்பு, தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி முதலியவற்றை நிவர்த்திக்கிறது.

அமிர்தா

இரத்த சுத்தி டானிக்

இரத்த மின்மை, அஜீரணம், மலச்சிக்கல், மூளை சோர்வு, பலவீனம், ஹ்ருதயத் துடிப்பு, இந்திரிய ஸ்கலிதம், ஞாபகக் குறைவு, இந்திரிய மெலிவு, பார்வை மந்தம், பித்த மயக்கம், ஸ்திரீ சம்பந்தமான ரோகங்கள், சரும வியாதிகள் முதலியவற்றிற்கு.

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்ப்ளுவென்சா, டைபாயிட், மலேரியாமுதலிய எல்லா வகை ஜுரங்களையும் நிவர்த்திப்பது. ஈரல் பெருக்கம், வயிற்றுக் குலைக்கட்டியையும் அகற்றுகிறது.

காட்லாக்குக் கெழுதுக.

கேஸரி குடீரம்,
எழும்பூர், மதராஸ்.

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட் ரோட்; மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

எனக்கு எல்லையற்ற பெருமையும் உமக்குச் சொல்லொணாத பழியும் ஏற்படுமேயன்றி வேறல்ல" என்று கூறிவிட்டுக் கோட்டைக் கதவுகளை மூடிவிட்டுத் தன்னிருப்பிடத்துக்குச் சென்றான்.

இவ்விதமான நடத்தையை டான்ஜான் எதிர்பார்க்கவில்லை. அலொன்ஸோ புத்திர வாஞ்சையால் கட்டுண்டு கோட்டையை விட்டுவிடுவான் என்று அவன் பலமாய் மனக்கோட்டை கட்டியிருந்தான். அது இடிந்து விழுந்ததைக் கண்டு, அவன் அடைந்த சிற்றத்தையும் ஏமாற்றையும் எப்படி விவரிப்பது; "மூர்க்கப் பயல்! அவனுக்குத் தகுந்த புத்திகற்பிக்கவேண்டும். நான் சொன்னதைச் செய்தே தீருவேன்" என்று உறுமிக்கொண்டே, அவன் நிர்ப்பாக்கியனான சிறுவனை வாளால் வெட்டி வீழ்த்தினான். அந்தோ பரிதாபம்!

அலொன்ஸோவும் அவனது மனைவியும் பொழுதைப் பிரார்த்தனையிலேயே கழித்தனர்.

பொல்லாத எதிரியிடம் வலுவில் அகப்பட்ட உயிர் துறக்கப் போகும் தங்களது கண்மணிக்குக் கடவுள் அருள்புரிய வேண்டுமென்று அவர்கள் கண்ணீர் விட்டு வேண்டிக்கொண்டனர். சிறுவன் குரூரமாய்க் கொல்லப்பட்ட செய்தியை அவர்கள் கேட்டவுடன் அவர்கள் மனம் பட்ட பாட்டை எப்படிக் கூறுவது? எனினும் அவன் அவ்வளவு இளவயதில் தனது தேசத்துக்காகவும் அரசனுக்காகவும் இறந்தது பெருமையேயென்றும் அவன் சாவை ஒரு திருவிழாவைப் போல் கொண்டாட வேண்டும் என்றும் அலொன்ஸோ கூறித் தன் மனைவியைத் தேற்றினான்.

டான்ஜானது பாதகச் செயல் அவனுக்கு யாதொரு பயனையும் அளிக்கவில்லை. அவனது படையாட்களே அவனை நிந்தித்தனர். கோட்டைக்குள்ளிருந்தவர்கள் தனது மகனைப் பறிகொடுத்த அலொன்ஸோவுக்காகத் தாங்கள் போர் செய்யத் தயாராயிருப்பதாகக் கூறினர். முற்றுகை பலிக்கவில்லை. மூர் ஸைந்நியம் பின்வாங்கி ஓடிவிட்டது. டான்ஜானும் மனமுடைந்து மீளாப் பழியுடன் தூரதேசத்திற்குஓடிவிட்டான்

மன்னன் ஸான்கோவுக்குச் செய்தி எட்டியது. அலொன்ஸோவின் பக்தியையும் தியாகத்தையும் மெச்சினான். அச்சமயம் அவன் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தமையால், தானே டாரிபா நகரத்திற்குச் செல்ல முடியாததற்காக வருந்தினார். அலொன்ஸோவுக்கு ஒரு உருக்கமான கடிதமெழுதியனுப்பினார். அதில் அலொன்ஸோவின் தியாகத்தைத் தீர்க்கதரிசி ஆபிரகாமது த்யாகத்துக்கு ஒப்பிட்டான். அவனைத் தனது சபைக்கு வரும்படி விரும்பினான்.

அலொன்ஸோ ராஜசபையை அடைந்த பொழுது அவனை எல்லாரும் மரியாதையுடன் வரவேற்றனர். அரசன் அவனைப் பிரியத்துடன் கட்டித் தழுவிக்கொண்டான்.

அலொன்ஸோவுக்கு நிலங்கள் தனங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டன. உன்னதமான பட்டங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. எனினும் அவனுக்கு அவை அவனிழந்த மகனுக்கு ஈடாகுமோ? அவனது தியாகத்தைக் கேவலம் பணத்தினால் மதிப்பிடக் கூடுமா? அவனது புகழ் என்றைக்கும் அழியாமல் நிற்கும் என்பதில் என்ன ஸந்தேகம் இருக்கிறது?

* * * *

ஒவ்வோருவருக் சம்

இம் மாய நிவாரணி அவசியம்

கத்திவெட்டு, சிராய்ப்பு, பூச்சிக்கடி இவற்றால் நீங்கள் கஷ்டப்பட்டால் ஜாம்—பெக்கையே உபயோகித்து வேதனை ஒழியுங்கள். இவ்வற்புத கிருமிநாச மெழுகு சுத்த மூலிகைகளாலானது. இது சருமத் துவாரங்களின் வழியே ஊடுருவிச் சென்று, வீக்கத்தைத் தணித்து, ரணத்தை ஆற்றுகிறது. நமைச்சல், சொறி, சிரங்கு, காயங்கள் முதலியவற்றிற்கு ஜாம்-பெக் சிறந்த நிவாரணி. பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள் : மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க்டவுன், மதராஸ்,

மிருகக் கொழுப்பற்றதென்பதற்கு உத்தரவாதம்

ஜாம்பெக்

Zam-Buk

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதகக் கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம் பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெர்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெர்ப்ப உத்பத்தியை உண்டு பண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்க விடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும்; பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1-புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண நல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜூவல்லர்ஸ்.

கண்ணோட்டம் - பிரமுகர்கள்

வேலூர் சங்கீத சபையின் ஆதரவில் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் பிடில் பாண்டியத்திற்காக தங்கப் பதக்கமளிக்கப் பெற்ற ஸ்ரீமதி ஆர். வேதவல்லி.

ஸ்ரீமதி பி. பி. வி. பத்மாவதி. ஹிந்து நாடார் சமூகத்தைச் சேர்ந்த இவர் தென் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கை தனவணிக இளைஞர் சங்கத் தலைவரும காங்கிரஸ் வாதியுமான ஸ்ரீமான் ஆர். ௳. எஸ். எம். கதிரேசன் செட்டியார். இவர் சமீபததில் "இலங்கை இந்தியத் தொடர்பு" பற்றி ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார்.

சென்னை நுங்கம்பாக்கம் சரஸ்வதி கான சபையாரால் பரத நாட்டியத்திற்காக தங்கப் பதக்கமளிக்கப்பட்டுள்ள காஞ்சீபுரம் ஸ்ரீமதி கண்ணம்மாள்.



காலஞ்சென்ற, ராமகிருஷ்ண மடத்துத் தலைவரான ஸ்வாமி அகண்டானந்தா.

சர்வதேசிய உரிமைகளுக்காகப்பாடுபடும் நோக்கத்துடன் ஜெர்மனியில் ஒரு கழகத்தை ஸ்தாபித்துள்ள டாக்டர் ஹான்ஸ் கெல்லர்.

சிந்தாமணி

ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் கம்பெனியாரின் தமிழ் பேசும் படத்தின் கதைச் சுருக்கம்.

ஓர் நாள் வைகுண்டத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கும் ருக்மணிக்கும் உண்மையான பக்தி எது என்பதைப் பற்றி வாக்குவாதம் ஏற்பட்டது. தன் வாக்கின் சத்யத்தை நிரூபிக்க பகவான் ருக்மணியுடன் சாதுக்களாக பூலோகம் வந்து அதன்கண் அனேகவிதமான நிகழ்ச்சிகளை ருக்மணிக்குக் காண்பித்துக்கொண்டே செல்கிறார்.

கோடீஸ்வரனான வாசுதேவ மூர்த்தி மூப்பின் காரணமாகத் தன் ஒரே குமாரனான பில்வமங்களிடம் தனது காரியாலயத்தை ஒப்படைக்கிறார். பில்வமங்களின் பால்ய சினேகிதனும் செல்வவந்தனுமான மனோஹரன் என்பான், அவ்வூர் தாசி சிந்தாமணிபால் மோகம் கொண்டு தன் திரவியம் அனைத்தையுமிழந்து, நிர்க்கதியடைகிறான். இவன் வறுமையை அறிந்த சிந்தாமணியின் தாய் ஸ்ரீஹரி அவனை வெறுக்கிறாள். மற்றோர் தனவந்தனான ஆழ்வார் செட்டி, சிந்தாமணியின் வீட்டிற்கு வர பணப்பேய் பிடித்த ஸ்ரீஹரி சிந்தாமணியை ஆழ்வார் செட்டியிடம் சரசமாக இருக்கச் சொல்ல சிந்தாமணி மறுக்கிறாள். மகளின் பிடிவாதத்தை சகிக்கமாட்டாது பிராணனை விடுவதாகப் பயமுறுத்திய தாயாரை சிந்தாமணி சமாதானம் செய்து தன் வீட்டில் வளர்ந்து வரும் மீனாக்ஷியை ஆழ்வார் செட்டியிடம் அனுப்பச் சம்மதிக்கிறாள். ஓர் நாள் சிந்தாமணி, தெருவில் சாதுவும் சாதுனியும் பாடிச்சென்று கொண்டிருக்கும்போது, அப்பாட்டின் சாராம்சத்தை உணர்ந்து தன் கேவலமான பிழைப்பை நினைந்து மனம் உருகினாள்.

வறுமை அடைந்த மனோஹரன் பில்வமங்களை சந்தித்து சிந்தாமணியைப் பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து கூறி அன்று கோவிலில் நடக்கும் அவளுடைய நாட்டியத்திற்கு அழைத்துச் செல்கிறான்; நாட்டியத்தின் பொழுது சிந்தாமணியும் பில்வமங்களும் ஒருவரை ஒருவர் பார்த்து மோகம் கொள்ளுகிறார்கள்; பில்வமங்களும் மனோஹரனும் சிந்தாமணியின் வீடு செல்லுகையில் சாது அவர்கள் முன் எதிர்பட்டு பில்வமங்களிடம் "அவன் கண்களே அவனுக்கு சத்துருக்கள்" என்று எச்சரிக்கை செய்து செல்லுகிறார். நாளடைவில் பில்வமங்களும் சிந்தாமணியும் கணம் பிரியாக் காதலர்களானார்கள்.

சிந்தாமணியின் காதலில் மூழ்கிய பில்வமங்களால் புறக்கணிக்கப்பட்ட மகா உத்தமியான அவன் மனைவி சுசீலை தனது துர்த்திசையை நினைந்து வருந்தி, இதே காரணத்தால் ஏக்கமடைந்து வியாதியுற்ற பில்வமங்களின் தந்தையான வாசுதேவமூர்த்திக்கு சிச்ருஷை செய்து வருகிறாள். சுசீலையின் பரிதாப நிலைமையைக் காணச் சகியாத பில்வமங்களின் குடும்பசினேகிதனான உமாபதி சாஸ்திரி பில்வமங்களை அழைத்து வர சிந்தாமணியின் வீட்டிற்கு வருகிறான். மீனாக்ஷி அவன் வரவையும் தந்தையின் அசௌக்கியத்தையும் பில்வமங்களிடம் அறிவிக்க, அவன் எக்காரணத்தைக் கொண்டும் வரமுடியாதென்று விடையளிக்க உமாபதி வருத்தமுற்று திரும்புகிறான். பின்பு சிந்தாமணியின் வேண்டுகோளுக்கிணங்கி பில்வமங்கள் அரை மனதுடன் வீட்டிற்குச் செல்லுகிறான்.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய ஸில்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலீகளை வாங்கி ஏமாறுதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M. R. V. AIY R & 49, பந்தர் தெரு, மதராஸ்.

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய்தான்

(தபால்செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசனி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும், காமினியா ஸ்னோவின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பில் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, B(MBAY 2

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

குணமுற்றது மலிவுற்றது தீங்கற்றது

"நஞ்சன்கூடு பல்பொடி"

ஹைகோர்ட் உரிமை தீர்ப்பு பெற்றது

தாதாரணம் புதுபாக்கெட்

பாலக்ஸ் ஜிஞ்சிப் கூலாயில் ஜ்வரேக்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

டிப்போ : 42, செட்டி தெரு, கொழும்பு.

201, மொகல் வீதி, ரங்கூன்.

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

வாசுதேவ மூர்த்தியின் புத்திமதிகளும் சுசீலையின் வேண்டுகோளும் சிந்தாமணியின் மோகத்தில் ஈடுபட்ட பில்வமங்களின் காதில் நுழையவில்லை. தன் கடைசி வாழ்நாளிலும் தன் புத்திரன், நற்புத்திகளைப் புறக்கணித்ததாலுண்டான மனோ வேதனையே வாசுதேவமூர்த்தியின் ஆவிக்கு உலையாய் நின்றது. பில்வமங்களிடம் வெறுப்படையச் செய்தது. தன் ஆஸ்திமுழுவதையும் சுசீலாவிற்கே சேரும்படி எழுதியுள்ள பத்திரங்களை அவளிடம் கொடுத்து அவளை ஆசிர்வதிக்க, பதியே பரமபதம் என்று நினைத்துள்ள சுசீலை பில்வமங்களின் பாதங்களில் அவைகளை அர்ப்பணம் செய்து அன்பையும் ஆதரவையும் அளிக்கும்படி அவனை மன்றாடுகிறாள். சுசீலையின் பரிசுத்தமான பிரேமையில் பில்வமங்கள் கணநேரம் தாக்கப்பட்டானாயினும் சிந்தாமணியின் உருவம் அவன் அகக்கண் முன் தோன்றி அவன் நல்லுணர்வை நாசம் செய்தது.

வாசுதேவ மூர்த்தியின் ஆவி பிரிந்தது. நள்ளிரவு; இடியும், மின்னலும், மழையும், புயலும்; சிந்தாமணியின் நினைவு பில்வமங்களின் மனதில் ஊடுருவிச் செல்கிறது. இறந்த தந்தையின் உடலையும் அபலை மனைவியையும் அறவே மறந்து சிந்தாமணியின் வீட்டை நாடிப் புறப்பட்டான். கணவனின் இக்கொடூரச்செயல்காரிகை சுசீலையின் உள்ளத்தைக் கலக்குகிறது. புத்திபேதலித்தது. மாமனின் ஆவி கூவி அழைத்ததுபோலிருந்தது. மெய்மறந்து பதியை நினைத்து, நாதா! நாதா என்று பிதற்றிக்கொண்டே வீட்டை விட்டுக் காரிருளில் வெளிக்கிளம்பினாள். செல்லும் மார்க்கத்தை மறந்து கங்கைக் கரை அடைந்து பிரவாகத்தில் வீழ்ந்தாள்.

பில்வமங்கள் சிந்தாமணியின் வீடு செல்ல ஆற்றைக் கடக்க படகைக் காணாது கரையோரம் மிதந்துவந்த ஓர் சவத்தின் உதவியால் அக்கரை சேருகிறான். சிந்தாமணி விழித்து தன் பக்கலில் ரத்தக் கரையுடன் நின்ற பில்வமங்களைக் கண்டு ஆச்சர்யமுற்று அவன் அவ்விருளில் உள்ளே வந்த விதத்தையும் ரத்தக் குறி ஏற்பட்ட காரணங்களையும் வினவ, பில்வமங்கள் ஓர் கட்டையின் உதவியால் ஆற்றைக் கடந்து கயிற்றின் வழியே சுவரைத் தாண்டியதாகத் தெரிவிக்க, சிந்தாமணி பில்வமங்களுடன் வெளியே வந்து தொங்கிக்கொண்டிருந்தது கயிறு அல்ல என்பதையும் கரையோரம் கிடந்தது கட்டையல்ல, பிணம் என்பதையும் பார்த்து கலவரமும் ஆச்சர்யமும் அடைந்தாள். பின்பு சவமானது சுசீலையே என்றறிந்ததும் பில்வமங்கள் பிரலாபிக்க சிந்தாமணி அவன் செயல்களுக்குக் கடிந்து, பரிதாபப்படுகிறாள். பில்வமங்கள் அவளின் மோஹனாகாரமே தன்னை எல்லா விஷயத்திலும் குருடனாக்கிவிட்டதெனக்கூற, சிந்தாமணி மிகவும் துக்கித்து வாழ்க்கையின் அவலத்தைக் கூறி பகவத்தியானம் செய்ய உபதேசிக்க இருவரும் பரமனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்கிறார்கள்.

முழுதும் மாறுதல் அடைந்த பில்வமங்கள் கிருஷ்ண பகவானைத்தவிர வேறு தியானமும் நினைப்புமில்லாமலிருக்கவும் ஓர் நாள் ஓர் மரத்தடியிலுட்கார்ந்திருக்கும் சமயம் தன்னையே கிருஷ்ணனாக பாவித்து, ராதாவுடன் விளையாடிக் கொண்டிருப்பதாக நினைக்கிறான். அங்கு குடத்தில் தண்ணீருடன் சென்றுகொண்டிருந்த சாதுனியை ராதாவென்று நினைத்து மோகங்கொண்டு அவள்பின் ஓட சாதுனி பதறி வீட்டினுள் ஓடி கதவைத் தாளிடமுயல, சாது இதையறிந்து பில்வமங்களின் மனோ நிலைமையையுணர்ந்து அவன் எண்ணத்தைப் பூர்த்திசெய்வதாக வாக்களிக்கிறார். சாதுனி தன் கணவன் உத்தரவிற்குக் கீழ்படிந்து பில்வமங்களிடம் அணுக, பில்வமங்கள் அவளை ஆலிங்கனம் செய்யப்போகும் சமயம் தன் எதிரில் எலும்புக்கூட்டையும் அதனுள்ளிருந்து சாது மறுபடியும் அவன் கண்களைப் பற்றி எச்சரிக்கை செய்வதைக் காண மனம் பதறி சுய உணர்ச்சியை அடைந்து இச்சைகொள்ளக் காரணபூதமாயுள்ள நயனங்களை இரு ஊசி கொண்டு குத்திக்கொள்கிறான். சாது சமாச்சாரங்களை அறிகிறார். பில்வமங்கள் அந்தகனாய் பிருந்தாவனம் வந்து ஓர் ஆச்சிரமத்தை அடைகிறான்.

சிந்தாமணியும் உலகை வெறுத்து சந்யாசினியாய் கிருஷ்ண பகவானையே நினைத்து பில்வமங்கள் இருக்கும் ஆசிரமம் சேர்ந்து ஒருவரையொருவர் அறிந்து இருவரும் பகவானைக்குறித்துத் தியானம் செய்கிறார்கள்.

பிருந்தாவனத்தில் தவம் செய்துகொண்டிருந்த தவசிகளின் பக்தியைப் பரிசோதிக்க, சாதுனி ஓர் மூடிய பேழையை அவர்களிடம் காண்பித்து பேழையின் மூடி தானாகவே திறக்க அதனுள் இருப்பதைத் தபோபலத்தினால் தெரிவிக்க வேண்டுமெனக் கூற, அவர்களது விடையினால் பேழை திறவாததினால் ஆச்சரியமுற்றுக் கடைசியாக பில்வமங்களிடம் கேட்கவும், எங்கும் நிறைந்த பரம் பொருளே அங்கும் உள்ளான் என்று உரைக்க பேழையின் மூடி தானாக திறந்தது. சாதுவும் சாதுனியும் மறைந்தனர். பேழைக்குள்ளிருந்து கிருஷ்ண பகவான் ருக்மணி சமேதராய் பில்வமங்களுக்கும் சிந்தாமணிக்கும் தரிசனம் தந்து மோக்ஷமளிக்கிறார். தேவர்களும் ரிஷிகளும் பூமாரி பொழிகின்றனர்.

* * * *

சமையலறையில் எறும்புத் தொல்லையா?

பிளிட் பவுடர்

அவற்றைக்கொல்லும்

புகழ் பெற்ற பிளிட் காரரின் தயாரிப்பு.

ஜோதிஷ:மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தசைக்கு புக்தி பலன ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன்பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.

ரூ. 500 இனாம்!

திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதனால்கூட பரவாயில்லை, எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள், பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

நரை போக்கும் தைலம்

நரையை ஒழியுங்கள், இந்தத் தைலம் மயிரின் வெண்மையைப் போக்கி, நல்ல கருமையைத் தரும்; ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். ஏராளமான நற்சாட்சிகள் இருக்கின்றன. சொற்ப நரைக்கு வேண்டிய அளவு தைலம் ரூ. 3. பாதி நரைக்கு ரூ. 5; அதிகமாகவிருந்தால் ரூ. 9. பலனளிக்கத் தவறினால் இரட்டிப்புக் கிரயம் திருப்பிக் கொடுக்கப்படும். ஆங்கிலத்திலேயே கடிதமெழுதவும்.

BALA KALA STORES,
P. O. Kaneismri ag Darbhan.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு) "பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AMMEDABAD

லேடிஸ் செயின்கள்

ஐந்து வித நிறமான சிந்தடிக் கற்களாலும் அல்லது ஒரு கலரிலும் ஆர்டர்படி ரோல்டு கோல்ட் செயின் 3 வருஷ உத்தரவாதத்துடன் அனுப்பப்படும்.

25 அங்குல நீளமுள்ள செயின் 1-க்கு விலை ரூ 4

யூனிவர்ஸல் ஏஜென்ஸி,
தபால் பெட்டி நெ. 28, சென்னை.

நடிக திலகங்கள்
ஒன்றுகூடித்
தோன்றும்

முதல்தரமான
தமிழ் டாக்கி

சென்னை
கெயிட்டி
டாக்கீஸிற்கு
மார்ச்சு மீ
வருகிறது

ஸ்டுடியோ
தேவதத்தா
பிலிம்ஸ் கல்கத்தா.

ராயல்டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸாரின்

இணையற்ற வெற்றி

*

சிந்தாமணி

அல்லது

பில்வமங்கள்

*

மனதிற்கிசைந்த கதை, உள்ளத்திற்குகந்த நடிகர்கள்,
ஆனந்தமளிக்கும் அற்புதப் பாடல்கள்

*

வெகு சீக்கிரத்தில் உங்கள் ஆசியைப்பெற வருகிறது

*

முக்கிய நடிகர்கள்

கே. அஸ்வத்தம்மா	கே. அரங்கநாயகி
எம். கே. தியாகராஜ பாகவதர்	எஸ். எஸ். ராஜாமணி
	ஆர். கோமளம்
வி. மகேஹர்	எப். ஆர். துரைராஜ்
சிறுகளத்தூர் சாமா	ஈ. கிருஷ்ணன்
காமெடியன் எல். நாராயணராவ்	எஸ். மதுரம்

டைரக்‌ஷன் ஒய். வி. ராவ்.

பாட்டுகள் : பாபநாசம் சிவன்

*

படம் வேண்டுவோர் எழுதுக :

RAYAL TALKIE DISTRIBUTORS MADURA

ராயல்டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்,
மதுரை.

மேற்படி படத்தின் முக்கிய பாட்டுகளின் ரிகார்டுகள் எல்லா ஓடியோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸின்

"சிந்தாமணி"

என்னும் தமிழ்ப் பேசும் படம்.

கதாநாயகன் ஸ்ரீமான் எம். கே. தியாகராஜ பாகவதர்.

கதாநாயகி ஸ்ரீமதி அஸ்வத்தம்மா.

(கீழ்ப் படம்) படத்தில் ஒரு காட்சி.

ஸர்ரேயிலுள்ள (இங்கிலாந்து) கிங்ஸ்ஸ்டோன் (அரசர்கள் கல்). 900-ம் வருஷத்திலிருந்து 978-ம் வருஷம் வரையில் இங்கிலாந்தின் அரசர்கள் இக்கல்லின்மீது உட்காரவைத்து மகுடாபிஷேகம் செய்யப்பட்டனர். இப்பொழுது இவ்வழக்கம் அனுஷ்டானத்திலில்லை.

இங்கிலாந்துக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும் கடலில் மிதக்கக் கூடியதும் தரையில் இறங்கக் கூடியதுமான விமானங்கள் சமீபத்தில் முதன் முதலாக உபயோகிக்கப்பட்டன. ஸதாம்டன் துறை முகத்தில விமானத்திலேறுவதற்காகப் பிரயாணிகள் செல்வதைக் காணலாம்.

ஸலமாங்காவில் ஸ்பெயின் கலகத் தலை
கலகக்காரர் கொடியுடன் ஜெர்ம
டத்தின் முன் புறத்தில் ப
இத்தாலியும் பிராங்கோ



ஆகாகான் சாரணர்படையின் ஸ்திரீகள் பகுதியை ஆகாகான் குமாரரான ஆலிகான் மனைவி பார்வையிட்டனர். அவர் ஒரு சாரண ஸ்திரீக்கு ஆகாகான் ஜூபிலி தங்கப்பதக்க மளிக்கிறார்.

லகத் தலைவரான ஜெனரல் பிராங்கோவின் தலைமை ஸ்தானம்.
ர ஜெர்மனி, இத்தாலி தேசக் கொடிகளும் இக்கட்டி
த்தில் பறக்க விடப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியும்
ராங்கோவின் சர்க்காரை அங்கீகரித்துவிட்டன.

லண்டன் கிழக்கிந்திய வியாபாரச் சங்கத்தின் ஆதரவில் மைசூர் வியாபார கமிஷனர் ஸ்ரீமான் ஈச்வரனுக்கு ஒரு விருந்து நடத்தப்பட்டது.

புதுக்கோட்டைக்கருகில் ஜெயினர் கிராமம்.

புதுக்கோட்டைக்கு வடக்கே 24 மைல்தூரத்திலுள்ள செட்டிப்பட்டி என்னும் ஊரிலுள்ள சமணர்குண்டுவில் பூமியில் தோண்டப்பட்ட போது ஜெயினர் கிராமமொன்று அங்கிருந்ததற்கறிகுறியான சாமான்கள் கிடைத்தன. இரண்டு ஜீர்ணமான சிவன்கோவில்களுமிருக்கின்றன. இந்தவிடத்தில் ஒரு ஜெயின மடமிருந்ததாகக் கூறப்படுகிறது. தோண்டி எடுக்கப்பட்ட சில சாமான்களின் படங்களை இங்கு பிரசுரிக்கிறோம்.



சிங்கத் தூண்கள்.



தீர்த்தங்கரரின் உருவச்சிலை.

சில ஜெயின விக்ரஹங்கள்.

(இடது பக்கம்) ஜீர்ணமான ஒரு சிவன் கோவில். மேலே காணப்படும் விக்ரஹம் இங்கிருந்துதான் எடுக்கப்பட்டது.



எம். எஸ். எம். ரெயில்வேயில் சென்னைக்கும் சென்னைக்கருகிலுள்ள சில ஸ்டேஷன்களுக்கும் போக்குவரத்திற்காக உபயோகிக்கப்பட்டுவரும் ரெயில் கார். இது பெட்ரோலினால் ஓடுகிறது.

மற்ற பக்கங்களில்

தென்னிந்தியப் பிரமுகர்கள்	2
விநோதக்கொத்து	4
ஸஹவாஸ ஸ்நேகம் (மஹாபாரதம்)	5
ராதா (தொடர்கதை)	6
சோதனை (சிறு கதை)	9
ஸங்கீதப்பகுதி	10
தந்தையின் தியாகம் (அதிசய உண்மைக் கதை)	13
கண்ணோட்டம்-பிரமுகர்கள்	15
சிந்தாமணி	16
நவநாகரீகம்	25
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி	27
பிரபஞ்ச வர்த்தமானம்	29
தையல் வேலை	33
மரியாதைராமன் கதை	34
யார் பெரியவர் (சிறுவர் பகுதி)	35
வியாதியும் ரோக நிதானமும் (நோயற்றவாழ்வு)	37
கூந்தல் சம்ரக்ஷணி (ஹாஸ்யப்பகுதி)	39

இந்திய வர்த்தமானம்

திருஞான சம்பந்தர் ரிகார்டுகள் பறிமுதல்

சென்னை ஸ்ரீமான் எஸ். நாராயணையர் எழுதிய "திருஞான சம்பந்தம்" என்னும் தமிழ் புத்தகத்தைக் கொண்டு ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் கம்பெனியார் தயாரித்த நான்கு கிராமபோன் ரிகார்டுகள் மேற்சொன்ன புத்தகத்தின் மொழி பெயர்ப்பு முதலியவை பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகச் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். ஹிந்துக்களுக்குள் வகுப்பு த்வேஷத்தை யுண்டுபண்ணக் கூடிய விஷயங்கள் இப்புத்தகத்திலிருக்கின்றனவென்பது சர்க்கார் அபிப்பிராயம்.

* * * *

பி. என். ஆர். வேலை நிறுத்த முடிவு

சுமார் இரண்டு மாதங்களுக்குப் பிறகு பி. என். ஆர். தொழிலாளர் வேலை நிறுத்தம் சென்ற 10-ந் தேதியுடன் முடிவடைந்தது.

* * * *

பொருளாதார ஆலோசனை கூறும் நிபுணர்

இந்தியா கவர்ன்மெண்டிற்கு ஒரு பொருளாதார ஆலோசனையாளரை நியமிப்பதென்ற யோசனை இந்தியா சட்டசபை வரவுசெலவுக் கமிட்டியில் அங்கீகாரம் பெற்றுவிட்டதாயினும் இந்தப் புதிய உத்தியோகஸ்தரின் வேலை, திட்டமாக என்னவென்பது தெரியவில்லை. இந்த நிபுணர் இந்தியராக விருப்பாரெனச் சர்க்கார் உறுதி கூறியிருக்கின்றனர். பின்னர், இதற்கு ஒரு ஐரோப்பியர் நியமிக்கப்படலாமெனத் தெரிகிறது. இந்த நிபுணரைக் கவர்ன்மெண்டார் சென்ற எட்டுமாதங்களாகத் தேடி வருவதாகவும் இன்னமும் தேடி வருவதாகவும் தெரிகிறது.

* * * *

இந்தியாவிலிருந்து ஐந்து 'ஸர்' பட்டதாரிகள்

லண்டனில் மன்னர்பிரான் மகுடாபிஷேகக் காலத்தில் நடைபெறும் ஏகாதிபத்திய பார்லிமெண்டுகள் மகாநாட்டிற்கு இந்தியாவினின்றும் ஐந்து பிரதிநிதிகள் செல்லுகின்றனர். இந்த ஐவரும் ஸர் பட்டதாரிகள். அவர்கள் பின்வருமாறு:—ஸர் மானக்ஜி தாதாபாய், ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கீர், ஸர் ஜாபருல்லா கான், ஸர் அப்துர் ரஹீம், ஸர் லெஸ்லி ஹட்ஸன்.

* * * *

இந்தியத் தீப்பெட்டிகள்மீது தீர்வை

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள் பிரிவினைக்குப் பிறகு பர்மாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது சம்பந்தமாக ஓர் அறிக்கை கூறுவதாவது:—பர்மாவில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள் மீது பர்மா கவர்ன்மெண்டார் கலால் தீர்வையை விதித்தே வருவார்கள். இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு பர்மாவுக்குள் இறக்குமதியாகும் தீப்பெட்டிகள் மீதும் அதே தீர்வை ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து விதிக்கப்படும்.

* * * *

நிஜாம் வெள்ளி விழாக் கொண்டாட்டம்

மே. த. நிஜாமின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் சென்ற சனிக்கிழமை ஹைதராபாத்தில் ஆரம்பமாயிற்று. காலையில் தொழுகைக்குப் பிறகு ராணுவ அணிவகுப்பை நிஜாம் பார்வையிட்டார். இரவில் ஒரு தர்பார் நடைபெற்றது. அதில் அவருக்குப் பொது ஜன உபசாரப்பத்திரமொன்று படித்துக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையில் நிஜாம் கூறியதாவது:— நிலவரி பாக்கி, பஞ்சத் தக்காவிக்

கடன் ஆகியவற்றில் 40 லக்ஷம் ரூபாய் வஜா செய்துவிட ஏற்பாடு செய்திருக்கிறேன். பிரஜைகளின் ஊழியனுகவிருப்பதில் நான் மிகுந்த பெருமையும் மேன்மையுமடைகிறேன். ஜாதிமத வித்தியாசமின்றிப் பிரஜைகளின் க்ஷேமமே எங்கள் முன்னேரின் முக்கிய லக்ஷியமாகவிருந்திருக்கிறது. இதையே நான் பின்பற்றி வந்திருக்கிறேன்.

ஆரம்பக்கல்வி எங்கும் போதிக்கப்படவேண்டும். இதுவே எனது முக்கிய விருப்பமாகும். ஜனங்களுக்கும் ஆரம்பக்கல்வியபிவிருத்தியல் அதிக ஊக்க மேற்படுத்தப்பட வேண்டும்.

இந்தச் சமூகத்தின் பொருளாதாரச் சமூக முன்னேற்றத்தில் நானும் எனது கவர்ன்மெண்டும் மிகுந்த அக்கரை கொண்டிருக்கிறோம். அவர்களிடம் எனக்கு ஆழ்ந்த அன்பிருக்கிறது.

* * * *

வெற்றியடைந்த அபேக்ஷகர் ஜாமீன் ஜப்தி

கல்கத்தாவில் வெற்றியடைந்த காங்கிரஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் தேவகி நந்தன் தேர்தலில் அபேக்ஷகராக நிற்பதற்காகக் கட்டியிருந்த ஜாமீன் பணம் ஒரு ஸிவில் வழக்கு தாவா சம்பந்தமாக ஜப்தி செய்யப்பட்டுவிட்டது. தீர்ப்புப்பெற்ற வாதி மனுக்கொடுத்ததின் பேரில் பணத்தை ஜப்தி செய்யும்படிக் கோர்ட்டார் உத்தரவிட்டனர். (ஜாமீன் கட்டியிருந்த பணம் வெற்றியடைந்த அபேக்ஷகர்களுக்குப் பின்னிட்டுத் திருப்பிக் கொடுக்கப்படுவது வழக்கம்.)

* * * *

சென்னை மாகாணத்தில் தேர்தல்

சென்னை ராஜாங்க சபைத் தேர்தல் சென்ற திங்கட்கிழமை மாகாணத்தின் பலவிடங்களிலும் நடைபெற்றது. ராஜாங்க சபையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஸ்தானங்கள் 46. இவற்றில் 35 ஸ்தானங்கள் பொதுத் தொகுதிகளுக்கும், ஏழு முஸ்லிம் தொகுதிகளுக்கும், மூன்று இந்திய கிறிஸ்தவர் தொகுதிகளுக்கும், ஒன்று ஐரோப்பியர் தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கவர்னர் 7 ஸ்தானங்களுக்குக் குறையாமலும் 10க்கு மேற் போகாமலும் நியமனம் செய்வார். தேர்தல் மாகாணமெங்கும் யாதொரு விசேஷ சம்பவமுமின்றி நடைபெற்றது. ஏராளமான ஓட்டர்கள் வாக்குகள் கொடுத்திருக்கின்றனர். தஞ்சை நகரில் முனிஸிபல் ஆபீஸில் ஒரு போலிங் ஸ்டேஷனும் தாலூகா ஆபீஸில் ஒரு போலிங் ஸ்டேஷனும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முன் கூறியதில் 84 ஓட்டர்களில் 57 பேர் ஓட்டுக்கொடுத்தனர். பின் கூறியதில் ஓட்டர் ஜாபிதாவில் மூன்று பெயர்கள் இருந்தன. இவர்களில் ஒருவரும் வாக்குக் கொடுக்கவில்லை. இதனால் ஓட்டுப்பெட்டி காலியாகவே ரிடர்னிங் ஆபீஸரின் ஆபீஸிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மறுதினம் செவ்வாய்க்கிழமை சென்னை சட்ட சபை விசேஷத் தொகுதிகளான முஸ்லிம், இந்திய கிறிஸ்துவர், தொழிலாளர், வியாபாரத் தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. படுதா முறை அனுஷ்டிக்கும் பல முஸ்லிம் ஸ்திரீகள் போலிங் ஸ்டேஷனுக்குச் சென்று வாக்குக் கொடுத்தது இத்தேர்தலில் ஒரு விசேஷமாகும். இவ்வாரம் பொதுத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறுகிறது.

* * * *

மோட்டார்களுக்குத் தீ வைத்ததாக

லாகூரில் பல மோட்டார்களுக்குத் தீ வைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஹீராலால் சேத்துக்கு ஆறுவருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. சுமார்-20 கார்களுக்குத் தீ வைத்த பிறகே அவரைப் போலீஸார் பிடிக்க முடிந்தது.

* * * *

இந்திய ரேயில்வே வரவு சேலவு திட்டம்

இந்திய ரெயில்வே வரவு செலவு திட்டம் இந்தியா சட்ட சபையிலும் ராஜாங்க சபையிலும் ஆஜர் செய்யப்பட்டன. ஸர் ஜாபருல்லாகான் திட்டத்தை ஆஜர் செய்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—1929-30-ம் வருஷம் முதல் இப்பொழுதுதான் முதன் முதலாக ரயில்வே வரவு செலவு திட்டத்தில் மிகுதித் தொகை எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வருஷத்தைக் காட்டிலும் புதிய வருஷத்தில் கஸராக 4 கோடி ரூபாய் அதிகம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1937-38-ம் வருஷத்தில் பர்மா ரெயில்வேக்கள் இந்திய ரெயில்வேக்களிலிருந்து பிரிக்கப்படும். பர்மா ரெயில்வேக்கள் நஷ்டத்திலேயே வேலை செய்துவந்தபடியால், இந்தப் பிரிவினை காரணமாக இந்திய ரெயில்வேக்களின் நிலைமை சீர்படக்கூடும். பெரிய ரெயில்வே வேலைத்திட்டம் புதிதாக ஏற்கப்படவில்லை. மிகவும்கஷ்டமான காலத்தை நாம் கடந்துவிட்டாலும் புதிய வேலைத் திட்டத்தில் அதிகப் பணம் செலவழிப்பது நியாயமாகாது.

எதிர்காலத்தில் ரெயில்வேக்கள் செய்யவிருப்பதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். குளிர்ச்சி வசதியுள்ள ஒரு வண்டி முக்கிய லயனில் பரீக்ஷார்த்தமாக விடப்படும். இந்தப் பரீக்ஷை பலனளிக்கும் பக்ஷத்தில் பெருவாரியாக இம்முறை பின்பற்றப்படும். எங்கெங்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் மூன்றும் வகுப்பு வண்டிகளுள்பட எல்லா வண்டிகளிலும் குளிர்ச்சி ஏற்பாடு கூடிய சீக்கிரத்திலேயே உண்டுபண்ணக்கூடுமென நம்புகிறேன்.

* * * *

நீண்ட கால மார்பு வலி

இதை ஒழியுங்கள்

மார்பு பலவீனத்தையும், மார்பு நோயையும், ஜலதோஷம், தொண்டைக் கோளாறுகளையும் நீங்கள் விரைவில் ஒழித்துவிடலாம். வழி—பெப்ஸ் கிருமிநாச, சுவாச நிவாரண மாத்திரைகளைத் தவருமல் சாப்பிடுவதுதான். பெப்ஸை வாயில் போட்டுச் சப்புகையிலேயே அதனின்றும் கிருமிநாச ஆவி வெளிக் கிளம்புகிறது. இது கபத்தைஅறுத்து, சுவாசாசயத்திற்கு வலுவூட்டுகிறது.

பெப்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன் மதராஸ்.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரணி மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

மாதவிடாய் கோளாறுகள்

அவைகளே பெண்மலட்டிற்கும் காரணம்

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரியைவிட சிறந்த ஔஷதம் வேறில்லை. இது மாதவிடாயைச் சிரமப்படுத்தி, அதிகமாகப் போவதைத் தடுத்து, சூதக பந்தத்தை உடைத்து மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்கி, மலட்டுப்பூச்சிகளைக் கொன்று சந்தான பாக்யத்தை யளிக்கிறது. டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். பத்தியமில்லை. விலை ரூ 5. பாக்கிங் & தபால் செலவு வேறு.

வேலன்ஸ் மெடிகல் ஹால்,
காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

மன்னர்பிரான் மகுடாபிஷேகத்தை யொட்டிக் கொடுக்கப்பட விருக்கும் மெடல்கள்.

நவ நாகரீகம்

அழகுக் கூடம்

(காசினி எழுதியது.)

* * * 'உங்கள் ஊருக்கு அழகு செய்யும் விதங்களில் நிபுணத்துவம் பெற்ற ஒரு மாது வந்திருக்கிறாளாமே? இவள் அதிக அகலமாக இருக்கும் முகத்தை நீளமாகத் தோன்றும்படிக்கும், நீளவாட்டமான முகத்தை வட்டமாகத் தோன்றும்படிக்கும், 'பவுடர்' தடவி அழகு செய்கிறாளாமே. இவ்விதம் அழகு செய்துகொள்ளும் மாதிரிகளைப் பணம் காசு, வாங்கிக் கொள்ளாமல், இலவசமாகவே கற்றுக் கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறாளாமே? நீ இவளைப் போய்ப் பார்த்தாயா? எதுவும் காசு வாங்கிக் கொள்ளாமல், இவ்விதம் அழகு செய்யும் இரகசியங்களை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் அவளுக்கு என்ன லாபம்?' என்று நீ கேட்டிருக்கிறாய்.

ஆமாம்; இவளைப் பார்க்க லேடி : சின்னையாவின் மகள், மருமகள், நாங்கள் மூவரும் போயிருந்தோம். முதல் நாளே, மறுநாள் மத்தியானம் அவளைப் போய்ப் பார்ப்பது என்று ஏற்பாடு செய்து கொண்டுவிட்டோம். ஸர் சின்னையாவின் மகன், எங்களைக் கொண்டு விட்டுவிட்டு, 'விளம்பரத்தில் போட்டிருக்கும்மாதிரியில், நீங்கள் ஹாலிவுட் சினிமா நக்ஷத்திரங்கள் மாதிரியில் சிங்காரித்துக்கொண்டு விட்டீர்களானால், அப்புறம் நான் அடையாளம் தெரியாமல் திண்டாட வேண்டும்! இந்த மரத்தடியில் காரை நிறுத்திக்கொண்டிருக்கிறேன்; நீங்கள் வந்து ஏறிக்கொள்ளுங்கள். உங்களைத் திரும்பிப் பாராமலே காரை விடுகிறேன்' என்றான்.

'ஏன் எங்களைப் பார்க்கக் கூடாது? நாமும் இவ்வித அழகுக் கூடங்களுக்குப் போக முடியவில்லையே என்று பொறுமையா?' என்றாள் அவனுடைய தங்கை.

'பின்னை என்ன? நம்மை உள்ளே வரக் கூடாது என்கிறாளே என்ற பொச்செரிப்புத் தான்' என்றாள் அவனுடைய மனைவி.

'அப்படி ஒன்றும் இல்லை. வேணுமானால் நானும்பேஷாக உள்ளே வரலாம். உன்னுடைய மன்னி, முகத்தை அழகு செய்துகொண்டு; தேவலோகக் கன்னிகை மாதிரியில் ஜொலிப்பதைக் கண்டு கண் கூசுவதில் காரை எதிலாவது மோதிவிடப் போகிறோமே என்று தான் சொன்னேன். மனைவி மட்டுமா? ஒரு தங்கை, பக்கத்தாத்து மாமி, எல்லாரும் திடீரென்று ஜகத் ஜோதியாய் விளங்கினால், பிறகு காரை எப்படி நிதானமாக விடுவது?' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

பிறகு அவனை ஒரு கை பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் செய்து கொண்டு, நாங்கள் உள்ளே சென்றோம். மதாம் கரோலினா, எங்களை வரவேத்து, முகத்தை அழகு செய்து காட்டினாள். அவள் அழகு செய்த விதம் முற்றிலும் மேல் நாட்டு முறைகளை அனுசரித்தே இருந்தது. வழக்கமாகப் பவுடர், கன்னங்களுக்குச் சிகப்பு வர்ணம் முதலியவைகள் பூசிக் கொள்ளாதவர்களுக்கு, இதுவும் ஒரு அழகா என்றுகூடத் தோன்றலாம். லேடி சின்னையாவின் மகள் முகத்தை முதலில் சிங்காரித்தாள். முதலில் ஒரு மெழுகை முகம் முழுவதிலும் தடவினாள். பிறகு மெல்லிய மெழுகு தாளினால், முகத்தை நன்றாகத் துடைத்துவிட்டாள். இதனால், முகத்தில் படிந்துள்ள, அழுக்கு, தூசி முதலியவைகளைச் சுத்தமாக எடுத்துவிட்டதாகச் சொன்னாள்.

பிறகு ஒரு லோஷனைத் தடவினாள். மெழுகு தடவினதினால் தளர்ந்த தோல், இதனால் மறுபடியும் சுறுங்கிக் கொள்ளுமாம். இதன்மேல் வேறொரு

மைலாப்பூர் ஸ்திரீகள் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

இந்த

அழகு ரகஸியத்தைக்

கேளுங்கள்

டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் மேலான வானிஷிங் க்ரீம் உங்கள் முகப்பவுடருக்கும், அழகுக்கும் ஆதாரமானது என்று மட்டும் நினைத்து விடவேண்டாம். அது உங்கள் வசீகரத்தைப் பெருக்குகிறதென்பதென்னமோ வாஸ்தவம்தான். ஏனெனில் இதுவே பவுடராகவும் விளங்குகிறது. இம்மட்டோ! டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் மேலான வானிஷிங் க்ரீம் துல்லிய சருமத்தையும் வெயில், மழை, காற்று, தூசி இவற்றின் ஆபத்துக்களினின்றும் காக்கிறது. இதோ உங்களுக்கு ஒரு ரகஸியம்...இந்த வானிஷிங் க்ரீம் சருமத் தோஷங்களை மறைத்து சருமத்திற்கு அழகைத் தருகிறது. டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் · மேலான; வானிஷிங் க்ரீமை தினமும் உபயோகியுங்கள்.

D 55

படத்தில் காணப்படும் மிஸ் பெட்டி வெட்டிங், விலோ பேன் என்றதனால் செய்யப்பட்ட ஒரு உடையை அணிந்து கொண்டிருக்கிறார். சூரிய கிரணம் திரேகத்தில் நேராகப்படாமல் திரேகத்திற்கு வேண்டிய அளவு சூடுமட்டும் உண்டாவதற்கு இது உபயோகமாகவிருக்கிறதாம்.

மெழுகைத் தடவினாள். இது தோலுக்கு வலிவு கொடுப்பதுடன், பவுடர் பூசுவதற்கு அடிப்படையாக இருக்கும் என்று சொன்னாள். இதற்குப் பின், கன்னத்தின் எலும்பின் மேல், இலேசாகச் சிகப்பு வர்ணம் பூசினாள். பிறகு, லேடி சின்னையாவின் மகள் நிறத்துக்கு ஏர்வையான பவுடரைத் தாராளமாகப் பூசி, ஒரு பிரஷினால், அதிகப்படிப் பவுடரைத் துடைத்தெடுத்தாள். இதற்கென்றே இந்த பிரஷ் தயாரிக்கப்பட்டதாம். இவ்விதம் செய்வதினால், பவுடர், ஒரே சீராக எங்கும் படுமாம்.

பிறகு, கறுப்பு நிறமான ஒரு தினுசு மையில் (இது கட்டியாக இருந்தது.) தண்ணீரில் தோய்க்கப்பட்ட ஒரு பிரஷ்ஷை இலேசாகத் தேய்த்து, இமை மயிரில் தடவினாள். இதில் மேல் இமை மயிரை, மேல் பக்கமாக, உள் இருந்து மேல் நோக்கியும், கீழ் இமை மயிரைக் கீழ் நோக்கியும் துடைத்தாள். இவ்விதம் செய்வதால், இமை மயிர் கறுத்து நீண்டு, காட்டுவதுடன், கண்ணும் பெரிதாகத் தோன்றுமாம். பிறகு பென்சில் போன்ற ஒரு குச்சியினால் புருவங்களை அழகு செய்தாள். உதடுக்குச் சிகப்பு வர்ணம் தடவினாள். திராவகப் பவுடரினால், கழுத்துக்கும், முகத்துக்கும், வர்ண வித்தியாசம் தெரியாமல் இருக்கும்படிப் பூசினாள். இந்த திராவகப் பவுடர், தண்ணீரில் பவுடரை நன்றாகக் குழைத்த மாதிரியில் இருக்கிறது.

இது சோப்புப் போட்டுத் தேய்த்துக் கழுவினால் ஒழிய அழியாதாம். வியர்வை, வெய்யிலில் செல்லுதல், தண்ணீர் படுதல் முதலியவைகளினால் அழியாதபடி இதைச் செய்திருப்பதினால், கைகளுக்கும், கழுத்துக்கும் இதை உபயோகிக்கிறார்களாம். லேடி சின்னையாவின் மருமகள் முகம், என் முகம், எல்லாவற்றிற்கும் இவ்விதம் அழகு செய்தாள். உதடுக்கு வர்ணம் பூசுதல் எனக்கு முற்றிலும் பிடிக்கவில்லை. அதனால் அது வேண்டாம் என்று விட்டேன். மற்றப்படி வேடிக்கைதானே என்று நானும் அழகு செய்து கொண்டேன்.

இதில் என்ன லாபம் என்று நீ கேட்டிருக்கிறாய். மாக்ஸ் பாக்டர் தயாரித்து விற்கும், அழகு சாமான்களுக்கு இது ஒரு விளம்பரம். 'கண்ணுக்கு மை இட்டுக் கொள்ளுவதைவிட, இவ்விதம் செய்வது நன்றாக இருக்கு' என்று லேடி சின்னையாவின் மகள் சொன்னாள். 'அழுக்கு எடுக்கும் கிரீமும், பிறகு போட்ட லோஷனும், தோல் வலுக்கும் கிரீமும் நான் வாங்கப் போகிறேன்' என்றாள் அவளுடைய மருமகள். வழக்கமாகப் பவுடர், சிகப்புவர்ணம், உதடுக்கு வர்ணம் பூசிக் கொள்ளுபவர்களுக்கு இவள் செய்து காட்டிய அழகு மாதிரிகள் மிகவும் உபயோமாக இருக்கும். அவள் எல்லாவற்றையும், உற்சாகமாகவே செய்து காட்டினாள். முகத்தில் தோன்றும் மருக்கள், கரும்புள்ளிகள் இவைகளை எவ்விதம் போக்குவது என்பதைப் பற்றியும் எழுதிக் கொடுத்தாள். ஒவ்வொருவர் நிறத்துக்கு எந்த பவுடர், சிகப்பு வர்ணம், உதடுக்குத் தடவும் மெழுகின் வர்ணம், இவைகளை எங்கள் மூன்று பேருக்கும் எழுதிக் கொடுத்தாள். நாங்கள் வீட்டிற்கு வந்ததும், எல்லாரும் என்ன, என்ன சொன்னார்கள் என்பதையும், மருக்கள் போகச் செய்வதற்கு அவள் சொன்ன முறைகளையும், மெழுகுகளின் பெயர்களையும் மற்றொரு முறை எழுதுகிறேன். இப்பொழுது நேரமாகிறது. ஆனால் ஒன்று, நாங்கள் அழகுக் கூடத்துக்குப் போயிருந்தோம் என்று கேள்விப்பட்ட எங்கள் சிநேகிதிகள், 'எங்களையும் ஏன் அழைத்துப் போகவில்லை? நாங்களும் இப்படி அழகு செய்து கொண்டிருக்க மாட்டோமா?' என்று சண்டை போடுகிறார்கள். ஸர் சின்னையாவின் மகன் சொன்ன மாதிரியில் 'மனித சுபாவமே!' என்க வேண்டியதுதான்.

* * * *

நாகபுரி தென் இந்தியர் சங்கம்

(ஸ்திரீகள் பிரிவு)

இச்சங்கத்தின், இரண்டாவது வருஷாந்திரக் கொண்டாட்டம் சென்ற 7-ந்தேதி மதராஸி பெண்பாடசாலையில் ஸ்ரீமதி டாக்டர் எஸ். அலங்காரம் தலைமையில் நடைபெற்றது. முதலில் கடவுள் வாழ்த்தும், அதன் பிறகு சிறுமிகளால் கோலாட்டமும் நடைபெற்றது. பிறகு, சங்க அக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீமதி பார்வதி அம்மாள் வரவேற்புப் பத்திரம் படித்தனர்.

ஸ்ரீமதி அலங்காரம்மாள் மிகவும் அருமையாக, ஸ்திரீகள் சங்கத்தில் சேருவதினால் அடையும் நன்மைகளைப்பற்றி விரிவாகப் பேசினார். அதன் பிறகு சங்கக்காரியதரிசியாகிய ஸ்ரீமதி பட்டம்மாளால் வந்தனோபசாரம் கூறப்பட்டது. சிறுமிகள் மங்கலம்பாடி, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டுக் கொண்டாட்டம் முடிவடைந்தது.

* * * *

HAVE A SOUND SLEEP



By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

		Ordinary.	Superior.	Best	
6' x 3½' x 3½'	Rs.	1- 0	1- 4	1- 8	each
6' x 4' x 4'	„	1- 4	1- 8	1-12	„
6½' x 4½' x 4½'	„	1- 8	1-12	2- 0	„
7' x 5' x 5'	„	1-12	2- 0	2- 4	„
7½' x 6' x 6'	„	2- 0	2- 4	2- 8	„

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free. POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
13, Sikderpara Lane, Barabazar,
CALCUTTA.

போலிகளைக் கண்டு உஷார் !!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா,

வழுக்கை, செம்பட்டை இள:நரைகளைத் தீர்ப்பது

கேசவர்த்தினி

ஒன்றே
மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி
விலை அணா 12.
மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயனசாலை
மயிலாப்பூர், சென்னை.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்
நகை வியாபாரிகள்
175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.
காட்லாக்குக்கு எழுதவும்.

நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி



ஸெயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படை பிரதம கமிஷனர் கர்னல் ஜேம்ஸ் ஸ்லீமன் சென்னைப் பிரிவின் படையைப் பார்வையிட்டபின் பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். (வலது பக்கம்) மதுராந்தகம் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோவில் சம்ப்ரோக்ஷணம் சமீபத்தில் நடைபெற்றது.



லண்டனிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர் ஹெர் வான் ரிப்பன்ட்ராப் சமீபத்தில் ஜெர்மனி சென்று திரும்பினர். விக்டோரியா ஸ்டேஷனில் எடுத்த படம். இவர் தம்முடன் ஜெர்மனியின் காலனிகள் கோரிக்கைக் கடிதத்தை எடுத்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. (வலதுபக்கம்) நாஜிக் கட்சியின் நான்காவது ஆண்டு விழாவின் போது துருப்புகள் அணிவகுத்துச் சென்றதை ஹெர் ஹிட்லர் பார்வையிட்ட காட்சி.

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யபபடும் விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம் நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமை



யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக் கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினால், ஒரே வினாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுபபப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணா 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

உங்கள்

குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கேளுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. பிடித்த தொர்தாவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது

மதராஸ் ஏஜன்டுகள்:

ஏ. பி. பரேக், 268, சைனாபஜார் ரோட்.

உத்தரவாதமான

பொன், வெள்ளி, நகைகளுக்கும்,

பல ஊர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்

ஸ்ரீ ஆண்டாள்

ஜுவெல்லரிஸ் லிமிடெட்.

109, சைனா பஜார் ரோட், மதராஸ்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயின்று டிப்ளோமா பெற்றவரும், எஸ். கே. பி. டி. ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டராயிருந்தவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கலாசாலைப் பரீக்ஷகரும், ஸிலோன் வைத்தியக் கல்லூரி பரீக்ஷக போர்டின் பிரஸிடெண்டும், அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீட பரீக்ஷகரும், அநேக ஆயுர்வேத காவ்ய நாடகாதி கிரந்தங்கள் இயற்றியவருமான,

வைத்திய ரத்னம்

பண்டித **எம். துரைஸ்வாமி ஐயங்கார்,** ஏ. வி எஸ்

ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதசார்ய அவர்களுடையஔஷதங்கள்

ஆயுஷ்ய ரஸாயனம் எவ்வித பலஹீனத்தையும் நீக்கும். தேஹ புஷ்டியையும், மூளைச் செழிப்பையும், இருதய பலத்தையும் தரும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். தேனினும் இனிக்கும்.
புட்டி ரூ. 3-4-0.

அஜீர்ண கேஸரி இரைப்பையில் புளிப்பு, புளித்த ஏப்பம், மார்பு எரிவு, வயிற்றுப்புசம் முதலிய தொந்தரவளிக்கும் கடுமையான அஜீர்ணங்களில் பலன் தரத்தக்கதென்று உபயோகித்துப் பரீக்ஷிக்கப்பட்ட சூர்ணம் டப்பா 1-க்கு ரூ. 2-8 0.

ஹரீதக்யாதி லேஹ்யம் எவ்வித மலச்சிக்கலுக்கும் திவ்யௌஷதம் லிவர்என்கிற கல்லீரலைத்தூண்டி, பித்தத்தை வெளிப்படுத்தி, காமாலை முதலியதையும் தணிக்கும். கர்ப்பிணி முதல் அனைவரும் உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3-0-0.

லோஹாஸவம் இரத்தத்தைத் துரிதமாய் விருத்தி செய்யும் அயத்திராவகம். குழந்தை முதல் அனைவருக்கும் ஏற்றது. இரத்தக் குறைவு, பலஹீனம், தோலைப் பற்றிய வியாதிகள் முதலியவை தீரும்.
1 பவுண்டு ரூ 3-12-0.

விடங்காரிஷ்டம் கீல் வாயுவுக்கு மிகப் பிரசஸ்தமான திராவகம். நீர்க்கடுப்பு முதலியவற்றையும் நீக்கும். பொதுவாக வாயுரோகங்களில் உபயோகிக்கக்கூடிய சிறந்த மருந்து. 1 பவுண்டு ரூ. 5.

காஸஹர ரஸாயனம் இருமல், மார்ச்சளி, நாட்பட்ட ஜலதோஷம், ச்வாஸ-காஸம், டான்ஸிலைடிஸ் என்கிற தொண்டை வீக்கம், கக்குவான் ஆகியவை இதனால் முற்றிலும் குணமடைந்திருக்கின்றன. எவ்வயதினரும் உபயோகிக்கலாம் இனியசுவை.
புட்டி ரூ. 2-8-0.

வேறு ஸகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,

"ஆர்ய க்ருஹம்" 11, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, மதராஸ்

அமெரிக்கா ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியின் தலைவர் ஆல்ப்ரட் பி. ஸ்லோயன் ஜூனியர். சமீபத்தில் இத்தொழிற் சாலையில் 1,50,000 பேர் வேலை நிறுத்தம் செய்திருந்தனர். அப்பொழுது மிஸ்டர் ஸ்லோயன் யோசனை செய்துகொண்டிருக்கையில் எடுத்த படங்கள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

—— :[o]: ——

பட்டங்கள் விநியோகத்தை நிறுத்திவைக்க யோசனை

காமன்ஸ் சபையில்தொழிற் கட்சியைச்சேர்ந்த மிஸ்டர் ஷென்வல் பின்வருமாறு தெரிவித்தார்:—

"ஏற்கனவே ஏராளமானவர்களுக்குப் பட்டங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதையும் தற்போதுள்ள ஜனநாயகப் போக்கையும் அனுசரித்து இந்த சர்க்கார் அதிகாரத்திலுள்ளவரை புதிதாக யாருக்கும் பட்டமளிக்காதிருப்பது பற்றி பிரதமமந்திரி யோசிக்க வேண்டுகிறேன். பிரதம மந்திரியும், அவரது மந்திரி சபையிலுள்ள இன்னும் சிலரும் பட்டமின்றியே கௌரவமுள்ளவர்களாக இருந்துவருவது இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தக்கது."

பிரதம மந்திரி மிஸ்டர் பால்ட்வின் இந்த யோசனையை ஏற்க மறுத்து நாட்டில் எவ்வளவுக் கெவ்வளவு ஜனநாயகம் ஓங்குகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பட்ட ஜாபதா நீளமாகிறதென்பதே அனுபவம் எனத்தெரிவித்தார்.

ஜெர்மன் காலனிகள் பிரச்னைக்கு பிரிட்டிஷ் எதிர்ப்பு

ஜெர்மனி தனது பழைய காலனிகளைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமெனக் கேட்க முன் வந்திருப்பது நேயர்களுக்குத் தெரியும். இது சம்பந்தமாக சாம்ராஜ்யக் கைத்தொழில் சங்கக் கமிட்டியின் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. பிரிட்டிஷ் கொடியின் கீழிருந்துவரும் எந்தப் பிரதேசத்தையும் ஜெர்மனிக்குக் கொடுக்க முடியாதென்பதே அதன் சாரம். அங்ஙனம் கொடுப்பதால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பந்தோபஸ்துக்கு ஆபத்து ஏற்படுமென்றும் அதனால் மூலப் பொருள்கள் விஷயத்தில் ஜெர்மனிக்கு விசேஷ அனுகூலமெதுவும் ஏற்படாதென்றும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதில், ஜெர்மனியும், மற்ற நாடுகளும் மூலப் பொருளும் உணவுப் பொருளும் பெறுவது சம்பந்தமாகத் தற்போதிருக்கும் இடையூறுகளை நீக்குவதற்கான யோசனைகளைக் குறித்து ஆலோசிக்க அக்கமிட்டி தயாராயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

கணவனைக் கொன்ற மனைவி

28 வயதான மிஸஸ் டோரிஸ் டிஸ்டேல் என்ற மங்கை ஒரு ரிவால்வரால் தனது கணவனைச் சுட்டுக் கொன்றதாக லண்டனில் குற்றம் சாட்டப்பட்டிருந்தாள்.

இவ்வழக்கில் வெளியான சாட்சியத்திலிருந்து எதிரியின் கணவன் இரவில் வெகு நேரம் வெளியே தங்கிவிட்டுத் திரும்புவது வழக்கமென்றும் அவர் மனைவியைவிட்டு மற்ற ஸ்திரீகளை மோகித்து வந்ததாகவும் எனவே எதிரி அவர் மீது ஆத்திரங்கொண்டதாகவும் தெரிகிறது.

ஜூரிகள் சுமார் இரண்டரை மணி நேரம் கலந்து யோசித்து எதிரி குற்றவாளியல்லவெனத் தீர்ப்புக் கூறினார். இதையொட்டி எதிரி விடுவிக்கப்பட்டார்.

* * * *

பிரிட்டனில் தற்காப்புக்காக கடன் வாங்க முடிவு

தற்காப்பு வசதிகளைப் பலப்படுத்தும் பொருட்டு சர்க்கார் கடன் வாங்க முடிவுசெய்திருப்பதாக பொக்கிஷ மந்திரி காமன்ஸ் சபையில் அறிவித்திருக்கிறார். வருஷா வருஷம் தற்காப்புக்காக ஒதுக்கி வைக்கப்படும் தொகையிலிருந்து புதிய கடனுக்கான வட்டியைச் செலுத்தவும் இக்கடனை முப்பது வருஷ காலத்திற்குள் தீர்க்கவும் ஏற்பாடு செய்யப்படுமென்றும் அறிவித்திருக்கிறார்.

* * * *

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப் பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

ஆராய்ச்சி பூர்வமான
நவீன மருந்துகள்

மேத்தாஸ் காப் மிக்சர் : எல்லாவகையான இருமல் நோய்களுக்கும், க்ஷயரோகத்திற்கும் கைகண்ட ஔஷதம்.
விலை புட்டி 1-க்கு ரூ. 2.
கே. எஸ். மேத்தா & கம்பெனி,
பிரபல மருந்து வியாபாரிகள்.
234, சைனு பஜார் — மதராஸ்.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

ஜேர்மன் ரயில்வேக்கள் ஜேர்மன் சர்க்காருடையது

ஜெர்மன் ரெயில்வேக்களைப் பற்றி ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இதன்படி இனி அந்த ரயில்வேக்கள் பங்குதாரர்களுள்ள கம்பெனிக்குச் சொந்தமாயிராது. ரயில்வேக்களைச்சேர்ந்த வண்டிகள், நிலங்கள் முதலிய சொத்துக்களனைத்தும் இனி சர்க்காருக்குச் சொந்தமாகிவிடும். ரயில்வேக்களின் டைரக்டர் ஜெனரலுடைய வேலைகளைப் போக்குவரத்து மந்திரி கவனித்து வருவார். ரயில்வேக்களின் நிர்வாக போர்டுக்கிருந்த பொறுப்புகளை இனி உள்நாட்டு மந்திரியும், அவர் கீழுள்ள மற்ற அதிகாரிகளும் வகிப்பர்.

ரயில்வே கம்பெனிகளின் சாதாரண பங்குகளனைத்தையும் சர்க்கார் விலைக்கு வாங்கிவிட்டனர். பழைய ரயில்வே அதிகாரிகளெல்லாம் இனி சர்க்கார் அதிகாரிகளாகவிருப்பர்.

* * * *

நாடகக் கொட்டகை தீப்பற்றி 700 பேர் மரணம்

ஆண்டாங் என்பது மஞ்சூரியாவிலுள்ள ஒரு நகரம். இங்குள்ள ஒரு நாடகக் கொட்டகை சென்ற 13-ந் தேதி இரவு தீப்பற்றிச் சாம்பலாகிவிட்டது. இதில் 700 பேர் மாண்டனர். அக்கொட்டகையிலுள்ள மாடிப்படிகளில் அடுக்கடுக்காக நூற்றுக் கணக்கான பிரேதங்கள் காணப்பட்டன. நடிகர்களுடைய அறையில் வைக்கப்பட்டிருந்த ஒரு மெழுகு வர்த்தியிலிருந்து இத்தீ பரவியதாம். சீனர்களின் புது வருஷ தினத்தையொட்டி இங்கு நாடகம் நடைபெற்றது. இத் தீவிபத்தில் அருகிலிருந்த முப்பது வீடுகளும் நாசமாயின.

* * * *

காங்கிரஸ் வெற்றிக்குக் காரணம்

இதுவரை வெளியான இந்தியத்தேர்தல் முடிவுகளை ஆராயும் முறையில் "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையில் ஒரு கட்டுரை காணப்படுகிறது. அதன் சாரம் வருமாறு:—

காங்கிரஸ் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிகமான வெற்றியடைந்திருப்பதாகத் தோன்றுகிறது. இவ்வெற்றியில் ஓரளவுக்கு அக்கட்சியில் நல்ல தலைவர்கள் இருப்பது காரணமாகவிருக்கலாம். ஆனால், இத்தகைய காரணங்களை மட்டும் கொண்டு அக்கட்சி முன்னேறி அதிகாரம் வகிப்பதற்கில்லையென்பது மிதவாதக் கட்சிக்கேற்பட்ட கதியிலிருந்து தெளிவாகிறது.

வெளியார், காங்கிரஸ்காரரிடை அபிப்பிராய பேதத்திற்குக் காரணமாக உள்ள விஷயங்களில் மட்டும் விசேஷ கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களிடை ஒருமுகமான அபிப்பிராயமிருந்துவரும் விஷயங்களைக் கவனியாதிருந்துவிடக்கூடும். இவை முன்னவையைவிட விசேஷ முக்கியம் வாய்ந்தவையாகும்.

காங்கிரஸில் பிளவேற்படுவதைத் தவிர வேறு வழியில்லையென எண்ணத்தக்க பல சந்தர்ப்பங்களில் அது வெகு ஆச்சரியகரமான முறையில் ஒற்றுமையைக் கைவிடாதிருந்து வந்திருக்கிறது. இந்த சமயமும் காங்கிரஸ்வாதிகள் தங்களில் பிளவின்றிச் சமரசமாக வேலை செய்ய வழி காணக்கூடும்.

* * * *

ஜப்பானில் ஆயுதப் பெருக்கு

ஜப்பானிய பார்லிமெண்டில் நிதி மந்திரி பேசுகையில், "இந்நாட்டிலும் வெளியிடங்களிலும் தற்போதுள்ள நிலைமையை முன்னிட்டுத் தேசீயத் தற்காப்புக்கு அதிகமான பணம் செலவழிப்பது அத்தியாவசியமாயிருக்கிறது. வரி உயர்வு மூலமும் கடன் வாங்குவதன் மூலமும் இவ்வதிகச் செலவைச் சமாளிக்க உத்தேசித்திருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

* * * *

ஸ்பெயின் கலகம்

மாட்ரிட்டில் கடுமையான போர் நடந்து வருவதாகவே கூறப்படுகிறது. யாதொரு நிச்சயமான தகவலும் கிடைக்கவில்லை. ஸ்பானிய சர்க்காருக்கு ஏராளமான பிரெஞ்சு விமானங்கள் உதவப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்த நிலைமையில் லண்டனில் நடைபெற்ற நடுநிலைமைக் கமிட்டிக் கூட்டத்தில் ஸ்பெயினுக்கு அந்நியத் தொண்டர்கள் செல்வதைத் தடுப்பது பற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

* * * *

ரங்கூன்
வைரங்கள்
நகைகள்
கேட்லாக்இனும்
பி.கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

ரூ. 100 இனும்
(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும. பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
S M.)Panchpota, BENGAL.



மனைவி
ஆரோக்யமாக
இருந்தால்
குடும்பத்தில்
சந்துஷ்டி நிலவும்

வாலிபம், சந்துஷ்டி, வாழ்வில் சுகம்—அவ்வப்பொழுது எவ்விதமான கஷ்டங்களுமில்லாமல்—கல்யாண வாழ்வின் இன்பம் இதுதான்.

ஒரு தடவை கல்ஸாண சாப்பிட்டால் உங்கள் மனைவி வாலிபமும், சந்தோஷமும், ஆரோக்கியமும் பெற்று அடிக்கடி அசௌக்கியமில்லாமல் வாழ்வாள். அவளுக்கு ஏதாவது அசௌக்கியமேற்பட்டால் அதற்குக் காரணம் அவள் உடலில் உலோக சத்துக்கள் இல்லாததே. அவளது தேகம், இரத்தம், நரம்புகள் இவற்றிற்கு அவசியமான உலோக சத்துக்கள் கல்ஸாணவிலிருக்கின்றன. கல்ஸாண எந்தவிதமான வலியையும் அகற்றுகிறது.

"சூதகக்கோளாறுகள் காரணமாக இரத்த சோகையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒருவளை நான் கல்ஸாண சாப்பிடச் சொன்னேன்; அவள் பழைய ஆரோக்கியத்தை அடைந்தாள். சூதகத்தொந்தரவெதுவுமில்லை" என்று கல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் B. B. B., எழுதுகிறார்.

தாமதம் வேண்டாம்! உங்களுக்கருகிலுள்ள மருந்து வியாபாரியிடமிருந்து ஒரு புட்டி கல்ஸாண மாத்திரைகளைச் சாப்பிடுக. உங்கள் மனைவி மீண்டும் ஆரோக்கியத்தைப் பெறுவாள்.

Kalzana

மேலான ஆரோக்கியதத்திற்கான உலோக உணவு
கைபடாமல் தயாரிக்கப்படுவது.

உலகப பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம் : ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதாராஸ்.

சோதனை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தன் கணவனை நல்ல வழிக்குத் திருப்புவதென்பதை உணராமல் தவிக்கலானாள்.

ஒரு நாள் வேலை தீர்ந்து மாடியிலேறியதும், நடராஜன் அறையில் பேச்சுக்குரல் கேட்பதையறிந்து, அறையில் வெளியிலே நின்று கவனித்தாள். உள்ளே நடந்த சம்பாஷணை:—

டாக்டர் மணியன், "என்னடா, நீ என்ன பச்சைக் குழந்தையா? ஆனாலும் இத்தனை மோசமாய்ப் போவாயென்று எண்ணவேயில்லையே! போதும் போதும் உன் திருவிளையாடல்கள்."

நடராஜன் சொன்ன பதில் ஜயாவுக்குக் கேட்கவில்லை.

மணியன், "ரொம்ப பேஷ்! இதிலே பெருமை வேறேயா? நிறுத்தடா உன் அக்ரமங்களை! கொஞ்சமாவது, ஈவிரக்கம் பச்சாத்தாபமில்லாமல், என்ன அத்துமீறி—"

நடராஜன், "என்ன வேணுமோ சொல்லிக் கொள்; அந்த மணிலா இருக்கிறாளே அவளுடைய அழகுக்கு—அடாடா—"

மணியன், கோபத்துடன், "அடே, நீ என் நண்பனாயிற்றே என்று சொல்கிறேன். இதெல்லாம் எதில் முடியுமோ எனக்குத் தெரியவில்லை. இல்லாவிட்டாலும், நீ ரொம்பமோசம்...உன் வேலைகள் எனக்குப் பிடிக்கவுமில்லை. விளங்கவுமில்லை பின்னால் நீயே ரொம்பவருத்தப்படப் போகிறாய். நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். பிறகு உன் இஷ்டம்."

மணியன் வேகமாக எழுந்திருந்து வெளியே வந்தான். ஜயா அவனைக் கண்டதும், முகத்தைத் துடைத்துக்கொண்டு, "வது இங்கே வருவதே இல்லை; அண்ணா, மன்னி குழந்தைகள் க்ஷேமந்தானே?" என்று கேட்டாள்.

"எல்லாரும் ஸௌக்யந்தான். ஜயா, எனக்கென்னமோ: ரொம்பக் கஷ்டமாயிருக்கு உன்னைப்பார்க்க? ஆனாலும்—நான் சொல்றது உன் மனஸிலேறுமோ என்னமோ; நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. எல்லாம் சரியாய்ப் போய் விடும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

உள் நிகழ்ந்த சம்பாஷணையைக் கேட்ட ஜயாவின் மனம் மேலும் தத்தளிக்கலாயிற்று. திடீரென இத்துர்க்குணங்கட்கு ஆளான பர்த்தா தாசிலோலனாகவும் மாறிவிட்டானென அறிந்தது அவள் வேதனையை அதிகமாக்கியது. அவனே ஒரு பெருமையாகவும் அதைப்பற்றிப் பேச ஆரம்பித்ததை அவளால் தாங்க முடியவே இல்லை: விம்மி அழுதபடியே அன்றிரவைக் கழித்தாள். இக்கெட்ட பழக்கங்களிலிருந்து இனி அவன் மீள்வது அரிதெனு அவளுக்குத் தோன்றியது. அதுவரை, அறிமுகமான யாவருடைய நன்மதிப்பிற்கும், கௌரவத்திற்கும் பாத்திரனாகவிருந்த அவள் கணவன், அவனது அட்டூழியங்கள் வெளிப்படுங்கால், எத்தனை இழிவாகக் கருதப்படுவானென்பதை நினைக்க நினைக்க அவளுக்கு ஆறாத் துயரமுண்டாயிற்று. நாலுபேர் அவனை இகழ்ந்துபேச, அதைக் கேட்டுக்கொண்டு உயிர் வாழ்வதிலும், அப்படிப்பட்ட நிலை ஏற்படுமுன் தன் உயிரைத் துறந்துவிட்டாலென்ன என்ற நினைவுகூட அவள் மனதில் உதிக்கலாயிற்று.

மாலை ஏழுமணிக்கு வீட்டுக்கு வந்த நடராஜன், இரவு ஒன்பது மணியாயும் தன் அறையை விட்டு வெளியில் வரவில்லை. ஜயா அவனருகில் செல்ல நடுங்கினாள். கட்டிலில் குடியால் மயங்கிப்படுத்துக்கிடப்பதாக நினைத்த கணவனை எழுப்பவும் பயந்தாள். ஆனாலும், கடைசித்தரமாக அவனிடம், துர்ப்பழக்கங்களை விட்டு விடும்படி வேண்டிக்கொள்வதாகவும், அன்றும் தன்னை உதறியெறிந்தால் பிறகு, தன் உயிரைத் துறந்துவிடவேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டாள். மெதுவாக உள்ளே பார்த்தாள். கட்டிலிலிருந்து எழுந்து அரைக் கண்களுடன் நாற்காலியில் உட்கார்ந்திருந்த நடராஜனைக் கண்டாள். பேதை அவள் நெஞ்சு பதைத்தது. நடராஜன் மெதுவாக எழுந்து ஜயாவின்பெட்டியைத் திறந்தான். அவளுடைய வைர வளையல்கள் வைத்திருந்த ஓர் அழகிய சிறிய பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்தான். பிறகு அதைப் பத்திரமாக மூடி, தன் சட்டையின் உள்ஜேபியில் வைத்துக்கொண்டான். அருகில் வந்து நின்ற ஜயாவைப் பார்த்து, "வேவு பார்க்கவா பின்னால் வந்து நிற்கிறாய்?" என்று கேலியாகக் கேட்டு விட்டு, பெட்டியைப் பூட்டிச் சாவியை மேஜைமேல் வீசி எறிந்தான். ஜயாவுக்குத் துக்கம் நெஞ்சையடைத்தது. கண்ணங்களின் வழியாய் கண்ணீர் பெருகி, பூமாதேவியை நனைத்தது. பேசவோ நாவெழவில்லை. எத்தனை முயன்றாலும் நடராஜன், மணியைப் பார்த்தான். "உஸ், நாசமாப்போன மணி ஸ்லோவாப் போறதா? ஒன்பது மணிக்கல்லவா வண்டி வரும்போலிருக்கு!" என்று சொல்லிக்கொண்டே நாற்காலியில் சாய்ந்தான். ஜயா, எப்படியோ மனதை, சமாதானம் செய்துகொண்டு அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியின் முன், அவன் காலருகில் உட்கார்ந்துகொண்டாள்.

"வெளியே போவதற்கென்ன!" என்று சீறினான் நடராஜன்.

"என்னவா, இப்போ என்ன ஜோலியாய் நீங்கள் வெளியே புறப்படுகிறீர்கள்—(சற்று நிறுத்தி, உங்கள் மனசு சம்மதிக்கிறதா? ஐயோ, எவ்வளவோ பரிசுத்தவானாகிய உங்களுக்கு இந்தத் தீயவழக்கங்கள் எப்படிப்பிடிபட்டன. உங்களை இதற்குமுன் தெரிந்தவர்கள், இப்படிக் கெட்டலைவதை அறிந்தால் நம்பக்கூட மாட்டார்களே. எந்தப் பாவி உங்களைக் கெடுத்தான். (பொறுத்து) நீங்கள் நல்லொழுக்கத்திற்காகக் காலேஜில் பிரைஸ் வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்களே, அப்படிப் பட்டவர் இதிலெல்லாம் தலையிடலாமா? இனிமேல் நான் ஒரு துர்ச்சுபாவத்திற்கும் உட்படமாட்டேன் என்று பெருமையடித்துக் கொண்டதெல்லாம் பொய்யாய்விட்டதே—என்ன, முகத்தை என் திருப்பிக்கொள்கிறீர்கள்? பதில் சொல்லக்கூடாதா?"

ஜயாவின் கண்ணீர் அவன் பாதங்களைநனைத்தது. அக்கொடிய புருஷனின் மனம் இரங்கினதாகத் தெரியவில்லை. கடியாரத்தின் முட்களையே பார்த்த படியிருந்தான். மிகுந்த ஏமாற்றமும் ஏக்கமும் ஜயாவைப் பீடித்தது. இறைஞ்சிய படித் தன் கணவனை நோக்கினாள். அவனோ அவள் புலம்பலைச் சிறிதும் கவனியாதவனாக, கைகுட்டையால் முகத்தைத்

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்

குழந்தைகளின்
மிருதுவான சருமத்திற்கு

சந்தண வாசனையுடன் நாம் கவக்கும் அவசியமான ஆயிலத்தை ராவமற்றும் ஆரோக்கிய மூட்டும் சத்தி கவிருட்டிலை மைசூர் சந்தண ஸோப்பு முக்கியமாக குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு ஏற்றது இந்தியத் தாய்மார்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கின்றனர்

மைசூர் சந்தண
ஸோப்பு

கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை, பெங்களூர்.

துடைத்துக்கொண்டு, "என்னடீ ஸாஹஸம் செய்கிருய்? உன் நகைக்காகவா இப்படி அமர்க்களப்படுத்துகிருய்?" என்று சீறினன்.

"ஐயோ, அப்படியா நினைத்துவிட்டீர்கள்? இந்த நகைகளை நான் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை என்பது உங்களுக்குத் தெரியாததல்லவே! நீங்களாகக் கட்டாயப்படுத்தினல் தவிர, நான் இவற்றைப் போட்டுக் கொள்வதில்லை என்பது மறந்துபோய் விட்டதா—வேண்டாம். இதெல்லாம் உங்களுக்கு ஏற்றதல்ல. போதும், உங்கள் பெயரையும் உடம்பையும் கெடுத்துக்கொண்டது. இக்கெட்ட பழக்கங்களை விட்டு விடுங்கள்—ஆ, ஐயோ."

தன் கையைப் பற்றிய ஜயாவின் கரத்தை ஓர் உதறி உதறிவிட்டு எழுந்தான்.

"பீடை, எப்போதும் உதய ராகம் தான்" என்று சொல்லிக்கொண்டே கோட்ஸ்டாண்டிலிருந்த ஜரிகை அங்கவஸ்திரத்தை எடுத்து மேலே போட்டுக் கொண்டு வெளியே சென்றுன் நடராஜன்.

ஜயாவின் மனம் முறிந்தது. "ஐயோ, நான் இருப்பதே அவருக்கு இடைஞ்சலாய்விட்டதே. இனி இந்த உயிரை வைத்துக்கொண்டு என்னதாகுகவேண்டும்" என்ற வார்த்தைகள் அவளை அறியாமலே வெளிவந்தன. கண்கள் இருண்டு, மயங்கி மேஜைக்கடியிலேயே விழுந்துவிட்டாள்.

மணி பதினென்று. ஜயா அப்பொழுதுதான் கண்களைத் திறந்து நாலு பக்கமும் பார்த்தாள். நடந்ததெல்லாம் பயங்கரமான கனவுபோல் தோன்றியதவளுக்கு. தரையில் விழுந்த தான் கட்டிலுக்கு வந்ததெப்படி எனச் சிந்தித்தாள். தலையைத் திருப்பி அறைமுழுவதும் பார்த்தாள். நடராஜன், மிகக் கவனத்துடனும் ஆதரவுடனும் அவளைக் கவனிப்பதைத் தெரிந்து கொண்டாள். அவள் பார்ப்பதைக் கண்டதும், நடராஜன் "ஜயா, என்ன வேண்டும் உனக்கு? தாகமாயிருக்கிறதா" என்று கேட்டுக்கொண்டே எதிரில் மேஜைமேலிருந்த டம்ளரை எடுத்தான்.

ஜயா, ஆச்சர்யத்துடன், அவனை உற்றுப் பார்த்தாள். குடிவெறியில் விகாரமான பார்வையும், சிடுசிடுப்பும் இல்லாமல், அநுதாபமும், அன்பும் நிறைந்த அவன் வதனத்தைக் கண்டும், நம்பிக்கை ஏற்படவில்லை. கண்களைப் பழையபடி மூடிக்கொண்டாள்.

நடராஜன், அன்பான குரலில்பேசத்தொடங்கி, "ஜயா, எல்லாவற்றையும் மறந்துவிடு. நீ இதுவரை நினைத்தேங்கியது போல் நான் கெட்டுப்போய் விட்ட புருஷனல்ல. ஆனல், ரொம்பக் கொடியவனுக நடித்துக்கொண்டுவிட்டேன். கண்களைத்திற. ஜயா, எல்லாம் ஒரு நாடகம். நம்பமாட்டாயா நான் சொல்வதை" என்றுன்.

ஜயா, வியப்புடன் எழுந்து உட்கார்ந்தாள். "நிஜமாகவா! நான் ராப்பகல் தூக்கமின்றித் தவித்ததெல்லாம், உங்களுக்கு விளையாட்டாகவா இருந்தது?

நடராஜன், கிலேசத்துடன், "அடாடா, மணியன் சொன்னதை நான் அப்போ பொருட்படுத்தவில்லை. எவ்வளவு கல்நெஞ்சனுக நடந்துகொண்டேன் என்று நினைக்க எனக்கே ரொம்ப வருத்தமாயிருக்கிறது. ஜயா, என்னை நம்பமாட்டாயா? நீ நினைத்ததுபோல், நான் குடியனல்ல. தாசிலோலனுமில்லை. உன்னுடைய ஒவ்வொரு வேண்டுதலின்போதும் நான் இரக்கமில்லாதவன் போல் நடிக்க ரொம்ப சிரமப்பட்டேன். சீ, என்னை நொந்து கொள்கிறேன் ' இப்போது. ஜயா, இன்னும் நீ அழலாமா? அவன் கண்களிலும் ஜலம் ததும்பியது.

ஜயா தன் கண்களை அடிக்கடி த்துடைத்துக்கொண்டாள். அபாரமான கவலையை அடைந்த அவள், திடீரென்று ஏற்பட்ட மாறுதலால் மிகவும் பாதிக்கப்பட்டாள். இன்னது சொல்வதென்றே அவளுக்கு விளங்கவில்லை. நடராஜன், எழுந்து அவளருகில் சென்று, ஜேபியிலிருந்த வைர வளையலை எடுத்து அவள் கையில் அணிந்தான்......................

சிறிது நேரம் சென்றபிறகு ஜயா, நடராஜனை எதிட்டு நோக்கி, "என்னை இப்படித் தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்ததில்உங்களுக்கென்னகிடைத்தது?" என்று கேட்டாள்.

நடராஜன் பதில் சொல்லு முன், யாரோ வரும் சப்தம் கேட்க ஜயா, எழுந்து அவனை விட்டு விலகினின்ருள். நடராஜன், "மணியனு, வா வா." எனவும், அங்கே வந்த மணியன், நடராஜன் பக்கத்திலுட்கார்ந்து, "என்ன கிடைக்கும்.? மனேவேதனையைத்தவிர வேறென்ன? ஒரு கிறுக்கன் இவன். ஜயா, சில மாதங்கட்கு முன் ஒரு ஸினிமா பார்க்கப் போயிருந்தோம். துர்ச்சகவாசங்கட்கு அடிமையான ஒரு புருஷனை அவன் மனைவி வெறுத்து, அவனை விட்டுவிலகி, வேறு மணம் செய்துகொண்டாள். அது ஒரு இங்கிலீஷ் ஸினிமா. அதைப்பார்த்தது முதல் இவனுக்கு (நடராஜனைச் சுட்டி) ஏதோ பைத்தியம் பிடித்தது. கொஞ்சம் நடிக்கக் கற்றுக்கொண்டான். அதன் முடிவுதான் தெரியுமே! என்டா நான் என்ன சொன்னேன்; ஜயித்தது யார்?" என்றுன்.

நடராஜன், "ஸந்தேகமென்ன? ஜயா தான்" என்று விடையளித்தான்.

"எப்பொழுதும் அழுகிருள்..... அதற்கு என்ன காரணம்?"

பலவீனப்பட்டிருக்கும் குழந்தைக்கு சிறந்ததென நிரூபணமாகியுள்ள இம்முறையையே டாக்டர்கள் சிபார்சு செய்கிருர்கள்.

வெடு வெடுப்பு "நரப்பு" பலவீனம், கோபம்—இவற்றிற்குக் காரணம் குழந்தையின் ஆகாரத்தில் முக்கியமான சத்துக்கள் ல இல்லாததே எனக் கூறுகிறானர். இந்தக் குறையை நீக்கி வலுவூட்டினல் சந்துஷ்டியும், சுறு சுறுப்பும் பிறக்கும்.

இங்கிலையில் ஸ்காட்ஸ் எமல்ஷனை விடச் சிறந்த பலன் தருவது வேறெதுவுமில்லை. காட்லிவர் ஆயில் சாதாரணமாக வலுவூட்டும்; அசல் போஷாக்குச் சத்தும், வேண்டிய அளவுக்கு விட்டமின்கள் A அண்டு D யும நிறைந்திருக்கின்றன. அத்துடன் ஸ்காட்ஸ் எமல்ஷனில் கால்ஷியம் உப்புகளும், பாஸ் ரஸமுமிருக்கின்றன. இது தேகத்திற்கு வலுவும், எலும்புகளுக்கு உறமும் அளிக்கிறது. பலவீனப்பட்டுள்ள நரம்புகளுக்கு உத்வேகம் மூட்டுகிறது. வாய்க்கு ருசியானது; எளிதில் ஜீரணமாகக்கூடியது சாதாரண காட்லிவர் ஆயிலைவிட ஸ்காட்ஸ் எமல்ஷன் மும்மடங்கு பலன் தரத்தக்கது!

பூரணமான வேலை

காட்லிவர் ஆயிலிலிருந்து பூரா அனுகூலத்தையும் அடையத்தக்க சிறந்த சத்துக்கள் ஸ்காட்ஸ் எமல்ஷனிலிருக்கின்றன. சாதாரண காட்லிவர் ஆயிலைச் சாப்பிட்டால், இதர வகைகளில் கால்ஷியம் முதலியவற்றை உட்கொள்ளவேண்டும். பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி பலவீனத்தைப் போக்க இதுவே சிறந்தது.

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள:—

எலும்புக்கு வலுவூட்டும் ஸ்காட்ஸ் எமல்ஷன்;

வெண்ணெய் அல்லது சுத்தப் பாலை விட 80 மடங்கு அதிகப் பலனளிப்பது.

—முட்டையை விட இருமடங்கு அதிகப் பலன் தருவது.

தேக வளர்ச்சிக்கு;

—வெண்ணெயை விட 8 பங்கு அதிகப் பலன தருவது.

—அன்னசிப் பழத்தை விட 100 பங்கு பலன்.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம் ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - காராச்சி - அமிருதசரஸ்

S 34

தையல் வேலை

(ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.)

[காபிரைட்]

டாட்டிங் தையல் வேலை

'இரண்டு ஷட்டில்களை உபயோகித்துத் தைக்கும்முறை:— சிறு;சிறு வளையங்களை அடியில் ஒற்றை நூலால் தொடுக்கத் தேவையேற்படாதபொழுதும் அல்லது, மற்றொரு தொகுதியான தையலுக்குச் செல்லும் நூலை மறைக்கத் தேவையான பொழுதும் அல்லது வர்ண நூல்



டாட்டிங் தையல் மாதிரிகள்.

கள் சேர்த்துத்தைக்கும்பொழுதும் இரண்டு ஷட்டில்கள் உபயோகிப்பது அவசியமாயிருக்கும்.

இரண்டு ஷட்டில்களினால் தைக்கும்பொழுது இரண்டு ஷட்டில்களிலும் உள் நூல்களின் நுனிகளை முடிச்சுப்போட்டுக்கொள்ளவேண்டும். பின்பு ஒரு ஷட்டிலில் உள்ள நூலை இடது கை பாம்பு விரலில் சுற்றிக்கொண்டு ஷட்டிலைக் கீழ் நோக்காய்த் தொங்கவிட்டு விடவேண்டும். பின்பு இரண்டாவது ஷட்டிலை வலது கையில் எடுத்துக்கொண்டு ஒரே ஷட்டிலினால் தைக்கிற முறைப்படி தைக்கவேண்டும்.

பின்பு, தேவையானபொழுது மற்றொரு ஷட்டிலை எடுத்து உபயோகிக்கவும். இரண்டொரு முறை தைக்கிறபொழுது இரண்டு ஷட்டில்களை உபயோகிப்பது வெகு எளிதாகத் தோன்றும். பின்னால் இரண்டு ஷட்டில்களை உபயோகித்து மாதிரிகள் தயாரிப்பதை விவரிக்கிறபொழுது அவற்றை விவரித்துக் கூறுவேன்.

சேர்க்கப்படாத ஸ்காலோப் தையல்:—12 தையல்கள் தைத்துக்கொள்ளவும். பின்பு அவை பாதி வட்டமாகுமளவும் நூலை இழுத்து வாங்கவும். அடுத்த ஸ்காலோப்பின் முதல் தையலும் கடைசி ஸ்காலோப்பின் கடைசித் தையலும் நெருங்கித் தொடுமாறு நூலை இழுத்துக்கொள்ள வேண்டும்.

2 சேர்த்து ஸ்காலோப் தையல்:-4 தையல்—1 பிக்காட்—* 8 தையல்—1 பிக்காட்—4 தையல்—பாதிவட்ட வடிவமாகுமட்டும் நூலை இழுத்துக்கொள்ளவும்—முந்தின ஸ்காலோப்பின் 2-வது பிக்காட்டினூடாக நூலை நுழைத்து * நட்சத்திர அடையாளத்திலிருந்து திரும்பத் திரும்பத் தைக்கவும்.

பிக்காட்டுகளோடு கூடிய ஸ்காலோப் தையல்:—படம் 3 பார்க்கவும். 4 தையல்—1 பிக்காட்—* 3 தையல்—1 பிக்காட்—2 தையல்—1 பிக்காட்—2 தையல்—1 பிக்காட்—3 தையல்—1 பிக்காட் 4 தையல் வளையத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

✂ அடுத்த வளையத்தைத் தொடங்குமுன் போதிய அளவு நூல் விட்டுக் கொள்ளவும். வளையங்கள் ஒன்றின்மேலொன்ருய் படியாதிருக்கும் பொருட்டு 4 தையல்கள் தைத்துக் கொள்ளவும். முந்தின வளையத்தின் 5—வது பிக்காட்டினூடாக இடது கை நூலை வாங்கிக்கொள்ளவும். பின்பு* முதல் திரும்பத் திரும்பத் தைக்கவும்.

* * * *

இது ஓர் ஆச்சர்யமல்லவா !!

இல்வாழ்க்கைத் திறவுகோல் இதுவே. தங்கள் எண்ணத்தை எனக்குத்தெரிவிக்காமலே திரிகால பலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2. தங்கள் எண்ணத்தை தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5. ஜனன காலம் தேவை அல்லது எனக்குக் கடிதம் எழுதும் நேரம் எழுதவும். இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10. வி. பி. பிரத்தியேகம்.

ரா. முத்துவேல் முதலியார்,
கலைமகள் ஜோதிடம்,
48, தேர்முட்டி வீதி,
திருப்பாபுலியூர்,
தென்னாற்காடு ஜில்லா.

வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். செர்த்தக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.

KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.

எரிப்பும், வெடிப்பும் வராமல் உடம்பைக் காப்பாற்று.

அனேக ஸ்திரீகள் தோல் வெடிப்பினாலும், தோல் எரிப்பினாலும் வரும் சஞ்சலம் விலக்கமுடியாததென்று எண்ணுகிறார்கள். இன்னாளில் ஆயிரக் கணக்கானவர்கள் குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளினால் வரும் விநோதமான தேற்றத்தை கண்டுபிடித்துக் கொள்கிறார்கள்.

கொதிப்பான நுட்பமுள்ள உடம்பின் தோலுக்கு இந்த தூள் பரிமள தைலம் போலிருக்கும். குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் ஆற்றுந் தன்மை யுள்ள தைலங்கள் கலந்து மருந்தூட்டி ரசாயன முறைப்படி, உத்தமமான வழியாய்ச் செய்யப்பட்டது. இந்த தூள் மிகவும் நேர்த்தியானது, அதிக சுத்தமானது. இதற்கு மேலான தூள் வாங்கமுடியாது. சாதாரணத் தூள்களைவிட இந்த தூளுக்கு தணித்து ஆற்றும்படியான வல்லமை அதிகம். உடம்பின் தோலில் பதர் வந்த இடங்கள்மேல் இலேசாக இந்தத்தூளைத் தூவினால் மேன்மையாயிருக்கும். வேர்வையைத் தணிக்கும். அதன் வாசனை மணமாயும் உல்லாசமாயுமிருக்கும்; தேகம் முழுதற்கும் கமப்பான வாசனையைக் கொடுக்கும்.

ஒருடப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் இன்றைக்கே வாங்கு. அது சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக வேண்டியது. இந்த தூள் குழந்தைகளுக்கு முக்கியமானது.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM

எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.

ESTD. 1893.

சவரன் மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல் வெள்ளி சாமான்களும்

உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸி சபீல்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்
112. சைனாபஜார் ரோட்டு மதராஸ்

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!

புதுவைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்த மடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகஙகள்)	ரூ.	2—8—0
2.	வசனஙகள் (6-பாகஙகள்)	,,	2—0—0
3.	கதைக்கொத்து	,,	0—8—0
4.	பகவத்கீதை	,,	0—8—0
5.	கட்டுரைகள் பகுதி 1 தத்துவம்	,,	0--10--0
	,, ,, 2 மாதர்		0—8—0
	,, ,, 3 கலைகள்	,,	0—8—0
	,, ,, 4 சமூகம்	,,	0--1? -0

6. Bharathi and his works
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி. சென்னை

மரியாதைராமன் கதை

தன் குழந்தையைக் கொன்றுவிட்டுச் சக்களத்திமேல் பழிபோட்ட கதை



சிறுவர் பகுதி

யார் பெரியவர்

(ஸ்ரீமதி கோமளவல்லி)

முன்னொரு காலத்தில் லக்ஷிமி ஸரஸ்வதி இருவரும் தங்களுள் யார் பெரியவர் என்று ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது லக்ஷிமி முதலில் "ஒருவருக்கு எவ்வளவு செல்வம் வேணுமானாலும் அளிக்கலாம் அது உன்னால் முடியாதல்லவா" என்றாள். அதற்கு ஸரஸ்வதியோ "வித்தையிருந்தால் செல்வம் தானே வருகிறது. புத்தியில்லாதவர்கள் எதற்கு உபயோகம். ஆகையால் புத்திதானே முக்கியம்" என்றாள். "சரி நீ உன்னுடைய பரீக்ஷையை ஆரம்பி, நானும் ஆரம்பிக்கிறேன். இதில் யார் தோற்கிறோம் யார் ஜயிக்கிறோம் என்று பார்த்துவிடுவோம்" என்றாள் லக்ஷிமி. "பெரியவர்களான நீங்களே முதலில் ஆரம்பியுங்கள்" என்றாள் ஸரஸ்வதி.

ஒரு காட்டில் ஒரு வேடன் ஐந்தாறு குழந்தைகளுடன் அன்றாடம் காலக்ஷேபம் செய்வதற்கே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட லக்ஷிமி தன் கடாக்ஷத்தினால் அவனுக்கு சகல சம்பத்துக்களும் உண்டாகச் செய்வதென்று நிச்சயித்துக் கொண்டாள். அவள் அவ்வாறு நினைத்ததும் அவ்வேடன் தன் குடிசை

யின் மத்தியிலேயே ஒரு பெரிய புதையலைக் கண்டான். அந்த தனத்தைக் கண்ட வேடன், அப்பணத்தினால் தன் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி நிறைத்தான். அவன் எடுக்க, எடுக்க அத்திரவியம் குறையாமலிருக்கக் கண்டதும் தன் சிறு குடிசையைப் பெரிய அரண்மனையாகக் கட்டினான். மனைவி மக்களுக்கெல்லாம் பட்டாடைகளும் ஆபரணங்களும் வாங்கிக் கொடுத்தான். கொஞ்ச நாள்களில் அக்காட்டையே அழித்துப் பெரிய பட்டணமாக்கி அதற்குத்தான் அரசனுமானான்.

இவ்வேடன் இவ்வாறு இருப்பது தெரிந்த அயல் தேசத்துச் சிற்றரசன் ஒருவன் இவனுடன் வெகு நேசமாக இருந்தான். அச்சிற்றரசனுக்கு அழகிலும் புத்தியிலும் சிறந்த ஹேமாங்கினி என்றொரு குமாரி உண்டு. அவள் ஒரே பெண்ணாகையால் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டாள். அவளுக்குக் கல்யாணம் செய்ய நல்ல அரச குமாரனாக ஒருவன் வேண்டுமென்று தேடிக் கொண்டிருந்தான் சிற்றரசன். அச்சமயம் காட்டை நாடாகச் செய்துகொண்டிருந்த வேட அரசனின் ஒரு குமாரனின் ஞாபகம் வந்தது. அவனுக்குப் பட்டம் வருமென்றும் அத்திரண்ட ஐச்வரியங்களுக்குத் தன் மகள் அதிபதியாவாள் என்றும் ஆகையால் அவனுக்கே தன் குமாரியைக் கொடுக்க வேண்டுமென்றும் எண்ணிக்கொண்டு அவ்வேட அரசனிடம் சென்று தெரிவித்தான். அவனும் அதற்குச் சம்

காஸ்டரால் மிகச்சிறந்த கூந்தல் தைலம்; உங்கள் கூந்தலுக்கு அழகூட்டும்; எவ்வளவு வெப்பத்திலும் மண்டைக்குக் குளிர்ச்சியளிக்கும்.

CASTOROL

வாசனைமிகுந்த விளக்கெண்ணெய் விசேஷ சேருவானது. இதையே கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பவர்கள்:—
கல்கத்தாகெமிக்கல் கம்பெனி, லிமி.

HO 2

ஜலதோஷம்—அலட்சியத்தால்
கடுமையான நோய்கள் ஏற்படலாம்!



ஜலதோஷத்தை அலட்சியமாக விட்டால், அது பிறகு இன்புளூவென்ஸாவாகவோ அல்லது நியுமோனியாவாகவோ மாறலாம். எனவே ஆரம்பத்திலேயே மிஸ்டல் உபயோகியுங்கள். மிஸ்டல் சிறந்த முறையைக்கொண்டு தயாரிக்கப்படுவது. இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்குக.

Mistol
REG. TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி எறிகிறது.

M11

தாது புஷ்டியைக் கொடுப்பதில்
சிறந்தது

சி.எம்.சாமி
மன்மதக் குளிகை

இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப் படுத்தி இரத்த விருத்தியையும் வீரியவிருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும்.

20 குளிகை ரூ 2/-

பிராஞ்சு:—1/54. அருணசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

மதித்தான். சிற்றரச குமாரியான ஹேமாங்கினிக்கும் வேட அரச குமாரனை விருபாக்ஷனுக்கும் வெகு விமரிசையாய்க்கல்யாணம் நடந்தேறியது.

வேட அரச குமாரனை விருபாக்ஷகன் கொஞ்சங் கூடப் படிப்பில்லாதவன். யோசனையின்றி ஒன்றிருக்க ஒன்று கூறுவான். அவனுடன் சிறிது நேரம் யாரேனும் பேசிப் பார்த்தால் அவன் ஒன்றுமறியாதவனென்று நன்ருகப் புலப்படும். அவனுக்காக ஒன்றுந் தெரியாவிட்டாலும் பிறர் சொல்லியும் கேட்கமாட்டான். மணம் நடந்த மறுதினம் நன்ருக அலங்காரம் செய்த படுக்கை அறையை அவன் கண்டதும் மெத்தையில் படுத்துக்கொண்டு தூங்கிவிட்டான். அரச குமாரியான ஹேமாங்கினி அதைக் கண்டு அவனை எழுப்புவதற்காக வீணையைச் சுருதி சேர்த்துப் பாடினுள். அதைக்கேட்ட விருபாக்ஷகன் புலியோ சிறுத்தையோ தன்னைத் துரத்துகிறதென்று ஒரே

ஓட்டமாக அவ்வறையை விட்டு வெளியே ஓடினுன். இவன் இவ்வாறு ஓடுவதைக் கண்ட ராஜாவின் பாராக்காரர்களும் இன்னும் அங்குள்ளவர்களும் இவனைத் தொடர்ந்து ஓடினுர்கள். இவனுக்கோ தன்னை யார் என்ன செய்துவிடுவார்களோ என்றஞ்சியவனுக பின்னுல் கூடத் திரும்பிப் பார்க்காமல் ஓடிக்கொண்டே இருந்தான்.

இவைகளையெல்லாம் பார்த்த ஸரஸ்வதி "இப்பொழுதாவது தாங்கள் தோல்வியடைந்ததாக ஒப்புக்கொள்ளுங்கள். இவ்வளவு பூபோக பாக்யமிருந்து ஏன் இப்படி ஓடுகிறேமென்று அவனுக்கே புரியாது. 'ஏன் இவ்வாறு ஓடிக்கொண்டிருக்கிறீர்' என்று அரச பரிவாரம் கேட்டால் இவனுல் என்ன பதில்சொல்ல முடியும்," என்றுள் சரஸ்வதி லக்ஷ்மியிடம்.

"ஆமாம் நீ கூறுவது நிஜம்தான். ஸரஸ்வதியான உன் கடாக்ஷமும் வேண்டியதுதான். இந்தத் தடவை நான் தோற்றேன் என ஒப்புக்கொள்ளுகிறேன். இனி நீ உன் இஷ்டப்படி செய்" என்றுள் லக்ஷிமி.

அதுகேட்ட ஸரஸ்வதி விருபாக்ஷன் புத்திசாலியாகவிருக்கும்படி கடாக்ஷித்தாள். உடனே ஓடிக்கொண்டிருந்த விருபாக்ஷன் நின்றுன். தன்னை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்த அரசனின் பரிவாரங்களைக் கண்டு கை தட்டிக் கலகலவென நகைத்தான். இவன் இவ்வாறு நகைப்பதைக் கண்ட ராஜ சேவகன் ஒருவன் "இளவரசே, ஏன் இவ்வளவு ஆனந்தமடைகிறீர்கள். எதற்காக இவ்வளவு வேகமாக ஓடி வந்தீர்கள்" என வினவினுன்.

அதுகேட்ட விருபாக்ஷன்மறுபடியும் நகைத்தவனுக "நீங்கள் எதற்காக இவ்வளவு தூரம் ஓடிவந்தீர்கள். நான் ஒரு இளவரசனுகி ஒரு ராஜகுமாரியையும் மணந்தால் மூன்று மைல்கள் ஓட்டமாக ஓடி உன்னை நமஸ்காரம் செய்கிறேனென்று அதோ இருக்கும் கோவிலில்உள்ள அம்பிகையைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். அதன்படிசெய்வதற்காகஇப்பொழுதுவந்தேன். நீங்கள் எதற்காக ஓடி வந்தீர்கள்? முட்டாள்களா? நான் வந்தால் இங்கேயேஇருந்துவிடுவேனு? போங்க ளரண்மனைக்கு" என்று வெகு சாதுரியமாக மொழிந்தான்.

வாணிதேவிமனது வைத்தபின் புத்திக்குக்குறைவு உண்டா? சிறிதுநேரங் கழித்து அரண்மனைக்குச் சென்றுன். பிறகு அவன் தனக்கு மேல்பட்ட யோசனையுள்ளவர்கள் ஒருவருமில்லை எனும்படி அந்த ராஜ்யத்தை ஆண்டு வந்தான்.

1000 ரூபாய் கஜானு பைகள்.

சர்க்கார் கஜானுக்களிலிருந்து நாம் பெறும் தொகைகளை வெள்ளி நாணயங்களாகப் பெற்றுக்கொள்ளும்போது, அவைகள் சர்க்கார் முத்திரை தரிக்கப்பட்ட பைகளில் கொடுக்கப்பட்டால் அவைகளை எண்ணவோ அல்லது பரிசோதித்துப் பார்க்கவோ அவசியமிராது. ஏனென்ருல், எண்ணிக்கை குறையாமலும், நாணயங்கள் பழுதற்றவைகளாயுமிருப்பது நிச்சயம். அவ்வாறே ஸ்டேன்ஸ் "T. S. & Co., Ltd." முத்திரை போடப்பட்ட துணிப்பைகளில் காப்பிக்கொட்டை வாங்குவீர்களேயானுல் முதல்தரமான அசல் நீலகிரிச் சரக்கையே பெறுவீர்கள். இதர சாமான்யமான காப்பிக் கொட்டையால் இந்தப்பைகள் நிரப்பப்படுவதில்லை. சாயமேற்றின காப்பியில் நாங்கள் வியாபாரம் செய்வதுமில்லை. 3, 5, 7 பவுன் பைகளில் கிடைக்கும்.

பைகளின் பேரிலுள்ள

S & Co.

என்கிற வியாபாரக் குறியையும் கவனித்து வாங்கவும். போலிச் சரக்குகளை ஒப்புக்கொள்ளாதிர்கள்.

டி. ஸ்டேன்ஸ் & கோ.,
கோயமுத்தூர்.

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரியின் மற்றும் சில மருந்துகள்

எவ்வித ஜுரங்களுக்கும் ஓர் அரிய ஔஷதம் **ஜ்வரேக**
ஊக்கம் உற்சாகம் ஊட்ட அஜீர்ண. பித்தசமனி **ஊர்ச்சிப்**
குழந்தைகளுக்கு சுகபேதியாக **பாலக்ஸ்**

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் தெரு, மதருஸ் (டி ப்போ. பம்பாய், ரங்கூன், கொழும்பு)

திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், ஈரோடு, திருப்பூர் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்க.

வருங்கால பலன்

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரிய அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.

NO MORE
GREY HAIR

வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.

KESHKALA
RESTORES NATURAL TINT

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனபஜார் ரோட், மதராஸ். வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ட-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொளும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay, 14

நோயற்ற வாழ்வு

வியாதியும் ரோக நிதானமும்

(வைத்தியரத்ன பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது)

[பொதுவாக வியாதியென்றல் என்ன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. தேஹம், மனம் இவ்விரண்டுக்குமுள்ள சுக நிலைமையை ஆரோக்கியமென்றும், அந்நிலைமைக்குச் சிறிது அல்லது பெரிது ஹாநி ஏற்படின் அதை அநாரோக்கியமென்றும் நாம் வழங்குகிறோம். அவ்வநாரோக்கிய நிலைமை விஸ்தரிக்கப்படுகிறது]

தேஹமென்பது ஜீவதாது அடங்கிய ஓர் அற்புதமான யந்திரக் கூடு. அதன் அநேக உருப்புகளும், உள்ளமைப்புகளும், வெளிப்புற உட்புற உருப்புகளின் இயக்கங்களும் இயற்கைக்கு மாறுபடாது இருந்து ஒற்றுணர்ச்சியுடன் வளர்ந்து வரும் சுக நிலைமையை ஆரோக்கியம் என்போம்; அதைத்தான் ஸ்வாஸ்தியம் என்றும் கூறுவோம். வியாதி அல்லது நோய் என்பது அதற்கு நேர் எதிரிடையான நிலைமை. உடலின் உருப்புகளில் ஒன்றின் அல்லது பலவற்றின் கட்டுக்கோப்பு முறைகளிலாவது, அவற்றிற்குரிய க்ரியாம்சங்களிலாவது ஏற்படும் ஏற்றத்தாழ்வான மாறுபாடுதான் வியாதி. இவ்வியாதி நிலைமை அந்தந்த அவயவங்களைப்பற்றி ஆகஸ்மிகமாகவும் திடீரென்று நிகழலாம்; தாதுக்களைப்பற்றி உருப்புகளையும் அவற்றிற்குற்ற க்ரியாம்சங்களையும் கிரமக் கிரமமாக உருமாறச் செய்தும் உற்பத்தியாகலாம். இவற்றுள் முந்திய முறையில் உண்டாகும் வியாதிகள் ஆகந்துக விகாரங்கள் என்றும், பிந்திய முறையில் ஏற்படுபவை தோஷஜ விகாரங்கள் (அல்லது சாரீர ரோகங்கள்) என்றும் வைத்திய சாஸ்திரமறிந்தவரால் வழங்கப்படும். ஆதுநிக வைத்திய வல்லோர் சிலர் இவற்றையே சாரீர விகாரங்கள் என்றும், தோஷஜ விகாரங்கள் என்றும் கூறுவதுண்டு. வெவ்வேறு அவயவங்களின் அல்லது பலவேறு தாதுக்களின் க்ரியாம்சங்களைப் பற்றிய விகாரங்கள் (வியாதிகள்) என்பவை வாத-பித்த-கிலேஷ்மங்கள் என்கிற மூன்று சக்தி விசேஷங்களால் அமைந்த ஸ்வாஸ்த்யம் என்னும் ஸமநிலைமையின் வழுவதலாகும். அவ்விதமே அநேக விதமான அவயவங்களின் ஸங்கடனங்களென்கிற கட்டுக்கோப்புகளின் நிலைகுலைவுகளைப்பற்றிய விவரங்கள் (வியாதிகள்) என்பவை உட்புற-வெளிப்புற அவயவக் கட்டுக்கோப்புகளில் ஏற்பட்ட ஸமநிலைமையின் சீர்குலைதலேயாம். இவ்விருவித வியாதிகளும் முறையே தோஷஜ விகாரங்கள் என்றும், சாரீர விகாரங்கள் என்றும் ஆயுர்வேதமறிந்தவரால் கூறப்படும். ஆங்கில வைத்திய முறையில் இவற்றை முறையே பிஸியலாஜிகல் அல்லது பங்ஷனல் டிஸீஸெஸ் என்றும், அனடாமிகல் அல்லது ஸ்டிரக்சரல் டிஸீஸெஸ் என்றும் சொல்வது வழக்கம்.

முற்கூறிய இரண்டுவித வியாதிகளும், எப்படியும் அனுபவ பரீக்ஷைகளில் ஒன்றோடொன்று கலந்து தோன்றுமேயன்றி, தனித்தனியே பகுத்துணருமாறு பிரிந்துண்டாவது அரிது. ஏனெனில் சாரீர வியாதிகளில் முக்கியமாகவும், ஆகந்துகங்கள் என்கிற தற்செயலாகத் தோன்றும் கோளாறுகளிற் பொதுவாகவும் வாதாதி தோஷங்களின் கோளாறு ஏற்படாது. சாரீரக் கோளாறு காண்பது மிக மிக அரிது. அவயவங்களிலேனும் சரி, இரஸ-ரக்த-மாம்ஸாதி தாதுக்களிலேனும் சரி; எவ்விகாரம் தோன்றியபோதிலும் வாதாதி தோஷக் கோளாறுகள் அடுத்தாற்போல் ஏற்படுவதும், அல்லது கூடவே ஏற்படுவதும், அத்தோஷக் கோளாறுகளின் குறிகளும் சாரீராதி விகாரக்குறிகளோடு கலந்து தோன்றுவதும் இயல்பு. தோஷங்களாலாகும் வியாதிகளுக்குக் காரணம் இரக்தாதி தாதுக்களிலேயே உண்டாய், உடலிலேயே பரவி, அப்பால் வெளிப்படையாக நோயைக் கிளப்பலாம்; அல்லது அவை வெளிப்புறக் காரணங்களால் ஏற்பட்டுத் தேஹத்தின் உள்ளோ அல்லது வெளியிலோ பரவி நோயையுண்டுபண்ணலாம். இவ்விரண்டில் முதலாவதை தோஷஜங்கள் அல்லது ஆந்தர காரணங்கள் என்றும், இரண்டாவதை ஆகந்துகங்கள் அல்லது பாஹ்ய காரணங்கள் என்றும் வழங்குவோம். இரண்டாவதான ஆகந்துக ஹேதுக்கள் தேஹதாது வைஷம்யத்துக்கு அனுகூலமாகக் கிடைக்கும் எல்லாச் சாதனங்களையும் அடக்கிக்கொள்ளும்; அவை உடலின் கோளாறுகளையும், உள்ளத்தின் கோளாறுகளையும் உண்டுபண்ணவும் அல்லது அவ்விகாரங்களுக்கு உடந்தையாயிருக்கவும் கருவிகளாகும்; காலத்தின் அல்லது இடத்தின் சீதோஷ்ணதி நிலைமைகள், வாயு, நீர், உணவு, விஷகுணமுள்ள சரக்குகள், பழகும் மனிதர்கள் அல்லது வேறு பிராணிகள், தினப்படியாக அல்லது விசேஷப்படியாக உபயோகிக்கும் பல்வேறு வஸ்துக்கள் முதலியவைகளே அவ்வெளிச் சாதனங்களாம்.

இவ்வெளிச்சாதனங்கள் எப்படியிருந்தபோதிலும், வியாதி ஹேதுக்களிற் சில உடனே தொடர்ந்தாற்போல் நோயை விளைவிக்கக் கூடியனவல்ல; சில தேஹப் பிரக்ருதிகள் (சரீரக் கூறுகள்) சிற்சில வியாதி காரணங்களுக்கு எளிதில் வசப்படக் கூடாதவைகளாகவும் வேறு சில; நோய்களுக்கு ஜடிதியில் வசப்படக்கூடியனவாகவும் இருப்பதால், வியாதி காரணங்கள் எல்லாம் ஒரே சீராக அனைவரது தேஹங்களிலும் ஒரே ரீதியில் வியாதிகளை விளைவிப்பதில்லை. ஆகவே, விஷயமறிந்த வைத்தியர்கள் ரோக காரணங்களை நிமித்த காரணங்களென்றும், பிரதான காரணங்களென்றும் இருவகையிற் பிரித்துப் பிணியாளர்களைப் பரிசோதிப்பது முறை. நிமித்த காரணங்கள் ஸந்தர்ப்பாநுஸாரமாய் வாதாதிதோஷங்களை ஸாமர்க்யமாகவும், இரஸ-ரக்தாதி தாதுக்களை அபூர்வமாகவும் வியாதியின் நிமித்த காரணங்களுக்கு இலக்காகச் செய்து, வியாதிகளை முடிவாக வாதாதி தோஷக்கோளாறுகளைக்கொண்டே விளைவிக்கின்றன. புற்பூண்டுகளும் காளான்களும் நிலங்களில் இடம் பெற்று, வேரூன்றி வளர்வது போல், வியாதிகள் பிராணி சரீரங்களிற் களைத்து வளரத் தொடங்கும். ஆனால் புற்பூண்டு முதலியவை செழித்து வளர நிலம் தகுதியானதாயிருக்க வேண்டும். அவ்விதமே வியாதிகளின் காரண பூதங்களான வித்துக்கள் வீழ்ந்து முளைத்துச் செழிக்கத்தக்கதாகச் சரீரமும், முற்கூறிய வெளிச்சாதனங்களாலோ வேறு வகையாலோ வியாதிகளை ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கலாம்.

அவ்வாறு வியாதிக்கு உடலை ஆயத்தமாக்கும் நிலைமைகளையே நிமித்த காரணங்களென்போம். அவ்வித நிமித்த காரணங்களைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம்:—(1) தேஹம் மிக்க பலஹீனமடைந்திருத்தல், (2) தேஹ-மனோ நிலைமைகளுக்குக் கிளர்ச்சி தரும் உணர்ச்சிகள் (அதாவது க்ஷோபம் அல்லது உத்வேகம்), (3) ஏற்கனவே ரோகங்களால் தாக்கப்பட்டிருத்தல், (4) பிணியால் வருந்தியவர்களின் பரம்பரையிற் பிறத்தல், (5) வாத-பித்தாதி தோஷங்கள்: மேலிட்ட சுபாவம்

உலக பிரதம ஸ்திரீ சாரணர் லேடி பேடன் பவல் சென்னையில் உபசரிக்கப்பட்டபோது எடுத்த படம்.

(அதாவது தோஷப் பிரக்ருதி), (6) குழந்தை அல்லது கிழப் பருவம், (7) பால் அல்லது லிங்கம் (அதாவது ஆண் பெண்) (8) அவரவர் செய்யும் வேலையின் தன்மை பிரதாநகாரணம் என்பதே நிதாநம் எனப்படும்; இதல்லாமல் நிமித்த காரணங்கள் முக்கியமான வியாதிகளை விளைவிக்கமாட்டா. நிமித்த காரணங்களிற் சில அல்லது பல ஏற்பட்டிருந்து, நிதாநம் என்கிற பிரதான காரணமும் சரீரத்தில் இடம் பெற்றுவிட்டால், வியாதி அல்லது வியாதிகள் ஏற்படுவது நிச்சயம். நிமித்த காரணங்கள் யாவும் உண்மையில் வியாதிகளின் ஜனக காரணங்களாகா. ஆனல் சுகாதாரக் கோட்பாடுகள், ஆரோக்கிய ஸாதநமான நியமங்கள் ஆகியவற்றிலிருந்து சிறிதும் தவறுதலின்றித் தேஹ தார்ட்யமும் மனோதார்ட்யமும் பெற்று உடலை உள்ளும் புறமும் பரிசுத்தமாகப் பரிபாலித்து வருபவரிடம் பிரதான காரணங்கள் என்கிற வியாதி ஹேதுக்கள் அணுகவும் அணுகா. அணுகினலும் அவர்களது தேஹத்தைத் தாக்கித் தொந்தரவளிக்க வல்லவைகளுமாயிரா. ஆகவே, தேஹ-மனோதிடத்திற் குன்றியவர்களும், சுகாதார விதிகளைக் கவனிக்காது அசுத்தமான ஆஹார-விஹார-தேஹங்களோடு அலக்ஷ்யமான அருவருக்கத்தகும் வாழ்க்கையில் உழல்பவரும் உலகத்திலுள்ள பிணிகளுக்கெல்லாம் தம் தேஹத்தைப் பதன்படுத்திக் கொள்பவராகவும், என்றைக்கும் நோய்வாய்ப்பட்டுத் தமக்கும் பிறருக்கும் பெரும் இன்னல்களை இழைப்பதற்கென்றே இவ்வுலகில் உயிர் வாழ்பவராகவும் இருந்து வருவர்.

முற்கூறிய வியாதி காரணங்களைப் பிரத்தியக்ஷங்கள் என்றும் பரோக்ஷங்களென்றும் இருவகையாகவும் பிரித்து வழங்குவதுண்டு. சாரீரவிகாரங்களையோ மாநஸிக விகாரங்களையோ உண்டுபண்ணுபவையான நாம் நேரில் பார்க்க அல்லது வேறுவகையில் உணரக்கூடிய எல்லா ஹேதுக்களையும் பிரத்தியக்ஷ காரணங்களாம்; பரோக்ஷ காரணங்களென்பவை நம் புலன்களுக்குப் புலப்படாமல் தேஹத்திற்காவது மனத்திற்காவது மாயமாகக் கோளாறுகளை விளைவிக்கும் ஹேதுக்களாம்; அவை தேஹ-மனோ நிலைமைகளில் விளைவிக்கும் விபரீத விகாரங்களைக்கொண்டே அவற்றை அநுமானத்தினல் அறிந்து கூறுகிறோம். நாம் நேரில் உணர வியலாவிட்டாலும், உடலிலோ உள்ளத்திலோ இயற்கைக்கு மாறான கார்யம் ஏதேனும்நிகழ்ந்தால், அதற்கு அவசியம் காரணமும் கர்த்தாவும் இருந்தாக வேண்டுமல்லவா?

(1) அடிதாக்குதல் வீழ்தல் முதலிய அபிகாத ஸம்பந்தமான காரணம், இரஸ-லோஹ:பாஷாணுதிகளின் ஸம்பந்தத்தினல் ஏற்படும் இரஸாயநப் பற்றுகளாலான காரணம்; உட்கொள்ளப்படும் உபாதை விளைவிக்கத்தகும் உணவு ரூபமான காரணம், மிதமிஞ்சிய தேஹமனோ உழைப்புகளாலாகும் காரணம், மலபந்த- மலப் போக்குகளாலாகும் காரணம், வெயில் காற்று-மழை-பனி முதலியவை தாக்குவதாலாகும் காரணம் ஆகிய இவை முதலியவற்றை தேஹ விகாரங்களுக்குப் பிரத்தியக்ஷ காரணங்களாகக் கூறுவோம். இந்த ஹேதுக்களால் தேஹத்திற்கு அல்லது மனத்திற்கு முதலில் கோளாறு ஏற்பட்டு, அப்பால், வாதாதி தோஷங்களும் விகாரமடைந்து வியாதி பூராவாக உற்பத்தியாகும்; அல்லது வாதாதி தோஷங்கள் முதலில் விகாரமடைந்து, அவற்றின் மூலமாய் பிறகு சாரீரக் கோளாறுகள் தோன்றி நோய் நன்கு உருக்கொள்ளும்.

(2) இடமாறுதலால் சில பிரக்ருதிகளுக்குப் பிரத்தியேகமாய் ஸம்பவிக்கும் கோளாறுகளுக்கு அந்தந்த இடத்தையே காரணமாகக் கூறுவதுண்டு; அவ்விடம் இதாருக்கு எவ்விதப் பாதையையும் விளைவிப்பதாயிராது; அவ்விதமே ஒருவித சரீரக் கூறுக்கே ஒரு வகையான அல்லது சில வகையான நோய்கள் நேரிடுவதுண்டு; அவ்வித நோய்கள் அருகிலிருந்த போதிலும் வேறெவருக்கும் ஏற்படுவதில்லை; இவ்விதமான வியாதிகளுக்கு ஹேதுவாயிருப்பவைகளை ஸ்தாநிக காரணங்கள் அல்லது நியத காரணங்கள் என்பர். இவற்றின் தன்மைக்கு நேர் மாருக ஒரே வியாதி உற்பத்தியான இடத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள மற்றப் பிரதேசங்களிலும் பெருமிதமாகப் பரவுந் தன்மையன; அவ்விதமே ஒருநபருக்கு உண்டானதும், அடுத்தாற்போல் அநேகம் பேருக்கும் ஏற்பட்டு அளவற்ற பிராணன்களைக் கொள்ளை கொள்ளும் அவ்வித வியாதி ஹேதுக்களை ஸர்வஸர காரணங்கள் அல்லது ஜநபதோத்வம்ஸ காரணங்கள் எனக் கூறுவது வழக்கம்; இவ்வகைக் காரணங்களால் உண்டாகும் வியாதிகளை வைத்திய சாஸ்திரம் ஸாங்க்ராமிகங்கள் என்றும், ஸாமானியமாகத் தமிழில் ஒட்டுவாரொட்டிகள் அல்லது தொற்று நோய்கள் என்றும் சொல்வது வழக்கம். (ஜநபதோத்வம்ஸம் என்கிற பெருவாரிக்கும், ஸாங்க்ராமிகம் என்கிற ஒட்டுவா ரொட்டிக்கும் பேதமுண்டு. அவ்வித விசேஷ வித்யாஸங்களையெல்லாம் இந்த நிருபத்தில் நான் விவரிக்க உத்தேசிக்கவில்லை.) இங்கே 'இடமாறுதலால்' என்று ஆரம்பித்துக் கூறிய இரண்டாம் பகுதியிலுள்ள காரணங்களும், அவை போன்ற வேறு பல காரணங்களும் பரோக்ஷ காரணங்களைச் சேர்ந்தவை.

இவ்வாறு வியாதிகளை விபாகம் செய்வதற்கான பொது விதிகளை விமர்சம் செய்து வியாதி நிதாநங்கள் என்னும் ரோக பரிசிலநத்திற்கான பொதுவான முறைகளை முனிவர்கள் முற்காலத்தில் நிர்ணயித்துத் தம் நூல்களிலும் நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர். முனிவர்களும், வாக்படர் முதலிய வேறு வைத்தியாசிரியர்களும் அவரவர்களுக்கு முக்கியமாகத் தோன்றிய வெவ்வேறு வியாதிகளை அவற்றின் காரண லக்ஷணுதிகளோடு அவரவரது கிரந்தங்களில் விவரித்துக் கூறியிருக்கிறார்கள். ஆனல், அம்முனிவர்களுடையவும், வாக்படாதி வைத்தியோத்தமர்களுடையவும் கிரந்தங்களில் தனித்தனியாகக் கூறியுள்ள வியாதி நிதாநாம்சங்களை முற்றிலும் திரட்டி, ஸகல ரோகங்களின் நிதாந-லக்ஷணுதிகளையும் விளங்க விவரிக்கக் கருதி, எட்டாம் நூற்றாண்டில் மாதவகரன் என்பவர் "மாதவநிதானம்" என்கிற வெகு சிறந்த கிரந்தம் இயற்றி வைத்திய உலகுக்கு ஒப்பற்ற உதவி செய்திருப்பதை நான் இங்கு வைத்தியர்களுடையவும் பிறருடையவும் உதவியைக் கருதிக் குறிப்பிடுகிறேன். வியாதி நிதாந விஷயமாய் வேறு பல உபயோகமான அம்சங்களைப் பொது ஜனங்களின் நோயற்ற வாழ்வுக்கு அநுகூலமான வகையில் மற்றொரு ஸமயம் தனிக் கட்டுரையாக எழுதுவேன். ஜனங்கள் நோயின்றி நிம்மதியாய் வாழ வியாதி நிதானஸம்பந்தான இப்பொது விதிகளை அறிந்திருப்பது அவசியமாகையால், வாசக நேயர்கள் இதைக் கருத்துடன் படிப்பாராக.

* * * *

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7அணு.

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O. Box 2186 Bombay.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனு பஜார் ரோட், மதராஸ்

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும்
தேவாமிருதம்
போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2
மின்சார ரசம்
கம்பெனி, (லிட்)
சேலம்,

ஹாஸ்யப்பகுதி

கூந்தல் சம்ரக்ஷிணி

——:[○]:——

"பார்த்தன்"

தெருக்கோடியில் ராமு ஆடியாடிக் கொண்டு வரும்பொழுதே, அவன் என்னை, ஏதோ ஆலோசனை கேட்கத்தான் வருகிறான் என்பது எனக்குப் புலனாகிவிட்டது. அவன் வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்து, சர்ப்பம் மூச்செறிவதுபோல் நாலுதரம் பெருமூச்சு விட்டதும், எனக்கு அவன் மனதில் ஒரு சுமை விசாரம் குடிகொண்டிருப்பது புலப்பட்டது. அவன் விசாரம் என்னவென்றறிய வெகு நாழிகை சென்றது. அதற்குள் அவன் என்னைத் தவிக்க விட்டது கொஞ்சமில்லை.

ராமு உட்கார்ந்த பிறகு நெடுநேரம் தன் தலையைத் தடவிக் கொண்டிருந்தான். வேஷ்டித் தலப்பால் சற்று நேரம் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டான். பிறகு என்னைப் பார்த்தான். தான் வந்த வழியே பார்த்தான். தலையை மறுபடி தடவிக் கொண்டான். கை தலையில் வழுக்கிச் சறுக்கி முதுகில் போய் விழுந்தது. இவ்வளவு பீடிகை போட்டுவிட்டு அவன் வாளாயிருந்ததும், சரி, இவன் நம்மிடம் ஏதோ 'கைமாத்து' வாங்க வந்திருக்கிறான் என்று நினைத்து, இல்லாத செலவுகள் அனேகம் மனதினுள் கற்பனை செய்துகொண்டிருந்தேன்.

"என்னடா சொல்லேன், என்ன விஷயம்? தீபாவளிக்கு சுந்தரம் பக்ஷணம் பண்ணிக் கொண்டிருக்கையில் உள்ளே போய்த் தொந்திரவு செய்து, கரண்டியால் அனுக்கிரகிக்கப் பட்டாயோ?" என்று நானே, சற்றுப் பொறுத்துக் கேட்டேன்.

"இல்லேடா இல்லே, ஆனால்... நீ கெட்டிக்காரப்பயல்! இந்தக் கலியாணம், எழவு, தொந்திரவு ஒன்றுமில்லாமல் எப்படித்தான் இவ்வளவு நாள் தப்பி வருகிறாயோ—" என்று சொல்லி ராமு மீண்டும் பெருமூச்சு விட்டான்.

சரி, லேவாதேவி விஷயமில்லை என்ற தைரியத்துடன் நான் குஷாலாகப்பேச ஆரம்பித்தேன். "என்னடா, ஒரு தீபாவளிப்புடவை வாங்க வேண்டிய பொறுப்பு, ஒரு நகையில்லை இந்த அல்ப விஷயங்களை நினைத்து, நீ கலியாணம் வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறாய் போலிருக்கிறது!" என்று நான் நகைத்தேன்.

"அட போடா, ஆயிரம் புடவை வாங்கலாம், பூலோகத்திலுள்ள தங்கமெல்லாம் உருக்கி எடுத்து நகை பண்ணலாம்..." என்று ஆவேசத்துடன் ஆரம்பித்தான் ராமு.

"அப்பா, கடைசியில் சேலை கட்டிய மாதரை என்று மட்டும் தூஷிக்காதே! சுந்தரம் நல்ல பெண். அவள் உன்னால் முடியாத காரியத்தைச் செய் என்று ஏவமாட்டாள்!" என்று நான் என் மருமானுக்குப் பரிந்து பேசினேன்.

"ஹூம்...உனக்கு என்ன தெரியும்? நீ தடிப்பிரும்மசாரி......சுகவாசி......நானும் என்ன என்னமோ நினைத்து ஆகாசக் கோட்டை கட்டி வந்தேன்! இப்பொழுது எனக்கு ஏன் கலியாணம் செய்துகொண்டேன் என்றிருக்கிறது..." என்றான் ராமு.

பின்னால் விஷயத்தை மெதுவாக அவனிடமிருந்து கிரகித்தேன். விஷயம் என்னமோ அல்ப விஷயம்தான். எல்லாக் கணவர்களும்ஆயுள் முழுவதும் தங்கள் மனைவிகளுடன் குடும்ப வாழ்க்கையில் படும் தொல்லைதான்!...சுந்தரம் தன் தலை மயிர் ஆலம் விழுதுபோல் செழித்து வளர ஏதாவது தைலம் வாங்கிக் கொடுக்கும் படி ராமுவைச் சென்ற பத்து மாதங்களாகத் தொந்திரவு செய்கிறாளாம். இதனால் ராமு மனமுடைந்து தவித்துப்போய் என்னிடம் ஆலோசனை கேட்க வந்தான். எனக்கிருந்த உலகானுபவத்தைக் கொண்டு நான் ராமுவிடம், "அடே, ராமு, இது ஒரு ஆயுஸூத்தொல்லை. வயசாக ஆக தலைமயிர் கொட்டித்தான் போகும். அதற்கேற்றபடி மனைவிகள் அதை வளர்க்கவும், நரையை அகற்றவும் உலகாரம்ப நாள் முதல் பாடுபட்டு வருகிறார்கள். இன்னும் உண்மையில் அதற்குத்தக்க மருந்து கண்டு பிடிக்கவில்லை. நீ அவளிடம் உண்மையைச் சொல்லிவிடு" என்றேன்.

"போடா, போ,......நான் அப்படிச் சொன்னால் பிரயோசனப்படாது!......அவளாக ஒரு ஆயிரம் தைலதினுசுகள் விசாரித்து வைத்திருக்கிறாள். சிலவற்றை ஒரு மாசம், சிலவற்றை ஒருவாரம் இப்படியாக உபயோகித்து வருகிறாள். ஆனால் இந்த ஒரு வருஷமாக அவள் புதுப்புது தினுசுத் தைலம் எப்படியோ தெரிந்துகொள்ளுகிறாள். "அடுத்த வீட்டுக்கு வந்த பெண் ஒரு தைலம் சொன்னாள், எங்க தம்பி மச்சினி ஒன்று சொன்னாள்" என்று என்னிடம் சொல்லி, மறுநாள் நான் அதை வாங்கி வாராமற்போனால் அவ்வளவுதான்......" என்று கண்ணில் நீர் ததும்பப் பேசினான் ராமு.

இனிமேல் அவனுக்கு ஏதாவது வழி சொல்லித்தானாக வேண்டும் என்று என் மனதில் பட்டது. நான், "ஏண்டா, நீ எப்பொழுது அவளைக் கலியாணம் செய்துகொண்டாயோ அப்புறம் அவள் அழகோ, அழகில்லையோ, உனக்குத்தானே எல்லாம். அவளுக்குத் தலைமயிர் ஆலம் விழுதுபோல் இல்லாமற்போனால் உனக்கு ஒன்றும் பாதகமில்லை என்று சொல்லேன்!" என்றேன்.

ராமு, "நான் அவளிடம் அப்படி நூறுதரம் சொல்லி விட்டேன். உன் தலைப் பின்னல் எலிவால் மாதிரி தொங்குவதை நான் கலியாணத்துக்கு முந்தியேதான் பார்த்திருக்கிறேனே! இப்போ என்ன வந்தது? என் ஆயுசு முடிகிறவரையில் உன்னைத்தான் கட்டிக்கொண்டு அழப்போகிறேனே!......என்று சொன்னேன். அவள் கேட்கிறதாக இல்லை. "நீங்கள் கலியாணப் பந்தலில் என்னையா கலியாணம் செய்துகொண்டீர்கள்? வெட்கக்கேடுதான்! ஆயிரம் ரூபாய்கள் வரதட்சிணையை எண்ணி எண்ணிப் பார்த்துக்கொண்டல்லவா ஹோமம் பண்ணினீர்கள்?... அது இருக்கட்டும் எலிவாலா?... ஹூஹூம்... எலிவாலா!" என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டு சண்டைக்கு வருகிறாள்!... ஒவ்வொரு வாரமும் ஒரு புதுத் தைலத்துக்கு ஆர்டர்!...சீ இதென்ன உலகம்!...

நான்:-ஐயோ பைத்தியமே. இதோ பார், உன் தலைதான் பாதிக்குமேல் கோழிமுட்டை மாதிரி இருக்கிறதே! அவளிடம் இதைக்காண்பித்து, "நான் என்ன இதற்காக உயிரை விட்டுவிட்டேனா?" என்று சொல்லிப்பார்......

ராமு:— அதுவும் சொல்லியாச்சு. பொம்மனாட்டிகளின் விதண்டாவாதம் உனக்குத் தெரியாது. அவள் "உங்களுக்கு இது அழகாய்க் குடுமி வைத்தாற் போலிருக்கிறது. தவிர அம்பட்டனுக்குக் காசு கொடுக்க வேண்டாம்!" என்கிறாள்.

நான்:—அவளுக்குத் தலைமயிர் கொட்டிப் போகிறது என்று யார் சொன்னது?

ராமு:—அந்த முட்டாளும் நான்தான். தினம் சோறு வைத்தால் அதில் ஒரு மயிர், கரி போட்டால் அதில் ஒரு மயிர் இருக்கும். "ஏன் இப்படி அஜாக்கிரதையாக

"அட போடா, ஆயிரம் புடவை வாங்கலாம். பூலோகத்திலுள்ள தங்கமெல்லாம் உருக்கி எடுத்து நகை பண்ணலாம்......" என்று ஆவேசத்துடன் ஆரம்பித்தான் ராமு.

இருக்கிறாய்?'' என்று கோபித்துக்கொண்டேன். 'நான் என்ன செய்கிறது? தலைமயிர் சாகு மாதிரி கொட்டுகிறது. இந்தக் குழாய்த் தண்ணீர் ஒத்துக் கொள்ளவில்லை!' என்று முதலில் தைலத்துக்கு ஆரம்பித்தாள்... இப்பொழுது நான் அப்படியே மயிர் அகப்பட்டாலும் "ஒன்றுமில்லை, நூல் ஏதோ விழுந்திருக்கிறது" என்று வரும் குமட்டலைக்கூட அடக்கிவிடுகிறேன்!

நான்:—ஒன்று சொல்லுகிறேன் கேள்! ஒரு புட்டி தேங்காய் எண்ணெயை வாங்கு. அதில் கொஞ்சம் சென்டைப் போடு. இதைக் காலை, மாலை தினம் பதினைந்து நிமிஷ நேரம் ஒரு நாள் தவறாமல் ஒரு வருஷகாலம் தலையில் தேய்த்துக்கொள் என்று சொல். ஒரு நாள் தப்பினாலும் சிகிச்சை கெட்டுப்போகும் என்று சொல்லு. இதுதான் பிரபல தைல வியாபாரிகள் சொல்லுவதும்!

ராமு:—ஏற்கனவே ஒரு தைலத்தை நாலுநாள் அப்படித் தேய்த்துக்கொண்டு மண்டையிடி, ஜுரம் என்று ஒரு மாதம் படுக்கையிலிருந்தாள். கொஞ்ச நஞ்சம் இருந்த தலைமயிரும் இந்த சிகிச்சையில் கொட்டிப் போய்விட்டது! நேற்று பம்பாயிலிருந்து ஐந்து ரூபாய்க்கு ஒரு புட்டி வரவழைத்திருக்கிறேன்........

நான்:—சீ, அதெல்லாம் வேண்டாம். எனக்கு இப்போதான் ஞாபகம் வந்தது நான் ஒரு தைலம் வாங்கிக் கொடுக்கிறேன். இந்தத் தைலம் உபயோகப்படுத்தினால் உடனுக்குடனே பலன் நாணலாம் என்று போட்டிருக்கிறது. ராத்திரி தூங்கப்போகு முன் உச்சந்தலையில் ஒரு சின்னக் கரண்டி தைலம் தடவ வேண்டியது. தலையணையைமட்டும் ஒன்றுக்கு மூன்றாய் போட்டுக்கொள்ள வேண்டுமாம். தலைமயிர் கீழே படர்ந்து வளர இடம் கொடுக்கவேண்டும். நல்ல பளபளப்புக் கொடுக்கும். தலை கனம் கூட வாங்கும் என்று விளம்பரம் செய்கிறார்கள்...நான் மருந்து வாங்கிக் கொடுத்ததாகச் சுந்தரத்தினிடம் சொல்லு''

என்று சொல்லி உடனே ராமுவைக் கடைத் தெருவுக்கு அழைத்துப்போய், "கூந்தல் சம்ரக்ஷணி" தைலம் ஒருபுட்டி வாங்கிக்கொடுத்தேன். ராமுவுக்குமட்டும் அவன் துர்ப்புத்தி அவனை விடவில்லை. அவன் வீட்டிற்குப் போகும்பொழுது "நீ பேசாமலிரு. நான் உன்னைப் பார்த்ததாகக்கூட உன் மருமாளிடம் சொல்லாதே! நீ நல்ல தைலம் வாங்கின பெருமை; எனக்கே இருக்கட்டும்!" என்று கூறிவிட்டுச் சென்றான். எனக்கு இதனால் ஏற்பட்ட மனத்தாங்கல் அசா ராமு வீட்டுப்பக்கமே போகவில்லை.

பத்துநாட்சென்றதும், நான் விடியற்காலை எழுந்து பல் குச்சியை எடுக்கப்போனேன். அந்த சமயத்தில் ராமு உள்ளே வந்தான்.

"அட என்னடா, உன் மருந்து..." என்று அவன் ஆத்திரத்துடன் வாயெடுத்தான்.

"போடா போ, நன்றி கெட்ட பயலே..." என்றேன் நான்.

"நீதான் அதை வாங்கிக் கொடுத்தாய் என்று நான் சுந்தரத்தினிடம் சொன்னேன். அவள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறாள். நீயே வந்து சொல்"

நான் ஆச்சரியத்துடன் ராமுவை உற்று நோக்கினேன். இனி அவன் நல்ல தைலத்தைத் தேடி அலையவேண்டிய பொறுப்பு அவனை விட்டது என்று அவன் முகக்களையினின்று தெரிந்தது.

"என்டா, பதறாதே சொல். நான் என்னமோ தெரிந்ததைச் சொன்னேன்." என்றேன் நான்.

"நீ சொன்னபடியே தான் எல்லாம்" என்றான் ராமு.

"நான் சொன்னபடியா? அது மூலிகை விசேஷம்!"

"அதன் குணகுணங்களைப் பற்றி நீயே அவளிடம் வந்து கேள். வாயேன்" என்று ராமு என்னைப் பிடித்திழுத்தான்.

பிறகு ஆர அமர விசாரித்ததில், விளம்பரத்தில் கூறியிருந்தது ஒன்றும் பொய்யாக வில்லை என்று தெரிந்தது. தைலத்தை நாலுநாள் உபயோகித்தாளாம். தலை மயிர் தலையணையின் கீழ் படர்ந்திருந்ததாம். மயிர் உதிர்ந்த இடங்களில் பளபளப்பு அதிகம் தெரிந்ததாம்! மூலிகை விசேஷத்தினாலோ, அல்லது மயிர் உதிர்ந்து போனதாலோ, அல்லது சுந்தரத்திற்கு இருந்த ஆத்திரத்தினாலோ, அவள் தலையில் கனமே இல்லை என்று ராமு மனதில் பட்டதாம்!

இதற்கப்புறம் ராமு என்னை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான்! சுந்தரத்தினிடம் போய் நான்தான் தைலம் வாங்கிக் கொடுத்தேன் என்று ஒப்புக் புக்கொள்ளும்படி! அந்த செய்நன்றி மறந்த பயலுக்கா நான் மேல்மேலும் உபகாரம் செய்யச் சம்மதிப்பேன்!

* * * *

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது.

எனவே உலகப் புகழ்பெற்ற **காமினியா ஆயில்** (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள ரூ. 2-10
வி. பி. சார்ஜ் தனி

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனை யூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும். ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

ஸ்ரீசுரா கஸ்தூரி கோரோஜன் மாத்திரை
"பாலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்

14, ஸச. அவுஸ், மாடுங்கா, பம்பாய்



விலை குறைவான ஃபால்ஸ் நகைகளை வாங்கி ஏமாறுகிர்கள்

நெருப்பிற்கும். திராவகத்திற்கும் உத்தரவாதமான நகை எது?

அதுதான் தியாகராஜ தங்க நகைகள்

எமது கம்பெனி நகைகள் அதிக நாட்கள் உழைக்கக் கூடியவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது அதிக நாட்கள் கஷ்டப்பட்டு நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய விதமான மெட்டல் தயார் செய்து கை தேர்ந்த வேலைக் காரர்களைக் கொண்டு நகைகளை தயார் செய்து இருக்கிறோம். ஒரு தரம் வாங்கி பார்த்தால்தான் எங்கள் உண்மை தெரியவரும். எமது நகைகள் கண்களைக் கவரும் அழகும் வேலைப்பாடும் உள்ளவை. பல பொருட் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசுபெற்றவை. தங்கத்திற்கு கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டவை. அதிக சில விலையில் எல்லோரும் அழகாய் அணிந்து கொள்ளத் தகுந்த உயர்தர நகைகளும் பலரகமான கல்மாலைகளும் நயமாய் கிடைக்கும்.

கேட்டலாக் இனம்.
கல்மாலை 1 பேட்டை ரூ. 5

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஜிவல்லரி ஒர்க்ஸ்,
77, சைனாபஜார் ரோட், மதராஸ்.

நம்பிக்கையான இடம்.

மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.

புத்துயிரும் கம்பீரமுமளிக்கும் இந்திய தேயிலை



நாம் நாட்பூராவும் சரீரத்தின் உருப்புகளைக் கொண்டோ மூளை சக்தியை பிரயோகித்தோ வேலை செய்வதினால் களைப்படைகிறோம். பக்குவமாய் செய்த இந்திய தேயிலைப் பானம் களைப்பைப் போக்கி புத்துயிரளித்து சரீரதிடத்தைக் கொடுக்கிறது. உண்மையாகவே இது ஒரு அலாதி பலத்தைக் கொடுக்கக் கூடியதே.

அதிகாலையில் இரண்டுகப் டீயை தவறாமல் சாப்பிடத் தீர்மானியுங்கள். இது உங்கள் சோர்வை நீக்கி சோம்பலைப் போக்கி நாள் முழுவதும் வேலை செய்வதற் கவசியமான தென்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். அதேமாதிரி மாலையிலும் இரண்டு கோப்பை அருந்தி பகல் உழைப்பால் ஏற்பட்ட சிரமம் நீங்கி மனோல்லாசமாக விருங்கள்.

தேத்தண்ணீர் தயாரிக்கும் முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்கவை. உலர்ந்த பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டு உடனே கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக்கொ

ஜீவ சக்தியும் கம்பீரமுமளிக்கும் இந்திய தேயிலை

IK. 18 n.

Regd. No. 2514

கொபெய்சான்
உங்களை கனேரியா என்னும்
வெள்ளை நோயிலிருந்து
விடுவிக்கும்

எத்தகைய கடுமையான கனேரியாவையும் தீர்க்க வல்லது கொபெய்சான்
ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் குணமடைந்திருக்கின்றனர்;
நீங்களும் குணம் பெற்று, சுகித்து வாழலாம்.

இரண்டு அளவுகளில் எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

15 மாத்திரைகள் புட்டி 1-க்கு ரூ. 1.   50 மாத்திரைகள் புட்டி 1-க்கு ரூ. 3.   (பாக்கிங் தபால் செலவு 6 அணு.)

சோல் எஜண்டுகள்
சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி
12, மன்னுரு தெரு, பார்க்டவுன் மதராஸ்

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—Editor C. R. Srinivasan, B.A.

இந்திய தேத்

தண்ணீரால்



தேக ஆரோக்கியத்தையும்

களங்கமற்ற மனதையும் காப்பாற்றுங்கள்

நாமெல்லோரும் நமது இஷ்டப்படி ஏதாவது ஒரு மகத்தான சக்தியை ஆராதிக்கின்றோம். ஏனென்றால், அவ்விதம் செய்வது நாம் சத்தியம் தவறாது இருக்கவும், நல்வழி நடக்கவும் உதவுகின்றது.

இவ்விதமே மூளைச் சக்தியாலும், தேக சக்தியாலும் வேலை செய்யவும், அனைவருக்கும் தங்களது ஜீவ சக்தியைப் போஷிக்க இந்தியத் தேயிலை உதவுகின்றது.

எப்படி ஒரு மஹத்தான சக்தியை ஆராதிக்கும்பொழுது மெய் மறந்து போகிறோமோ அதேமாதிரி இந்திய தேத் தண்ணீரை அருந்தியவுடன மனக்கவலையும், தேகக் களைப்பும் மறைந்து விடுகின்றன.

தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்தவுடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தயாவின் சந்தோஷமும், பெருமையும் — இந்திய தேயிலை

IK. 42.

Regd. No. 2514

குழந்தைகளின் உடல் மெலிவைப் போக்கி, அவைகளுக்கு வலுவும், புஷ்டியும் ஆரோக்கியமும்

அளித்து, அவைகளை நோய் நொடியில்லாமல் பாதுகாக்கக் கூடியது இதுவே

மாலர்ஸ் சூப்பர் - ஸ்ட்ரெங்த் காட் லிவர் ஆயில்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.



MOLLER'S

Super Strength **COD LIVER OIL**

மொத்த ஏஜண்டுகள்:

சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்,

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—Editor C. R. Srinivasan, B.A.